# போர்க்களம்

## 1

வெள்ளிக்கிழமை, மாலை நேரப் பூசைக்கான ஏற்பாடுகளை அம்மன் கோவில் குருக்கள் செய்து கொண்டிருந்தார். பெண் அடியார்கள் கோவிலின் உள்ப் பகுதியைக் கூட்டித் துப்பரவு செய்து கொண்டிருந்தனர். கோவிலின் தெற்குப் பக்கமாக நிற்கும் கூழா மரத்தைக் கன்னிப் பெண்கள் வலம் வந்து கொண்டிருந்தனர். நான்கு வீதிகளும் கூரையால் மூடப்பட்ட அந்த பிரமாண்டமான கோவில் மண்டபத்துள் சிறுவர்கள் மிகமிக அமைதியாக இருந்தனர். அதற்குக் காரணம் கோவில் தலைவர் தான். ஆள் சரியான கொதியன் என்று மக்கள் பேசிக் கொண்ட போதும் கோவிலை மிகவும் சிறப்பாக நிர்வகித்துக் கொண்டிருந்தார். உற்சவகாலமானாலும் சரி மற்றைய நாட்களானாலும் சரி ஒழுங்காகப் பூசைகள் நடைபெறும். சிறுவர்கள் முதற் கொண்டு வயோதிபர்கள் முதல் தலைவருக்குப் பயந்து நடுங்குவார்கள்.

கோவில் உதவியாளர் காண்டாமணியை அடிக்கும் போது சௌமியா கிணற்றடியில் காலைக் கழுவி விட்டுக் கோவிலின் உள்ளே நுழைந்தாள்.

அம்மன் கோவில். அதுகும் கண்ணகை அம்மன் கோவில் ஆதலால் ஏராளமான பெண்கள் வந்திருந்தனர்.

இலங்கையை ஆண்ட கஜபாகு மன்னன் அக்கோவிலைக் கட்டியதாக அவ்வூர் மக்களிடையே ஒரு பூர்வீகக் கதை உலா வருகிறது.

உண்மையிலேயே அக்கோவிலில் வீற்றிருக்கும் கண்ணகை அம்மன் மிகவும் சக்தி வாய்ந்தவள் என்பது அவ்வூர் மக்களின் நம்பிக்கை.

மிகவும் பிரமாண்டமான கோவில். உள்வீதிச் சுவர்களில் சிலப்பதிகாரக் காப்பியக்கதை சித்திரங்களாக வரையப்பட்டிருந்தது.

பெண்கள் குறிப்பாகக் கன்னிப் பெண்கள் தம் குறைகளை அம்மனிடம் கூறி நிவர்த்தி பெறுவதற்காக ஏராளமாக வருவார்கள்.

கோவிலைச் சுற்றி ஒரேபனங்காடு. கிட்டத்தட்ட இருநூறு பரப்பு நிலத்தில் பனைகள் காடாக வளர்ந்திருந்தன. வேம்பு, ஆல், அரசு, கூழா, வேங்கை போன்ற பலசாதி மரங்கள் ஆலயச் சூழலில் செழித்து வளர்ந்திருந்தன. பகலில் சூரியனின் கதிர்களை கோவிற் பிரதேசத்தில் காண முடியாது. பொழுதுபட்டால் மயான அமைதி. மிகவும் பயங்கரமாக இருக்கும். பொதுவாக பகல் பன்னிரண்டு மணிக்கும், பொழுதுபட்ட பின்பும் கோவிற் சூழலில் யாரும் உலாவுவதில்லை.

அதற்குக் காரணமாக கர்ணபரம்பரைக் கதை ஒன்று உள்ளது.

பல வருடங்களுக்கு முன்பு கோவிலுக்கு முன்பாக உள்ள பனை வெளியில் சிறுவர்கள் மாடு மேய்ப்பது வழக்கம். ஒரு நாள் பகல் பன்னிரண்டு மணிக்கு இரண்டு சிறுவர்கள் மாடு மேய்த்துக் கொண்டிருந்தார்களாம். அப்பொழுது கோவில் வாசலில் நின்ற வயோதிப மாது இவர்களைக் கைதட்டி அழைத்தாளாம்.

சென்ற சிறுவர்களிடம், ‘‘தலையில் ஒரே பேன். கடிதாங்க முடியவில்லை. பேனை எடுத்து விடுங்கோ’’ என்று கூறினாளாம்.

சிறுவர்கள் பேனை எடுப்பதற்காகத் தலை முடியைக் கையால் விரித்த போது தலை முழுவதும் பல கண்கள் இருந்தனவாம். பிள்ளைகள் பயத்தால் கத்திய போது கிழவி மறைந்து விட்டாளாம். கிழவியின் கையில் இருந்த தடி முழைத்து பெரிய விருட்சமாக இன்றும் கோவிலின் தெற்குப் பக்கத்தில் நிற்கிறது என்று அவ்வூர் மக்கள் அடிக்கடி கூறுவார்கள். அக்கூழா மரத்தைப் புனிதமான மரமாக அவ்வூர் மக்கள் கருகிறார்கள். அதில் அம்மன் வீற்றிருப்பதாகவும் அவர்கள் நம்புகின்றனர். கூழா மரத்தின் கீழ் நாகசர்ப்பத்தின் சிலை ஒன்று கருங் கல்லால் செதுக்கி வைக்கப்பட்டுள்ளது. அதற்குச் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் பாலால் அபிசேகம் செய்யப்படும். கோவில் மூலவிக்கிரகத்தை வணங்குவதைவிட கூழா விருட்சத்தையே மக்கள் விருப்புடன் வணங்குவார்கள். திங்கட்கிழமைகளில் கூழாவுக்குக் கீழ் பொங்கிப் படைப்பார்கள். கன்னிப் பெண்கள் நேர்த்திக் கடன் வைப்பதும் குங்கும அர்ச்சனை செய்வதும் அம்மரத்துக்குத்தான். அம்மரப் பொந்தொன்றில் வெள்ளை நாகமொன்று நீண்டகாலமாகக் குடியிருப்பதாகவும் மரத்தின் கீழ் குருக்கள் வைக்கும் பாலை ஆட்கள் இல்லாத நேரங்களில் வந்து குடித்து விட்டுச் செல்வதாகவும் மக்கள் கூறுவர். சிலர் தாம் அதைக் கண்டதாகவும், வெள்ளி அறுனாக்கொடி போல் உள்ளது என்றும் கூறுவர். சின்னாச்சி வாத்தியார் என்னும் மூதாட்டி வெகு காலமாகக் கோவிலில் தொண்டு செய்து வந்தார். அவர் கூட்டிக் குவிக்கும் குப்பைக்குள் அடிக்கடி அந்த வெள்ளை நாகம் வந்து சுருண்டு படுப்பதாகவும் அதை அவர் குப்பையோடு குப்பையாக அள்ளிக்

கடகத்தில் போடும் போது அது துள்ளிப் பாய்ந்து ஓடுவதாகவும் பழைய கதை ஒன்று உள்ளது.

சௌமியாவின் குடும்பத்தினருக்கு அவ்வாலயத்தின் மீது அதீத நம்பிக்கை இருந்தது. “அம்மன் நான் கேட்டதை ஒரு போதும் தராமல் விட்டதில்லை” என்று அடிக்கடி சௌமியாவின் அம்மா மனோன்மணி கூறுவாள்.

சௌமியாவும் அந்த நம்பிக்கையுடன் தான் கோவிலுக்கு வந்திருக்கிறாள். அம்மா சொல்வது போல அம்மனிடம் யாவற்றையும் கூறிவிட்டு செந்தில்வேல் குருக்களைக் கொண்டு ஒரு அர்ச்சனை செய்தால் எல்லாம் சரியாகி விடும் என்பது அவளது நம்பிக்கை.

திரைச்சேலை மெல்ல விலகியது. குருக்கள் அடுக்குத்தீபத்தை மிக நேர்த்தியாக அம்மனுக்குக் காட்டிக் கொண்டிருந்தார்.

“அம்மா.. தாயே.. என்னுடைய பிரச்சினைக்கு ஒரு முடிவைத்தா தாயே... நீ அன்றைக்குக் கோவலனைப் பிரிந்த நிலையிலைதான் நான் இருக்கிறன். என்னுடைய கணவனைப் பற்றிய செய்தி ஒன்றும் எனக்குத் தெரியாது... இந்த நிலையிலை எனக்குக் கல்யாணம் பேசுகிறார்கள்... நான் என்னம்மா செய்வது.... உன்னுடைய கணவன் கொலையுண்டதற்காக மதுரையையே எரித்தாயம்மா.... என்னுடைய நிலையும் அது போலவோ தெரியவில்லை.”

சௌமியாவின் இதயம் எரிமலையாகக் குமுறியது. அவளால் துயரத்தைத் தாங்க முடியவில்லை. கண்களால் கண்ணீர் கசிந்தது. மூலஸ்தானம் கும்மிருட்டாக இருந்தது.

“சௌமியா திருநீற்றைப் பிடியம்மா..” என்றார் குருக்கள்.

திடுக்கிட்டுச் சுயநினைவுக்கு வந்த சௌமியா குருக்களை நிமிர்ந்து பார்த்தபடி இடது கையின் மேல் வலது கையை வைத்து நீட்டினாள்.

சௌமியாவைப் பற்றிய முழுவிபரமும் குருக்களுக்கும், அவளுடைய தோழி கார்த்திகாயினிக்கும் மட்டும் தான் தெரியும். குருக்கள் சௌமியாவுக்கு திருநீற்றைக் கொடுத்து விட்டுச் சென்றார். உதவியாளர்கள் தீர்த்தம், சந்தனம், குங்குமம், பூ முதலியவற்றைக் கொடுத்தனர்.

அர்ச்சனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. வெள்ளிக் கிழமைகளில் அர்ச்சனை செய்வதற்கு மூன்று நான்கு மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டும்.

சௌமியா எதிலும் அவசரப்படுபவளல்ல. ஆறுதலாகச் செய்யலாமென்று நினைத்து மண்டபத்தில் அமர்ந்திருந்தாள். அப்போது அர்ச்சனை செய்து பிரசாதத்தை வாங்கிக் கொண்டு சௌமியாவின் அருகில் வந்து அமர்ந்த கார்த்திகாயினி, “உனக்கென்ன பக்கத்திலை வீடு ஆறுதலாய்ப் போகலாம். நான் இரண்டு மைல் போகவேணும்” என்றாள்.

சௌமியா பதிலேதும் சொல்லவில்லை. லேசாகச் சிரித்தாள்.

“என்ன சிரிக்கிறாய்..?”

“ஏன் சிரிக்கக் கூடாதா..”

“நல்லாச் சிரி..” என்றவள் சிறிது தாமதித்து விட்டுக் கனடாப் பிரச்சனை எந்தளவிலை இருக்குது? என்றாள்.

சிறிது நேரம் மௌனமாக இருந்த சௌமியா பின் சொன்னாள், “எல்லாம் கரைச்சலாய்த்தான் கிடக்கு. மாப்பிள்ளை என்னைச் செய்ய வேணுமெண்டு ஒற்றைக் காலிலை நிக்கிறாரெண்டு புறோக்கர் அம்மாவுக்குச் சொன்னபடி.... அம்மாவை புறோக்கர் வளைச்சுப் போட்டார். அதாலை ஒரே தொல்லை...”

“அப்பாவாலை பிரச்சனை இல்லையே..”

“அப்பாதான் வெளிநாட்டுக் கல்யாணஞ் செய்யிறேல்லை எண்டு சொல்லிக் கொண்டிருக்கிறார்... ஆனால் எனக்கு நம்பிக்கையில்லை... எங்கடை வீட்டிலை எதையும் தீர்மானிக்கிறது அம்மாதான். முதலிலை அப்பா சம்மதிக்கமாட்டார். பிறகு அம்மா வளைச்சுப் போடுவா.. அதுதான் பயமாய் இருக்கு.. ஒரே ஒரு பிள்ளை அதை வெளிநாட்டுக்கு அனுப்பேலாது எண்டு பிடிவாதமாய் அப்பா நிக்கிறார்.”

“நான் வந்து அப்பாவுக்கு உசார் குடுக்கட்டே..” என்று கேட்டாள் கார்த்திகாயினி.

“வந்து குடன்..”

“சௌமியா அர்ச்சனைத் தட்டைக் கொண்டுவாம்மா...” என்றார் குருக்கள்.

“நான் போட்டு வாறன் சௌமி. நாளைக்குக் காலமை வீட்டை வாறன்” என்று விடைபெற்றாள் கார்த்திகாயினி.

சௌமியா அர்ச்சனைத் தட்டைத் தூக்கிக் கொண்டு போய் குருக்களிடம் கொடுத்தாள். அதைப் பெற்றுக் கொண்ட குருக்கள் அவளைக் கனிவோடு பார்த்தார். ஓரிரு நிமிடங்கள் அவரின் மனதில் பிரளயம் நடைபெற்றது, ‘‘கவலைப்படாதை சௌமி. அம்மன் உனக்கு எந்தத் துன்பமும் வரவிடா..’’ என்றவாறு உள்ளே சென்றார்.

சௌமியாவின் குடும்பத்தினரோடு குருக்களின் குடும்பம் மிகவும் நெருக்கமாய் இருந்தது. தினமும் மாலை வேளைகளில் குருக்களின் பிள்ளைகளுக்குச் சௌமியா பாடம் சொல்லிக் கொடுப்பாள்.

திவாகரனுடன் சௌமியா கோவிலுக்கு வரும்போதெல்லாம் குருக்கள் அவர்களுக்குப் பல உதவிகள் செய்து கொடுத்திருக்கிறார். அத்துடன் கடந்த இரண்டு வருடங்களாக ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் சௌமியா வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி திவாகரனின் பெயரில் அர்ச்சனை செய்து வருகிறார்.

தனது மூத்த மகளாகவே சௌமியாவை நினைத்து அவளுக்கு புத்திமதிகள் கூறுவார். அதே போல குருக்களையும் தனது தந்தையைப் போலவே நினைத்து தனது கஷ்டங்களைக் கூறி ஆறுதலடைவாள் சௌமியா.

மிகவும் கரிசனையுடன் குங்கும அர்ச்சனை செய்த குருக்கள் அர்ச்சனைத் தட்டைக் கொண்டு வந்து சௌமியாவிடம் கொடுத்து விட்டு, ‘‘ஒன்றுக்கும் பயப்படாதையம்மா. உனக்காக நானும் தினமும் அம்மனிட்டை வேண்டிக் கொண்டுதான் இருக்கிறன்..’’ என்றார்.

அர்ச்சனைத் தட்டை குருக்களிடம் இருந்து பெற்றுக் கொண்டு கோவிலை விட்டு வெளியே வந்த போது.. “சௌமியா..” என்றபடி கல்யாணப் புறோக்கர் வந்தார். பின்னால் வாட்ட சாட்டமான ஓர் இளைஞன் வந்து கொண்டிருந்தான்.

## 2

கோவிலை விட்டு வெளியே வந்த சௌமியா கல்யாணப் புறோக்கரைக் கண்டதும் தடுமாறிப் போனாள், “கடவுளே.. இப்பத்தானே இந்தக் கரைச்சல் வேண்டாமென்று உன்னை வேண்டி விட்டு வந்தனான்...” மனம் குழம்பினாள் சௌமியா.

சௌமியா, “உன்னைப் பார்க்க வேண்டுமென்று மாப்பிளை துடியாத் துடித்தார். சொல்லாமல் கொள்ளாமல் மாப்பிள்ளையை வீட்டை கூட்டியாறது முறையில்லை... அது தான்... நீ ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அம்மன் கோவிலுக்கு வாறது எனக்குத் தெரியும். அதுதான் சுகமாகக் காட்டலாமெண்டு கூட்டியந்தனான்...” புறோக்கர் மூச்சு விடாமல் கூறினார்.

சௌமியாவுக்கு தர்ம சங்கடமாக இருந்தது. அத்துடன் என்ன செய்வது, எதைக் கதைப்பது என்று தோன்றவில்லை. தலையைக் குனிந்து கொண்டாள். அவளின் மனதுள் வெடி குண்டுகள் பல வெடித்துக் கொண்டிருந்தன.

“மாப்பிளைக்குக் கனடாவிலை சொந்தமாய் வீடிருக்கு, அங்கை அவர் ஒரு பெரிய புள்ளி.. எந்தக் கெட்ட பழக்கங்களும் இல்லை… தம்பியைச் செய்ய நீ குடுத்து வைச்சிருக்க வேணும்…” கல்யாணப் புறோக்கர் மாப்பிளையின் புராணம் பாடிக் கொண்டிருந்தார்.

சௌமியாவுக்கு எரிச்சலாக இருந்தது. அத்துடன் புறோக்கருக்கு அடிக்க வேண்டும் போல் ஆத்திரம் வந்தது. எல்லை மீறிய கனவுகளோடு மறைந்து விட்ட திவாகரனை நினைக்கத் துக்கம் துக்கமாக வந்தது.

அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. திடீரென்று கல்லாச் சமைந்து விட்ட உணர்வு.

“உம்முடைய அப்பாவின்ரை தங்கச்சியாற்ரை பெட்டையின்ரை சாமாத்தியச் சடங்குக் கசற்ரைக் கனடாவிலை பார்த்தவராம். அண்டைக்கே கல்யாணஞ் செய்தால் உன்னைத்தான் செய்யிற தெண்டு தீர்மானிச்சிட்டாராம்.. அதிஷ்டக்காரப் பொட்டை…”

தலையைக் குனிந்தபடி நின்ற சௌமியா மெதுவாகக் காலைத் தூக்கி வைத்தாள். மிதிவெடிகள் இருக்குமோ என்ற அச்சமேலீட்டை விட அதிகளவு அச்சம் அவள் மனதைக் குடைந்தது.

“சரி சரி நாங்கள் வாறம் பிள்ளை. தம்பி பிறகு என்னைக் குறை சொல்லக் கூடாது. வடிவாய் பொம்பிளையைப் பார். ஏதாவது கேக்க வேணுமெண்டாலும் கேள்..” என்றார் புறோக்கர்.

“சௌமியா..” என்று மெதுவாக அழைத்தான் துவாரகன்.

சௌமியா நிமிர்ந்து பார்க்கவில்லை. நிற்கவும் இல்லை. மெதுவாக நடந்து கொண்டிருந்தாள்.

“சௌமியா நான் அடுத்த மாசம் போகவேணும்.. அதுக்கிடையிலை” தடுமாறினான் துவாரகன்.

“அதுக்கிடையிலை கலியாணத்தை முடிச்சிட வேணும்… அப்படித்தானே” கல்யாணப் புறோக்கர் சிரித்தார்.

“நான் போயிட்டு வாறன் சௌமியா..”

சௌமியா பதிலேதும் கூறவில்லை. தலை குனிந்தபடி நடந்து கொண்டிருந்தாள்.

“சௌமியாவையும் கனடாப் பொம்பிளையெண்டே நினைச்சீட்டீர். இது அசல் கிராமத்துப் பொம்பிளை.. அன்னிய ஆடவனை நிமிர்ந்து பாராது.. அதோடை கந்தசாமி மாஸ்டர் எப்பிடி வளர்த்தவர் தெரியுமோ?”

“நாங்கள் வாறம்” என்ற துவாரகன் சௌமியாவின் பதிலை எதிர்பாராமல் நடந்து சென்று மகிழ மரத்தின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைச் ஸ்ராட் பண்ணினான். மறுகணம் அது கல்யாணப் புறோக்கரை ஏற்றிக் கொண்டு புறப்பட்டது.

அதன் பின் தான் நிமிர்ந்து பார்த்தாள் சௌமியா. மோட்டார் சைக்கில் பிரதான ஒழுங்கையால் சென்று பனங் கூடலூடாகச் செல்லும் ஒற்றையடிப் பாதையூடாகத் திரும்பியது.

அம்மன் கோவிலுக்கு முன்பாகப் பெரியதொரு குளம் இருக்கிறது. அதற்கு அம்மன் குளம் என்று பெயர். இருந்தாலும் அம்மன்

அக்குளத்தில் நீராடுவதில்லை. ஊர் மக்கள் தங்கள் கால் நடைகளை அக்குளத்தில் குளிப்பாட்டுவார்கள்.

குளத்தின் அருகே வந்ததும் அவளுக்கு திவாகரனின் நினைப்பு வரும்.

இரண்டு வருடங்களுக்கு முன் ஒரு வெள்ளிக் கிழமை பூசை முடிய சற்று நேரமாகி விட்டது. சௌமியா அர்ச்சனைத் தட்டுடன் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். திவாரகன் அம்மன் குளக்கரையில் நின்ற பனை மரத்தில் சைக்கிளைச் சாத்தி வைத்து விட்டுக் குளக்கட்டில் நின்றான்.

வண்டில்காரச் சண்முகம் தனது காளை மாடுகளை குளத்தில் குளிப்பாட்டிக் கொண்டிருந்தார். வேறு யாரும் அந்தப் பிரதேசத்தில் இல்லை.

இரண்டு மாதங்களாய்த் திவாரகனை அவள் சந்திக்கவில்லை. வெளிநாட்டில் உள்ள அவனது சகோதரன் ஒருவன் காலமானதால் தாயையும் கூட்டிக் கொண்டு கொழும்புக்குப் போயிருந்தான்.

அந்தக் காலத்தில் பாஸ் எடுத்து கிளாலிக் கடல் நீரேரி ஊடாக பயணம் செய்ய வேண்டும். ஒருவர் கொழும்புக்கு சென்று வருவதானால் இரண்டு மூன்று மாதங்கள் தேவை.

அவனைக் கண்டதும் அவளின் மனதில் புதிய பல இன்ப ஊற்றுக்கள் பிறந்தன. மகிழ்வுடன் மெதுவாக நடந்தாள்.

பிரதான ஒழுங்கையால் சென்று பனைகளுடாகச் செல்லும் ஒற்றை வழிப்பாதையால் தான் மக்கள் செல்வது வழக்கம். அவள்

ஒற்றையடிப்பாதையால் திரும்பத் திவாகரனும் சைக்கிளில் வந்து திரும்பினான்.

“எப்ப வந்தனீங்கள்..?”

“நேற்று இராத்திரி..”

“பயணங்களெல்லாம் எப்படி..?”

“பயணத்துக்கென்ன. உம்மைக் காணாமல் இருந்தது தான் கொடுமையாய் இருந்தது.. சௌமி.. பிரிவு என்பது எவ்வளவு கொடுமையானது…”

“எல்லாவற்றையும் அனுபவிக்கத்தானே வேணும்.. சரியாய் மெலிஞ்சு போனியள். ஏன் அங்கை சாப்பாடு இல்லையோ..” என முறுவலித்தாள் சௌமியா.

“சாப்பாடே ஒருத்தனைக் கொழுக்க வைக்கிறது. அன்பான ஒருத்திக்குப் பக்கத்திலை இருந்தால் சாப்பிடாவிட்டாலும் கொழுத்திடலாம்… உம்மைப் பார்க்காததாலை தான் மெலிஞ்சனான்.”

சௌமியாவுக்கு தர்மசங்கடமாக இருந்தது. எதைக் கதைத்தாலும் அவன் சுற்றி வளைத்துச் சௌமியாவைப் பற்றித்தான் கதைப்பான்.

“அண்ணான்ரை ‘பியூனறல்’ எங்கை நடந்தது..”

திவாகரன் சில கணங்கள் மௌனமாக நின்றான். சௌமியா அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவனது கண்கள் சிவந்து கலங்கியிருந்தன. அவனைப் பார்க்க சௌமியாவுக்கும் வேதனையாக இருந்தது.

திவாகரன் பொக்கற்றுக்குள்ளால் லேஞ்சியை எடுத்து தனது கண்களைத் துடைத்துவிட்டுச் சௌமியாவைப் பார்த்தான். அவளின் கன்னங்களினூடாகக் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

“இந்தாரும் கண்ணீரைத்துடையும், ஆரன் கண்டால் நான் அடிச்சுப் போட்டனென்டு நினைப்பினை..” சிரித்தான்.

சௌமியா அவனிடமிருந்து லேஞ்சியை வாங்கித் தனது கன்னங்களால் வடிந்த கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொடுத்தாள்.

“ஆகா இது புனித பொக்கிஷம்” என்று கூறியபடி லேஞ்சியை வாங்கி தனது கன்னங்களில் ஒத்தினான்.

சௌமியா எதுவும் பேசவில்லை. அவள் தன்னை முழுமையாக அவனிடம் கொடுத்து விட்டாள்.

“விசர் முத்திப்போச்சு.. கையோடை அங்கோடையிலை மருந்தும் எடுத்துக் கொண்டு வந்து இருக்கலாம்..” சிரித்தாள்.

“இது மாறாத விசர்.. சௌமீன்ரை..ம்..ம்..பட்டால் மாறும்” கண்ணடித்துச் சிரித்தான் திவாகரன்.

சௌமிக்கு வெட்கமாக இருந்தது. எதைக் கதைத்தாலும் அதைத் தன் மீது திருப்பி கேலி செய்து விடுவது அவனது இயல்பு.

வெற்றிப் பெருமிதத்தில் விசிலடித்தான் திவாகரன்.

“அண்ணை செத்த துக்கம் இருப்பதாய்த் தெரியல்லை. நான் கேட்டதுக்கு மறுமொழி கூடச் சொல்லேல்லை..”

“சொறி.. சௌமி..” என்றவன் சிறிது நேரம் மௌனமாக நின்று விட்டுக் கூறினான், “மாமா ஒருத்தர் கனடாவிலை இருக்கிறதாய் உமக்குச் சொன்னனான் தானே..”

“ம்”

“அவர் சுவிசுக்கு வந்து ஈமைக் கிரியைகளை முடிச்சிட்டு சாம்பலை அனுப்பினார். நாங்கள் கொழும்பிலை கிரியைகளைச் செய்தனாங்கள். இஞ்சை ஊரவைக்கும் ஐயருக்கும் தானம் குடுக்கவேணுமெண்டு அம்மா சொன்னவா.”

சிறிது நேரம் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. பின் சௌமியா சொன்னாள், “இப்ப உங்களுக்குத் துடக்கில்லைத்தானே. இந்தாருங்கோ அம்மன்ரை பிரசாதம்..” தட்டை நீட்டினாள்.

“கண்ணகி அம்மன்ரையோ.. என்ரை சௌமி அம்மன்ரையோ..” என்றவாறு திருநீற்றுச்சரையை எடுத்தான் திவாகரன்.

திருநீற்றைப் பூசிவிட்டு சந்தனப் பொட்டை வைத்த திவாகரன் குங்குமச் சரையைக் கையில் எடுத்து விரலால் சிறிதளவை எடுத்து தனது நெற்றியில் இட்டு விட்டு சுற்றிவரப் பார்த்தான். கண்ணுக் கெட்டிய தூரம் வரை யாரும் இல்லை. திடீரென்று அவன் தனது கையில் இருந்த குங்குமத்தைச் சௌமியாவின் நெற்றியில் வைத்தான்.

சௌமியா இதை எதிர்பார்க்கவில்லை. திகைத்து திகிலடைந்து போனாள். “ஏய்..ஏய்..திவா…யூ ஆர் டேட்டி..” தடுமாறினாள் சௌமியா.

“கோபிக்கிறீரா என்னால உம்மைப் பிரிந்திருக்க ஏலாது. நான் செய்தது குற்றம் என்றால்.. சைக்கிளிலை ஏறும் வீட்டைக் கூட்டிக் கொண்டு போறன்.”

சௌமியா சுயநிலையடையச் சில கணங்கள் பிடித்தன.

“திவா.. நீங்கள் அவசரப்பட்டுட்டியள்.. திருமணத்திற்குப் பிறகுதான் கணவன் மனைவியைத் தொடலாம், பொட்டு வைக்கலாம்.. நீங்கள் அடிக்கடி ஒவ்வொரு சாட்டாய் என்னைத் தொடுறியள்.. அப்படிச் செய்ய வேண்டாமெண்டு நான் எத்தனை தரம் சொன்னனான். உங்களை நான் தீவிரமாய் நேசிக்கிறேன்.. உயிராக நினைக்கிறன்.. அளவுக்கதிகமான நம்பிக்கை வைச்சிருக்கிறன். ஆனால்” சீறினாள் சௌமியா.

“திருமணம் என்கிறது என்ன? இரண்டு மனங்கள் கலக்கிறது தானே.. அது எப்பவோ கலந்திட்டுது.”

“என்றாலும் மரபுகள், சம்பிரதாயங்கள் இருக்கு.. நம்முடைய முன்னோர் எல்லாவற்றையும் அர்த்தத்தோடை தான் செய்து வைத்திருக்கினை. அதை என்னாலை மீறேலாது… இவ்வளவு காலமாய் என்னோடை பழகுறியள் என்னைப் புரிஞ்சு கொள்ளுறியள் இல்லையே…”

“சொறி சௌமி.. அழிச்சு விடட்டா..?”

“ஏன் பெரிய வார்த்தைகளெல்லாம் பாவிக்கிறீர்..”

இனிமேல் நான் அப்பிடி நடக்கமாட்டேன். அம்மன் மேலை சத்தியம்…” அவனது குரல் தளுதளுத்தது.

உருகிப் போனாள் சௌமியா.

“சரி சரி.. என்னைப் பற்றி உங்களுக்குத் தெரியும் தானே.. எனக்கெண்டு சில கொள்கைகள் இருக்கு அதை என்னாலை மீற முடியேல்லை.. தயவு செய்து என்னை அனுசரித்துப் போங்கோ..”

“சௌமியாக்கா.. விலத்துங்கோ.. விலத்துங்கோ.. பெல் இல்லை..” சத்தமிட்டபடி சைக்கிலில் பையன் ஒருவன் வந்து கொண்டிருந்தான்.

திடுக்கிட்டுப் பரபரப்படைந்த சௌமியா அவசர அவசரமாக ஒற்றையடிப் பாதையை விட்டு அரக்கினாள்.

அந்தச் சம்பவத்தை நினைக்க உடலெல்லாம் சிலிர்த்தது, “திவா… திவா… நீங்கள் எங்கை இருக்கிறியள்..? இரண்டு மாசமே பிரிந்திருக்க முடியாமல் அவஸ்தைப்பட்டனீங்கள். இப்ப இரண்டு வருடமாய் எப்படிப் பிரிஞ்சிருக்கிறியள்.. இருக்கிறியளா.. இல்லை.. ஐயோ நினைக்கவே முடியவில்லை..” மெதுவாக நடந்து சென்றாள். ஆளை ஆள் தெரியாத இருட்டு. வழமை போல் இப்பாதையால் வந்து விட்டாள். ஆனால் இரண்டு வருடங்களாக ஆயுதப் படையினர் அங்கு உலாவுகின்றனர்.

சௌமியா எண்ணங்களை மறந்து விரைவாக நடந்தாள். வீட்டுக்குச் சிறிது தூரத்தில் யாரோ நிற்பது போல் தெரிந்தது.

அவள் அவ்வுருவத்தைக் கடந்து சென்ற போது, “சௌமி..” என்று அழைப்பது கேட்டது.

குரலிலிருந்து அழைத்தது துவாரகன் என்று அவளுக்குப் புரிந்தது. அவள் மௌனமாக வீட்டுக்குள் சென்ற போது கல்யாணப் புறோக்கர்

ஹோலில் இருந்து அட்டகாசமாகச் சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தார்.

## 3

இரவு கரைந்து கொண்டிருந்தது. யாழ்ப்பாண வானொலி தன்சேவையை முடித்து உறங்க ஆரம்பித்து நிமிடங்கள் பல சென்றுவிட்டன.

பொழுதுபோக்குகள் இல்லை. மின்சாரம் இல்லை. பிராந்தியமே இருளில் மூழ்கி விட்டது. கந்தசாமி மாஸ்ரரின் வீட்டுக் ஹோலில் மட்டும் மண்ணெண்ணை லாம்பு மினுங்கிக் கொண்டிருந்தது.

இரவின் நிசப்தம், கொடூரமான அமைதி. எண்ணங்களுடன் கட்டிலில் புரண்டாள் சௌமியா. வழக்கமாகச் செய்தி முடிந்ததும் நித்திரையாகி விடும் அப்பாவும், அம்மாவும் கதைத்துக் கொண்டிருந்தனர்.

“நல்ல இடம், நல்ல பையன். இப்படிப்பட்ட சம்பந்தம் கிடைக்க குடுத்து வைத்திருக்க வேண்டும்” என்றாள் மனோன்மணி.

“எனக்கெண்டால் விருப்பமில்லை. இருக்கிறது ஒரே பிள்ளை. எவ்வளவு சொத்து இருக்கு.. நானும் பத்தாயிரம் ரூபாமட்டிலை பென்சன் எடுக்கிறன்… ஊருக்கை ஒரு மாப்பிளை பார்க்கிறது தான் நல்லது.”

“உங்கை வெளிநாடுகளிலை செய்து போட்டு சனம் படுகிறபாட்டை நீர் பார்க்கிறீர் தானே.. பிள்ளைகளைப் பெற்று கஷ்ரப்பட்டு வளர்க்கிறது பிற்காலத்திலை பெற்றோரின் கஷ்ர நஷ்ரங்களைப் பார்க்குமெண்டு.. சின்னத்தம்பியரைப்பார் அஞ்சு பிள்ளைகள் ஒவ்வொண்டும் ஒவ்வொரு நாட்டிலை.. மனிசியும் செத்துப் போச்சு. காசிருக்கு, பொருளிருக்கு, காணி பூமிகளெல்லாம் இருக்கு அந்நாள் விழுந்து கால் முறிஞ்சு கிணத்தடியிலை கிடக்கேக்கை ஆர் பார்த்தவை.. வளவுக்கை கள்ளுச் சீவ வந்தவன் கண்டுதான் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனது.”

“நான் போன கிழமை சின்னத்தம்பியின்ரை தமையன்ரை மோனைக் கண்டு பேசினனான். அதுக்கு அவன் சொல்லுறான், “வாத்தியார் எனக்கு அஞ்சு பிள்ளையள். அஞ்சும் அஞ்சு பள்ளிக் கூடத்திலை படிக்குதுகள். மூத்தவன் யாழ்ப்பாணத்திலை படிக்கிறான். எட்டும் எட்டும் பதினாறு மைல் சைக்கிள் ஓடமுடியுமா..? நான் தான் கொண்டு போய்விடுறது. அதைவிட நான் வேலைக்குப் போகவேணும். இதைவிட அம்மா, அப்பா.. நான் என்ன செய்யிறது. பெத்த அஞ்சையும் வெளியிலே அனுப்பிட்டார். ஒண்டில் ஒண்டையெண்டாலும் கூப்பிடவேணும் இல்லாட்டித் தான் போகவேணும்” என்றான். அவன் சொல்லுறத்திலேயும் நியாயம் இருக்கு.”

“ஊருக்கை உங்க ஆரப்பா இருக்கினை. சரி இருந்தாலும் ஆரையன் பேசிச் செய்திருக்கலாம் தானே, சண்முகத்தாற்ரை ரவியைக் கேட்டுப்பார்க்கலாம். அவனுக்குக் கீழே அஞ்சு பொம்பிள்ளைப் பிள்ளையள் இருக்கு. அதோடை குடியிருக்கிறதும் பரமற்றை காணி.”

“நான் புறோக்கர்மாரிட்டைச் சொல்லியிருக்கிறேன். அவசரப்பட்டாப் போலை முடியுமே. உங்கை வெளிநாட்டுக்குப் போனவையெல்லாரும் கப்பலோடேல்லை. அதோடை இஞ்சை சீவிக்கிறவை எல்லோரும் பிச்சையும் எடுக்கேல்லை..” சீறினார் கந்தசாமி.

“எப்பவும் நீங்கள் முன்னுக்குக் கோபப்படுறது தான்.. எப்பிடி பள்ளிக்கூடத்திலை இருபத்தைஞ்சு முப்பது வாத்திமாரைச் சமாளிச்சியள்…” சிரித்தாள் மனோன்மணி. மனோன்மணி தன் காரியம் பார்ப்பதில் கெட்டிக்காரி.

“பெடியன் இவளைத் தான் செய்யப்போறனெண்டு அடம்பிடிக்கிறானாம்… அவன்ரை தாய் தகப்பனெல்லாம் அங்கைதான்.. பிள்ளையை விட்டுப் பிரியேலாதெண்டால் எங்கள் இரண்டு பேரையும் அங்க வரட்டாம்…”

“ஆர் சொன்னது..”

“புறோக்கர் தான். அதோடை இண்டைக்கு நான் சந்திரா ரீச்சரைப் பார்க்க யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குப் போனனானெல்லே..” நிறுத்தினாள் மனோன்மணி.

சிறிது நேர மௌனம். சௌமியா உசாரானாள்.

“சொல்லும்..”

“போனனான் கையோடை உங்கடை அண்ணையோடை கதைப்பமெண்டு..” மனோன்மணி வார்த்தையை முடிக்கு முன் கந்தசாமி குறுக்கிட்டார்.

“கதைச்சனீரே..”

“ஒரு நிமிசக் ‘கோல்’ எடுத்தனான்.. பிறகு அவை எடுத்தவை..”

“என்னவாம்”

“துவாரகனைப் பற்றித் தான் கேட்டனான். இரண்டு வருசமாய் துவாரகன் தங்களைக் கேட்டபடியாம். எங்களுக்கும் கடிதம் எழுதினவை தானே, நீங்கள் அதைப் பற்றி ஒன்றும் எழுதேல்லை எண்டு குறைப்பட்டினை, நான் அவருக்கு ஊருக்கை செய்யத் தான் விருப்பமெண்டு சொன்னன்..”

“அதுக்கு அவை என்ன சொன்னவை”

“உங்கடை அண்ணை தான் சொன்னார். உங்களைத் திருத்தேலாதெண்டு. கெட்டுப்போறன் பந்தயம் பிடிஎண்டு நிக்கிறவையைத் திருத்த முடியுமோ.. எல்லாரும் உந்தமயமான பூமியிலை இருந்து வெளியேறி விடவேண்டுமெண்டு துடியாய்த் துடிக்கிறாங்கள். இவரென்னவெண்டால் வாற சீதேவியைக் காலால உதைக்கிறார்” என்றார்.

கந்தசாமிக்கு ஊரை விட்டுப்போக விருப்பமில்லை. இருபது வருசத்திற்கு முந்தி சனமெல்லாம் போட்டி போட்டுக் கொண்டு வெளிநாடுகளுக்குப் போகும் போது அந்த எண்ணமே இல்லாமல் இருந்தவர் அவர்.

“மாப்பிள்ளை நல்ல பிள்ளையாம். தங்களுக்கு பத்து வருசமாய் அவரைத் தெரியுமாம். செய்யுங்கோ. கட்டாயம் செய்யுங்கோ.. அப்பிடி

அவர் கேட்காட்டில் என்னோடை ரெலிபோனில் கதைக்கச் சொல்லுங்கோ'' என்றார்.

''அவளைப் பிரிஞ்சு இருக்கிறத்தை நினைக்கத் தான்..'' அவரின் குரல் கரகரத்தது. கண்களில் நீர் துளிர்த்தது.

''மாப்பிள்ளைக்குப் பெரிய வீடு இருக்காம் எங்களையும் கூட வரச் சொன்னார்…'' ''அவையின்ரை செலவிலை நாங்கள் சீவிக்க முடியுமே..''

''உங்கடை அண்ணருக்கு உதெல்லாம் தெரியும். அதாலை உங்களைவ ந்து தன்னோடை இருக்கட்டாம்..''

''எதுக்கும் கொஞ்சம் நான் யோசிக்க வேணும்..''

மனோன்மணிக்கு உள்@ர மகிழ்ச்சியாக இருந்தது. அவருடன் வாழ்ந்த முப்பது வருடத்துள் அவரை முழுமையாகப் புரிந்து வைத்திருந்தாள். மாட்டன் என்று விடாப்பிடியாக இருந்தவர் கொஞ்சம் யோசிக்க வேணும் என்று படியிறங்கி விட்டார். இன்னும் இரண்டு மூன்று நாட்களில் வழிக்கு வந்து விடுவாரென நினைத்து விளக்கை அணைத்தாள்.

சௌமியாவுக்குத் தலையில் இடி விழுந்ததைப் போலிருந்தது! அப்பா சிறிது தளர்ந்து விட்டார் இனி அம்மாவின் இராச்சியம் தான்.. தலையணையைக் கட்டிப் பிடித்தபடி விம்மி அழுதாள்.

அவயங்கள் மரத்து செயலிழந்த நிலை. அடுத்து என்ன செய்யலாமெண்டு யோசிக்கக்கூட அவளால் முடியவில்லை. அந்த

நாளில் அவனை வெறுத்து ஒதுக்கியிருக்கலாம். அந்த நினைவுகள் மனதில் நிழலாடின.

அவள் கச்சேரியில் கிளார்காக கடமையேற்று ஒரு மாதம் கூடக் கழிந்திருக்க மாட்டாது.

வேலை முடிந்து மாலை நேரம் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள். கச்சேரி நல்லூர் வீதியில் அவள் வந்து கொண்டிருந்த போது திடீரென்று புக்காரா போர் விமானங்கள் வரும் பேரிரைச்சல் கேட்டது.

சௌமியாவுக்கு விமானங்களெண்டால் பயங்கரப் பயம். சில வேளைகளில் சுயநினைவையே இழந்து விடுவாள்.

பயம் நெஞ்சை உலுக்கியது. அடுத்து என்ன செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவளுக்குத் தோன்றவில்லை.

வீதியில் மக்களும் வாகனங்களும் அசுர வேகத்தில் கண்டபடி ஓடிக் கொண்டிருந்தன. முன்னால் வேகமாக வந்த ஸ்கூட்டர் ஒன்று சௌமியாவின் சைக்கிளை மோதித்தள்ளிவிட்டுக் காற்றாய்ப் பறந்தது.

வீதியில் விழுந்த சௌமியா ஆகாயத்தைப் பார்த்தாள். மூன்று புக்காரா விமானங்கள் பலாலியை நோக்கிச் சென்று கொண்டிருந்தன, ''அவன் குண்டு போடமாட்டான்.. எழும்புங்கோ..'' வாட்டசாட்டமான இளைஞன் ஒருவன் சௌமியாவுக்கு அருகில் நின்றான்.

மெதுவாக எழும்பிய சௌமியா சைக்கிளைத் தூக்கினாள்.

“விடுங்கோ நான் தூக்கிறன்.. அட உங்கட முழங்கையிலை இரத்தம் வருது..” என்றவன் தனது பொக்கற்றில் இருந்த லேஞ்சியை எடுத்தான். அதற்குமுன் சௌமியா தனது லேஞ்சியால் காயத்தில் இருந்து வடிந்த இரத்தத்தைத் துடைத்தாள்.

“பெரிய காயம் போலை கிடக்கு. லேஞ்சியைத் தாருங்கோ கட்டி விடுறன்” என்றவன் அவளின் பதிலை எதிர்பாராது அவளின் கையில் இருந்த லேஞ்சியைப் பறித்து அவளின் கையைச் சுற்றிக் கட்டினான்.

சௌமியாவுக்கு அவனின் செயல் பிடிக்கவில்லை. என்றாலும் அவளால் எதுவும் பேசமுடியவில்லை.

கைக்குக் கட்டுப்போட்டு விட்டு சௌமியாவின் சைக்கிளைத் தூக்கியவன்.. ,“றிம் நெளிஞ்சு போச்சு.. உருட்ட முடியாது..” என்றான்.

சௌமியா என்ன செய்வதென்று அறியாது திகைத்துப் போய் நின்றாள்.

அவளின் நிலையை உணர்ந்த அவன், “பயப்படாதைங்கோ. பக்கத்திலைதான் எங்கடை வீடிருக்கு. வாருங்கோ. தங்கச்சின்ரை பைக்கைத் தாறன். நீங்கள் வீட்டை போங்கோ. நான் உங்கடை சைக்கிளைத் திருத்தி வைக்கிறன். நாளைக்கு வந்து எடுங்கோ..”

சௌமியா சில கணம் மௌனியானாள். பல சிந்தனைகள் அவளை வட்டமிட்டன.

நீங்கள் பயப்படத் தேவையில்லை, “உங்களை எனக்குத் தெரியும். உங்கடை பெயர் சௌமியா தானே.. நீங்கள் கந்தசாமி மாஸ்ரற்ரை மகளல்லே..”

சௌமியா நிமிர்ந்து அவனின் முகத்தை ஆச்சரியத்துடன் பார்த்தாள். இவையெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியுமென அவள் விழிகள் அகன்று விரிந்து கேட்டன, “ஒரு வேளை அப்பா விடம் படிச்சிருப்பாரோ.. கண்ட முகமாகத் தெரியவில்லை.”

அவன் சிரித்தான். மிகவும் கவர்ச்சியான சிரிப்பு. கன்னங்களில் குழி விழுந்தன. அழகான பல் வரிசை, எடுப்பான குறுந்தாடி. கழுத்தில் மைனர்ச்செயின். மிடுக்கான தோற்றம். வசீகரமான அந்த மாயச் சிரிப்புஅவளைச் சற்றுக்கிறங்கச் செய்தது.

“இதெல்லாம் எப்படி உங்களுக்குத் தெரியும்?”

“எப்படியோ தெரியும்.. பெரிசாய் இதைப் பற்றி யோசிக்காதையுங்கோ.. வாங்கோ..”

சௌமியா அவனின் பின்னால் சென்றாள். வீதியின் அருகிலேயே வீடு இருந்தது. மிகவும் பெரிய வீடு. முற்றத்தில் மஞ்சள், நீலம், கருஞ்சிவப்பு நிறச்செம்பரத்தைகள் பூத்திருந்தன. அதைவிடப் பல வர்ணப் பூக்கள் மலர்ந்திருந்தன. அழகான குறோட்டன்கள் வரிசையாக நின்றன. போட்டிக் கோவுக்குக் கீழ் பெரியதொரு தொட்டியில் அழகான பல வர்ண மீன்கள் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன.

சௌமியா அவற்றை ரசித்துப் பார்த்தாள். அவளுக்குப் பூக்கன்றுகள் என்றால் உயிர். தன்னிடமில்லாத பல வர்ணச் செம்பரத்தைகள் அங்கு பூத்து நின்று அவளின் மனதைக் கவர்ந்தன.

“அம்மா.. அம்மா..” என்று அழைத்தபடி உள்ளே சென்றான். யாரையும் காணவில்லை. திரும்பி வந்து, “அம்மாவையும் தங்கச்சியையும் காணேல்லை… கொஞ்ச நேரம் இருந்தியளெண்டால்..” இழுத்தான்.

“சைக்கிள் றிம் எட்டுப் போல் வளைந்திருந்தது. அதை உருட்டக் கூட முடியாது. இந்த நிலையில் என்ன செய்யலாம்” என்று யோசித்தாள்.

“பயப்பிடாதையுங்கோ.. தங்கச்சி வந்திடுவாள்…” என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவனது தங்கை சைக்கிளில் உள்ளே வந்தாள்.

“இவா சௌமியா.. எனக்குத் தெரிந்த மாஸ்ரற்றை மகள். கச்சேரியிலை வேலை செய்யிறா.. சைக்கிளை ஸ்கூட்டர் இடிச்சுப் போட்டுது. உன்ரை சைக்கிளைக் குடுத்து விடு” என்றான்.

“மெய்யே, இதைப் பற்றி சௌமியாவைக் கேக்க வேண்டாமே” கந்தசாமியின் குரல் சௌமியாவை உலுக்கியது. அவள் நினைவுகளில் இருந்து விடுபட்ட போது அவளின் செவிகளை ஊடறுத்த வார்த்தைகள் அவளை நிலை குலையச் செய்தது.

# 4

யாழ்ப்பாண சமூக அமைப்பின் மீது அவளுக்கு வெறுப்பு வெறுப்பாய் வந்தது. யாழ்ப்பாணப் பெற்றோர் எந்த விடயத்திலென்றாலும் சரி, பிள்ளைகளின் விருப்பத்தைக் கேட்பதே இல்லை. வாழ்வுப் பிரச்சினையெண்டாலென்ன, வாழ்வை வளம்படுத்தும் கல்விப் பிரச்சினையெண்டாலென்ன தங்களின் விருப்பத்தைத் தான் நிறைவேற்றவார்கள்.

முன்பு அவள் ஓ.எல் பாஸ்பண்ணி ஏ.எல்லுக்கு வந்த போது மற்ஸ் படிக்கவே விரும்பினாள். ஆனால் அம்மாவும் அப்பாவும் சயனஸ் படிக்கச் சொல்லி வற்புறுத்தி சயன்ஸ் வகுப்பிலும் சேர்த்து விட்டனர். அதனால் அவள் யூனிவசிற்றிக்குப் போக முடியாமல் போயிற்றுது. அவளிலும் பார்க்க மற்சுக்கு மார்க்ஸ் குறைவாக எடுக்கும் கிருத்திகா, ரவீந்திரன் போன்றோர் என்ஜினியரிங் செய்கிறார்கள். அதை நினைக்க சௌமியாவுக்கு கவலைதான். என்ன செய்வது…? அவளால் என்ன செய்ய முடியும்? கல்வி குழம்பியது போல் வாழ்வும் குழம்பப்போகிறதா..?

“அவள் நாங்கள் சொல்லுறத்தைத் தானே செயப்பவள். அந்த வார்த்தை அவளை நிலை குலையச் செய்தது.”

“சீ… காசு பணம் தானா வாழ்க்கை. மனதைத்தான் தெரிந்து கொள்ளாவிட்டாலும் வெளித்தோற்றத்தையாவது பார்த்து முடிவெடுக்கிற உரிமை பெண்களுக்கு இல்லையா..?

“கலியாணம் கட்டுறவள் அவள். அவளையும் ஒரு வார்த்தை கேட்கிறது நல்லது..” என்றார் கந்தசாமி.

“நாங்கள் அவளுக்கு கெட்டதையா செய்யப் போறம். அதோடை அவள் சின்னப் பிள்ளை.. நாங்கள் சொல்லுறத்தைக் கேட்பாள். ஆரையன் காதலிச்சு அப்பிடி இப்பிடி இருந்தால் தான் பிரச்சினை. ஆனால் அப்படி ஒன்றும் இல்லையே?” என்றாள் மனோன்மணி.

மனோன்மணி தேவைக்கேற்றமாதிரிக் கதைப்பதிலும் வல்லவள் என்பது சௌமியாவுக்குத் தெரியும். தலைக்கு மேலை வெள்ளம் வந்து விட்டது. இனி என்ன செய்யலாம்? சௌமியாவுக்குப் புரியவில்லை.

“சௌமியாவைப் போல ஒரு ஒழுக்கமான பிள்ளை இந்த ஊரிலை இருக்கே. அவள் காதல் கீதல் எண்டு அலைபவள் என்று நினைக்கிறியளே..”

கந்தசாமி சிறிது நேரம் எதுவும் பேசவில்லை. பின்சொன்னார், “வெளிநாட்டுச்சம்மந்தம் அவளுக்குப் பிடிக்குதோ..”

“முன்னுக்கு உங்கடை விருப்பத்தைச் சொல்லுங்கோ பிறகு அவளைக் கேட்பம்.”

“சரிசரிபடும்… காலமை கதைப்பம்..”

‘என்னிலை பெற்றோர் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.. ஆனால் நான் தவறிவிட்டேனோ..? ஒரு பெண் தனக்கு விரும்பிய ஒருவரைக் காதலிக்கிறது இயல்புதானே? அது ஒழுக்கக்கேடா.?’

“திவா.. எவ்வளவு நல்லவர். என்னிலை எவ்வளவு அன்பு வைத்திருந்தவர். எனக்காக எதையும் செய்யச் சித்தமாயிருந்தாரே.. அவரை மறக்க முடியுமா..?”

திவாகரனின் நினைவுகள் அவளை ஆட்கொண்டன. “அவர் என்னைச் சுற்றி வரும் போது நான் விலத்தியிருக்கலாம். விலத்தித்தானே இருந்தனான். விடாப்பிடியாய் அமுக்கிட்டாரே..”

திவாகரனின் வீட்டுக்குப்போய் அவனின் தங்கையின் சைக்கிளை வாங்கிக் கொண்டு வீட்டுக்குச் சென்ற நினைவுகள் சௌமியாவின் நெஞ்சில் வலம் வந்தது.

மறுநாட்காலை திவாகரன் சௌமியாவின் சைக்கிளைத் திருத்திக் கொண்டு அவளின் வீட்டுக்கே வந்து விட்டான். அவனை அவள் எதிர்பார்க்கவில்லை, “நீங்கள் எப்பிடி என்ரை வீடு தெரிந்து வந்தீர்கள்..”

“எனக்கு எப்பவோ தெரியும்”

“எப்பிடி..”

சட்டென்று மறுமொழி சொல்ல திவாகரனால் முடியவில்லை. சிறிது யோசித்தான்.

“என்ரை பெயர், நான் இருக்கிற இடம், அப்பான்ரை பெயரெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?”

“தெரிஞ்சு கொண்டன்..”

“தெரிஞ்சு கொண்டியளோ..! எனக்குப் புரியேல்லை..”

“அதைப் பற்றி ஆறுதலாகச் சொல்லுறன்.. சைக்கிளைப் பாருங்கோ.”

“நல்லாயிருக்கு துடைத்து எண்ணெய்யெல்லாம் போட்டிருக்கு. எவ்வளவு செலவு?”

ஒரு சதமும் இல்லை. நான் தான் எல்லாம் செய்தனான்.

“உங்களுக்குச் சைக்கிள் திருத்தவும் தெரியுமே?”

“ஓ முழுசாய்த் தெரியாது”

“இருங்கோ ரீ கொண்டு வாறன்” என்ற சௌமியா குசினிக்குள்ச் சென்று தாய் தயாரித்த ரீயைக் கொடுத்து விட்டு ஐம்பது ரூபா நோட் ஒன்றை நீட்டினாள்.

“வேண்டாம்.. சீ.. சீ.. நான் ஒரு உதவியாய்த் தான் செய்தனான்.” அதன் பின் அவள் வேலைக்குச் செல்லும் போது படலையில் நின்று சிரிப்பான். கூடச் சைக்கிளில் வந்து கதைப்பான். இதெல்லாம் சௌமியாவுக்குப் பிடிப்பதில்லை.

அன்று அவன் அவளின் பின்னால் சைக்கிளில் வந்த போது சௌமியா சொன்னாள், “உங்களோடை கதைக்க எனக்கு விருப்பமில்லை. தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதையுங்கோ. உங்கடை செயல்கள் எனக்கு ஆத்திரத்தை ஊட்டுது. இனிமேல் தொந்தரவு செய்தீர்களானால் நேரே காவல்த் துறைக்குத் தான் போவேன். கஷ்டப்பட்டு பல நாட்கள் மனதில் திட்டமிட்டிருந்ததை ஒரு மாதிரிச் சொல்லி முடித்தாள்.

அவன் எதுகும் பேசவில்லை. முகத்தில் ஆயிரம் உணர்வுகள். உதடுகள் பேசத் துடித்தன.

இது நடந்து மூன்று நாட்களின் பின் சௌமியாவின் உறவினரான ரவீந்திரன் சௌமியாவின் வீட்டுக்கு வந்தான். அவன் உறவினனாக இருந்தாலும் அவர்களின் வீட்டுக்கு வருவதில்லை. ஏதாவது நல்லது கெட்டது நடந்தால் தான் வருவான்.

“ஏது இந்தப் பக்கம்.?”

“வரவேண்டிய தேவை ஏற்பட்டது அதுதான்.”

அவன் சௌமியாவோடு கூடப்படித்தவன். கலகலப்பாகப் பேசுவான். எல்லோருக்கு முன்னால் பேசக்கூடாதவற்றையும் பேசிவிடுவான். சற்று துணிச்சலானவன்.

“தேவையோ அம்மாவைக் கூப்பிடட்டோ..?”

அம்மா உங்க இல்லை. அம்மன் கோவிலில் நிற்கிறா. அதுதான் வந்தனான்.

சௌமியாவுக்கு அவனது கதை புரியவில்லை. முகம் கலவரம் அடைந்தது.

“சொல்ல முன்னமே நடிங்கினால் எப்படி..? சௌமி.. உனக்குத் திவாகரனைத் தெரியும் தானே.. அவன்தான் உனக்கு சைக்கிள் திருத்தித் தந்தவன்…”

சௌமியா எதுவும் பேசவில்லை. மௌனமாக நின்றாள். அவளுக்கு அவன் வந்த விசயம் புரிய ஆரம்பித்தது.

“சௌமி…, கிட்டத்தட்ட மூன்று வருடமாய் உன்னை அவன் காதலிக்கிறான். காதலெண்டு சொல்லேலாது. பித்து.. விசர்.. இதுக்கும் மேலையாவது இருக்கலாம்… அவன் என்னோடை யூனிவசிற்றீலை படிக்கிறான். மூன்று வருடத்துக்கு முன்னம் எங்கடை வீட்டை வரேக்கை உன்னை ஒழுங்கையிலை கண்டு மயங்கீட்டான்…”

சௌமியா அவனை முதல் முதல் கண்ட போது தன்னைப் பற்றிக் கூறியது எப்படி என்று அவளுக்குப் அப்போது தான் விளங்கியது.

“சாதாரணமாய் நானும் எத்தனையோ பேரைக் கண்டிருக்கிறன். ஆனால் இப்படியான ஒரு விசரனைக் காணேல்லை. அவன்ரை நெஞ்சுக்குள்ளை மட்டுமில்லை வெளியேயும் நீதான் குடியிருக்கிறாய்..” என்று சிரித்தான். “எப்படியெண்டு யோசிக்கிறியா..?” என்று கேட்டு விட்டு சிறிது நேரம் நிறுத்தியவன். பின் “அவன் நெஞ்சிலை உன்ரை பேரை பச்சை குத்தியிருக்கிறான்” என்றான்.

சௌமியா அதிர்ந்து போனாள். “இது என்ன கரைச்சல்” என்று சிந்தித்தாள்.

“யூனிவசிற்றீலை எத்தனை பெட்டையள் இருக்கு.. ஆனால் அவன் அவையளைத் திரும்பிக் கூடப் பார்க்கிறேல்லை.. அதோடை அவன் ஒரு பெட்டையின்ரை பெயரைக் கூட உச்சரிக்கிறேல்லை.. ஏனெண்டு தெரியுமே… உன்னைக் கூப்பிட்ட வாயாலை இன்னொருத்தியின்ரை பெயரைக்கூட உச்சரிக்கக் கூடாதாம்… எப்படி இருக்குது.. இது..”

சௌமியா எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு நின்றாளே தவிர எதுவும் பேசவில்லை.

“அவன் தான் நேற்று வந்து தன்ரை நிலமையை உனக்கு விளக்கிச் சொல்லச் சொன்னான்..”

“நீ ஏதோ பேசிப்போட்டியாமே.. பாவம் மூன்று நாளாச் சாப்பிடேல்லை” மிகமிக நல்ல பெடியன் எந்தவிதமான கெட்ட பழக்கங்களும் இல்லை. உன்னைத் தன்னுயிராய் நினைக்கிறான். நீ அண்டைக்குப் பேசினாப் பிறகு எனக்கு ஒரே கரைச்சல்.. போய்க் கதையெண்டு… நான் எப்பிடிக் கதைக்கிறதெண்டு யோசிச்சனான்… அவன்ரை கரைச்சல் தாங்க முடியாமல் தான் வந்தனான். பிறகு என்னைப் பற்றியும் புகார் செய்யக் காவல் துறைக்குப் போயிடுவீரோ” என்று சிரித்தான் ரவீந்திரன்.

சௌமியாவின் நெஞ்சைப் பயம் கௌவியது. அவள் பாடசாலையில் படிக்கும் காலங்களில் அவளைச் சுற்றி பலர் வந்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் அவள் ஏறெடுத்துக்கூடப் பார்த்ததில்லை. காதலிப்பது ஒரு ஒழுக்கக் கேடான செயல் என்று அவள் நினைத்திருந்தாள். அவளது உயிர்த் தோழி ஜானகி ரமணனைக் காதலித்த போது ஜானகியைக் காதலிக்க வேண்டாம் என்று கண்டிப்பாகச் சொன்னாள். அதை அவள் கேட்கவில்லை. அதனால் அவளின் சிநேகிதத்தையே விட்டு விட்டாள்.

இரண்டு, மூன்று வருடங்கள் கழிய ரமணன் ஜானகியை கைவிட்டு இன்னொரு பெண்ணைத் திருமணஞ் செய்து விட்டான். அதற்குப் பின்பு அவளுக்குக் காதலெண்டாலே வெறுப்பு.

“என்ன சௌமி யோசிக்கிறாய்? அவன் நல்ல பொடியன்…”

“நல்லது கெட்டதை பார்ப்பதற்கு எனக்குப் பெற்றோர் இருக்கினை. அதோடை எனக்கு காதலில் நம்பிக்கை இல்லை. காதல் புனிதமானது.. தூய்மையானதெண்டெல்லாம் எழுதலாமே தவிர நடைமுறைக்குச் சரிவராது… திருமணத்தைப் பற்றி யோசிக்கிற தகுதி எனக்கு இல்லை.. பெற்றோருக்குத் தான் இருக்கு. வேணுமெண்டால் அப்பாவோடை போய்க் கதையுங்கோ”

ரவீந்திரன் அவள் அப்படிச் சொல்வாளென்று நினைக்கவில்லை.

“நான் பிரச்சினையைச் சொல்லியிருக்கு! ஆனால் முடிவெடுக்கிற பொறுப்பு உன்னைச் சார்ந்தது. ஒண்டு மட்டும் சொல்லுறன். திவா உனக்காக எதை வேண்டுமானாலும் செய்வான்.. சீ.. சீ.. எவ்வளவு அன்பு.. எவ்வளவு பற்று.. எவ்வளவு தீவிரம்.. மடையன்..” என்று அலுத்துக் கொண்டான் ரவீந்திரன்.

“தயவு செய்து இனி இப்படிக் கதையாதையுங்கோ..”

“நான் ஏன் கதைக்கப் போகிறேன். உயிரை விர்றன் எண்டு வீட்டிலை வந்து பழிகிடந்தான். அதாலை வந்தனான். இதைப் போய் நான் சொன்னால் அவன் உயிரை விட்டாலும் விடுவான்… அப்படிப்பட்ட பைத்தியம்..” என்றான்.

சௌமியாவின் நெஞ்சைப் பயம் கௌவியது.

# 5

இரவு முழுவதும் சௌமியாவுக்கு நித்திரை வரவில்லை. எண்ணங்களுடன் போராடியபடி கட்டிலில் புரண்டாள்.

அவளது மனம் முடிவு எடுக்க முடியாது தவித்தது. ‘‘திவாகரனை மறந்து துவாரகனை ஏற்பதா.. இல்லாவிட்டால் அப்பாவுக்கு உள்ளதைச் சொல்வோமா? எப்படிச் சொல்வது? சொல்லக் கூடிய முறையிலா நான் அவருடன் பழகினேன்..’’ தடுமாறியபடி நித்திரையானாள் சௌமியா. இரவு கரைந்து போக ஒளி வளர ஆரம்பித்தது.

காலை உணவை முடித்து விட்டு கந்தசாமி மாஸ்ரர் அன்றைய தினசரியை வாசித்துக் கொண்டிருந்த போது நாய் குரைக்கும் சத்தம் கேட்டது.

தற்பொழுது நாய் குரைத்தால் ஆமிக்காரர் வீதியால் செல்கிறார்கள் என்று அர்த்தம். கந்தசாமி மாஸ்ரர் பேப்பரை வைத்து விட்டு வெளியே வந்தார். நாய் குரைப்பதை நிறுத்தி விட்டு உரிமையுடன் கார்த்திகாயினியை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தது.

‘‘வாம்மா..’’ என்றார் கந்தசாமி.

‘‘சௌமி எங்கை மாமா..?’’

‘‘எட்டு மணிக்கு மேலையாகுது இன்னும் எழும்பேல்லை.. இண்டைக்கு சனிக்கிழமை தானே.. இரம்மா..’’ என்றவர் சௌமி.. சௌமி.. கார்த்திகாயினி வந்திருக்கு.. என்றார்.

“நான் உங்களிட்டைத் தான் மாமா வந்தனான்…”

“என்னட்டையோ..” ஆச்சரியமாகப் பார்த்தார் கந்தசாமி.

“ஓம் மாமா.. சௌமிக்கு வெளிநாட்டு மாப்பிள்ளை பார்த்திருக்கிறியளாம்..”

கார்த்திகாயினி வார்த்தைகளை முடிக்க முன் கந்தசாமி குறுக்கிட்டார்.. “பார்க்கேல்லைப் பிள்ளை. ஒண்டு தேடி வந்திருக்கு. நாங்கள் இன்னும் முடிவு சொல்லேல்லை..”

“உங்களுக்கு விருப்பமோ..”

“மனிசிக்கு நல்ல விருப்பம். நான் இன்னும் முடிவு சொல்லேல்லை.. யோசித்துக் கொண்டிருக்கிறேன்.”

“சௌமிக்கு வெளிநாடு போக விருப்பமில்லை. நேற்று கோவிலிலை எனக்குச் சொன்னவள். உங்களுக்குச் சொல்லச் சொல்லி அது தான் நான் விடிய வந்தனான்.”

கந்தசாமி ஒன்றும் பேசவில்லை. மௌனமாக இருந்தார். நிமிடங்கள் பல பறந்தன. அவர் கூரையைப் பார்த்துக் கொண்டு இருந்தார். அதிலிருந்து அதைப் பற்றி பலமாகச் சிந்திக்கிறாரெண்டு கார்த்திகாயினிக்குப் புரிந்தது.

“சௌமி.. எல்லாத்துக்கும் வெக்கப்படுறவள். கலகலப்பாக மற்றவர்களோடு பழகக்கூடியவளில்லை. அதாலை வெளிநாட்டை நினைக்கவே அவளுக்குப் பயமாக இருக்கு..”

“ம்..” சிந்தனையில் இருந்து விடுபட்ட கந்தசாமி ஒரு கணம் கார்த்திகாயினியின் முகத்தைப் பார்த்தார். சௌமியாவுக்கு அவளைத் தவிர தோழிகள் கிடையாது. வீட்டிலும் கலகலப்பாகச் சிரித்துக் கதைப்பவளல்ல.. கேட்டதுக்கு மறுமொழி அவ்வளவுதான். இப்படியானவள் அங்கைபோய் என்ன செய்யப் போகிறாள்..?”

“சௌமிக்கு உள்ளூரிலே பாருங்கோவன்..? இப்போதைக்கு கனடாப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்து விட்டால் போதும். பிறகு மிகுதியை ஆறுதலாகப் பார்க்கலாம். என்ற எண்ணத்தில் அப்படிச் சொன்னாள் கார்த்திகாயினி.

“மூன்று வரிசமாய் உள்ளுருக்கை மாப்பிளை தேடிக் கொண்டுதானாம்மா இருக்கிறன. ஒண்டும் அம்பிடுதில்லை.. இப்ப யாழ் மாவட்டத்திலை ஒரு இருபத்தெட்டுக்கும் முப்பது வயதுக்கும் இடைப்பட்ட ஆம்பிளையள் எங்கை இருக்கீனை. அப்படி ஒண்டு இரண்டு இருந்தாலும் ஒண்டில் குடிகாரனாய் இருக்கிறான். இல்லாட்டில் நல்ல வேலை இல்லாமல் இருக்கிறான்..” என்று கூறிப் பெருமூச்சு விட்டவர் தொடர்ந்து சொன்னா, “போன கிழமை எங்கடை பள்ளிக்கூடத்திலை நடந்த சம்பவமொண்டைச் சொல்லுகிறேன்.. அஞ்சு வரிசமாய் தொண்டர் ஆசிரியராகப் படிப்பிக்கிற ஒரு பெடியனுக்கு நாங்கள் எவ்வளவு சம்பளம் கொடுத்தனாங்கள் தெரியுமே.. ஐந்நூறு ரூபா.” என்றவர் பேச்சை நிறுத்தி விட்டு முகத்தை தோளில் இருந்த துவாயால் துடைத்தார்.

“நிரந்தரமில்லாத ஐந்நூறு ரூபா சம்பளமெடுக்கிற பெடியனுக்கு போன கிழமை கல்யாணம் நடந்தது. சீதனக் காசாய் பத்து லட்சம் ரூபா.. தமையன்மார் அஞ்சு பேர் வெளிநாட்டிலை இருக்கிறாங்களாம்.

பரவாயில்லை அள்ளிக் குடுக்கட்டும். மற்றக் குடும்பங்களையும் நினைச்சுப் பார்க்க வேணும். கண்டியோ.. இப்ப மாப்பிளைக்கு மோட்டார் சைக்கிலும் எடுத்துக் குடுத்துக்கிடக்கு. பள்ளிக்கூடத்தை விட்டுட்டு ஒரு கடை போடச் சொல்லுகினையாம்..''

கார்த்திகாயினி ஏற்கனவே இதையறிந்திருந்தாள். எனவே ஆச்சரியமோ அதிர்ச்சியோ ஏற்படவில்லை. இதை விடப் புதினமான சங்கதிகளெல்லாம் இப்ப யாழ்ப்பாணக் கல்யாணங்களில்லை புகுந்திட்டுது.

''இந்த நிலமையிலை வலிய வாற சம்பந்தத்தைத் தட்டிக் கழிக்கவும் விருப்பமில்லாமல் இருக்கு''

''உண்மைதான். பொருத்தமான ஒரு சம்மந்தத்தைச் செய்யாவிட்டால் யாழ்ப்பாணப் பெண்கள் கல்யாணமே செய்ய முடியாது. இப்படிப் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்ப எனக்கும் இருபத்தாறு வயதாச்சு. இன்னும் இன்னும் ஒரு கல்யாணம் கூடப் பேசி வரவில்லை.'' கார்த்திகாயினி சிந்தித்தாள். அவளுக்கு லேசாக தலை வலிப்பது போல் இருந்தது.

''உம்முடைய பெரியப்பா குமாரசாமியரை எடுத்துப்பாரும். எவ்வளவு வசதிகள் இருக்கு வெளிநாட்டு மாப்பிளையைச் செய்யிறேல்லை என்ற பிடிவாதத்தாலை அவற்றை மகள் முப்பத்தைஞ்சு வயதாகியும் கன்னி கழியாமல் இருக்கிறாள். பெண்களைப் பொறுத்தமட்டிலே ஒரு இருபத்தைஞ்சு வயதுக்குள்ளை கட்டிக் குடுத்திடவேணும். இல்லாட்டில் பெருங்கஷ்டம். இப்பவே சௌமிக்கு இருபத்தேழு.. இனியும் விட்டால்..''

கந்தசாமியின் கதை கார்த்திகாயினிக்குப் புரியவில்லை. ஒருக்கால் கதைக்கிறதைப் பார்த்தால் வெளிநாட்டுச் சம்மந்தம் பிடிப்பில்லாமல் இருக்கு. பிறகு பார்த்தால் செய்ய வேண்டும் போல் கதைக்கிறார்.. குழம்பினாள் கார்த்திகாயினி.

“இப்ப நாட்டு நிலமையும் சீரில்லை. செல் வீச்சு விமானக் குண்டு வீச்சு இப்ப கொஞ்ச நாட்களாய் இல்லைத்தான்.. ஆனால் இது தொடருமோ.. தற்செயலாய் பிரச்சினைகள் கூடினால் என்ன செய்யிறது…”

யாழ்ப்பாணத்தை அரசாங்கம் கைப்பற்றிய பிறகு செல்வீச்சும் விமானக் குண்டு வீச்சும் இல்லாமல் போயிட்டுதான். ஆனால் வேறை பல பிரச்சினைகள் இருக்கே என்று சிந்தித்தாள் கார்த்திகாயினி.

முன்னுக்கு நான் தடுமாறியது உண்மைதான். ஆனால் இரா முழுக்க யோசித்துப் பார்த்தன் ஊருக்கை ஆசைப்பட்டு சௌமியாவுக்கு கல்யாணம் நடைபெறாவிட்டால் காலமெல்லாம் கன்னியாய்த் தான் வாழவேணும். அதை விடக் கனடாவிலை போய் வாழுறது நல்லது.

இனி என்ன செய்யலாம்..? பாவம் சௌமி.. திவாகரன் ஒரு கிராயூவேட். நல்ல குடும்பம் ஊரிலை இருந்தால் அவனைச் செய்து கொடுப்பதில் எந்தப் பிரச்சினையும் இராது. ஆனால்… அவன்தான் இல்லையே..

“என்ன பிள்ளை யோசிக்கிறாய். இப்பத்த நிலமையிலை வயது வந்த பிள்ளையள் இந்த நாட்டிலை இருக்கிறது அவ்வளவு நல்லதும் இல்லை. நாங்கள் தென்மராட்சியாலை இஞ்சை வந்த நேரத்திலை எத்தினை பேரைப் பிடிச்சவங்கள். இண்டைக்கு அந்தப் பிள்ளைகள்

உயிரோடை இருக்குதுகளோ தெரியேல்லை. என்னோடை நுவரோலியாவிலை படிப்பிச்ச சரஸ்வதி ரீச்சற்றை மோனை வந்தவுடனே பிடிச்சவங்கள். ஆள் இருக்கிறானோ இல்லையோ எண்டு தெரியாது. போன கிழமை தாய்மனிசி பள்ளிக்கூடத்திற்கு வந்து அழுதது.''

''அப்ப நீங்கள் கனடாக் கலியாணத்துக்குச் சம்மதிக்கப் போறியள்..''

அப்படித் தான் யோசிக்கிறன். என்ரை அண்ணை ஒருத்தர் கனடாவிலை இருக்கிறார். போனகிழமை மனிசியோடை ரெலிபோனிலை கதைச்சவராம். நல்ல பெடியன் கட்டாயம் செய்யுங்கோ எண்டு சொன்னவராம். என்னை விட என்ரை அண்ணர் நிதானம் கூடினவர். ஒரு நாளும் ஆராயாமல் சொல்ல மாட்டார். பிறகேன் யோசிப்பான். நான் விதியை நம்புறனான். கடவுளை நம்புறனான். இந்த இரண்டையும் நம்புறவன். ஒழுங்காய் வாழ்வான் விதி எண்டு ஒன்று இருக்கோ இல்லையோ.. கடவுள் இருக்கிறாரோ இல்லையோ எண்டு நான் சிந்திக்கிறேல்லை. இதுகளெல்லாம் இல்லையெண்டு சொல்லுறவனைப் பற்றியும் நான் கவலைப்படுறேல்லை. என்ரை குல தெய்வமான வெள்ளெருவைப் பிள்ளையார் நான் கஷ்டப்படுற நேரங்களிலை கனவிலை வந்து ஆறுதல் சொல்லி விட்டுப் போறவர்.

நான் இராத்திரி கலியாணப் பிரச்சினைகளைப் பற்றி முடிவெடுக்க முடியாமல் தடுமாறியபடிதான் படுத்தனான். இராத்திரி என்ரை குல தெய்வம் கனவிலை தோன்றி யோசிக்காமல் காரியத்தை முடி எண்டு சொல்லி விட்டுது. அதாலை நான் முடிவெடுத்திட்டன். பிள்ளையார் வந்து சொன்ன எந்த விசயமும் இது வரை நடக்காமல் போகேல்லை. நான் பிள்ளையாரை நம்புறன். பிள்ளையாரிட்டை

அவளின்ரை பிரச்சினையைப் பொறுப்புக் குடுத்திட்டன். இனி அவர் செய்யிறதைச் செய்யட்டும். எனக்குப் பொறுப்பும் இல்லை கவலையும் இல்லை. பெடியனும் சௌமியாவைத் தான் செய்ய வேணும் எண்டு ஒற்றைக் காலிலை நிக்கிறானாம். உனக்கு விளங்காது பிள்ளை. தான் நேசிக்கிறவனை விட தன்னை நேசிக்கிறவனைத் தான் செய்ய வேணும்...

"சரி மாமா.. நான் ஒருக்கால் சௌமியைச் சந்திச்சிட்டுப் போறன்..." கார்த்திகாயினி எழுந்தாள். அவளின் மனம் கனத்தது. ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி கலியாணத்தைத் தடை செய்யலாமெண்டு வந்தவளுக்கு அது முற்றுப் பெற்றதை அறிய குழப்பமாக இருந்தது.

# 6

கார்த்திகாயினி சௌமியாவின் அறைக்கு வந்த போது சௌமியா விக்கி விசும்பி அழுது கொண்டிருந்தாள். கோலுக்குள் அவர்கள் பேசியவற்றைக் கேட்டுவிட்டாள் என்று கார்த்திகாயினி நினைத்தாள்.

"சௌமி" என்று அன்பொழுக அழைத்தபடி கட்டிலில் அமர்ந்த கார்த்திகாயினி குப்புறப்படுத்திருந்து விக்கியபடியிருந்த சௌமியாவின் முதுகில் கையை வைத்துத் தடவினாள். அவளின் கண்களும் கலங்கின.

கார்த்திகாயினியின் அன்பான அழைப்பும் அன்பான வருடலும் சௌமியாவின் வேதனையை அதிகரிக்கச் செய்தது. ‘‘எனக்கு வாழவே பிடிக்கேலை’’ சௌமியா விம்மலுக்கிடையே சொன்னாள்.

கார்த்திகாயினிக்கு எதுகும் பேசத் தோன்றவில்லை. கண்களால் நீர் வடிய சௌமியாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். நிமிடங்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

‘‘எழும்பி முகத்தைக் கழுவு.. எழும்படீ.. இப்படியான நேரங்களிலை துணிவோடை இருந்தால் தான் காரியத்தைச் சாதிக்கலாம். அழுது குழறினால் யோசித்து ஒரு கருமத்தைச் செய்யேலாது.. எழும்படி..! அதட்டினாள் கார்த்திகாயினி.’’

‘‘என்ரை வாழ்க்கை அஸ்தமித்து விட்டதடி.. நான் திவாவோடை வாழ்ற வாழ்வைப் பற்றி எப்படியெல்லாம் கற்பனை பண்ணியிருந்தன். எல்லாம் அழிஞ்சு போச்சு..’’ விம்பினாள் சௌமியா.

கார்த்திகாயினியால் அவளுக்கு ஆறுதல் கூற முடியவில்லை. சௌமியாவுடன் நட்புப்பூண்டிருந்தமையால் திவாகரன் அவளுடன் அன்பாகவும் கலகலப்பாகவும் பழகி வந்தான். சௌமியா திவாவுடன் ஒரு முறை வல்லிபுரக் கோவிலுக்குச் சென்ற போது கார்த்திகாயினியும் சென்றிருந்தாள். அப்போது அவன் சொன்னான், ‘‘சௌமியாவுடன் என்ன மாதிரி வாழ வேண்டுமென்று கற்பனை பண்ணி வைச்சிருக்கேன். அது ஒரு கனவுலகு..’’ கண்களை மூடினான் திவாகரன்.

கார்த்திகாயினிக்கு அவனின் செயல் ஆச்சரியத்தைக் கொடுத்தது. திரும்பிச் சௌமியாவைப் பார்த்தாள்.

சௌமியா சிரித்து விட்டுச் சொன்னாள், “விசர் முத்திப் போச்சு கரைச்சல் தாங்கேலாமல் தான் வல்லிபுரக் கோவிலுக்கு வாறசாட்டிலை கூட்டியந்தனான். போகேக்கை மந்திகையிலை மருந்தெடுக்கவேணும்.”

“பெரியதொரு மாளிகை கட்டி அதில் நானும் சௌமியாவும் மட்டும் தான் இருப்பம். நான் ஒரு நிமிடம் கூடச் சௌமியாவைப் பிரிந்திருக்க மாட்டன். சௌமியாவோடையே இருப்பன். சாப்பாட்டுக்கு என்ன செய்வம் என்று யோசிக்கிறீரா.. சௌமியாவோடை இருந்தால் சாப்பாடு தானாக வரும். ஏனெண்டால் சௌமியா ஒரு தேவதை..”

அதை நினைக்க கார்த்திகாயினிக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. வேதனையை தாங்க முடியாது அவள் விம்மினாள். பின் ஆறுதல் சொல்ல வேண்டிய நானே அழுதால் எப்படி என்று நினைத்து மனதை சிரமப்பட்டு அடக்கினாள்.

“எழும்பு எழும்பு” என்று பலமுறை வற்புறுத்தினாள். பலமுறை வற்புறுத்திய பின்புதான் சௌமியா எழும்பி முகத்தைக் கழுவினாள்.

அப்போது குளித்து விட்டு உடைகளை மாற்றிக் கொண்டு வந்த மனோன்மணி, “சௌமியா நீ இன்னும் சாப்பிடேல்லையா?” என்று கேட்டபடி சௌமியாவின் அறைக்கு வந்தாள். அவளின் குரலைக் கேட்டவுடன் சௌமியா கண்களைத் துடைத்து விட்டு மறுபக்கம் திரும்பினாள்.

“ஓ… கார்த்திகாயினி எப்ப வந்தனீர்…? உம்மைக் கண்டுதான் சௌமி சாப்பிடேல்லை.. சரி இரண்டு பேரும் வாங்கோ சாப்பிடலாம்.. புட்டுக்கு நல்ல கறுத்தக் கொழும்பான் மாம்பழம் வெட்டி

வைச்சிருக்கிறன் வந்து சாப்பிடுங்கோ..'' என்றவள் சௌமியாவின் பக்கம் திரும்பி ''உனக்கு முட்டை பொரிச்சு வைச்சிருக்கிறன் சௌமி.. கார்த்திகாயினி உனக்குத் தெரியுமே.. இப்ப இரண்டு வரிசமாய் சௌமி மாம்பழமே சாப்பிடுறேல்லை.. முந்தியெண்டால் ஆசையோடு அஞ்சாறுபழம் சாப்பிடுறவள். இப்ப பேயைக் கண்ட மாதிரி வெறுக்கிறாள். இந்த முறை மாமரம் உலுப்பியிருக்கு இஞ்சை ஆர் சாப்பிடுறது.

மாம்பழம் என்றதும் சௌமியாவுக்குப் பழைய சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது.

அன்று அலுவலகத்தில் வேலை முடிய ஐந்து மணியாகிவிட்டது. வழமையாக நாலுமணிக்கு வேலை முடியும். ஆனால் அதுவரை ஒருவரும் நிற்பதில்லை. மூன்றரைக்கே வெளிக்கிட்டுவிடுவார்கள். அன்று முடிக்க வேண்டிய சில வேலைகள் இருப்பதால் சீ.சீ எல்லோரையும் நிற்கும்படி கேட்டுக் கொண்டார்.

வழமையாக மூன்றரை மணிக்கு அலுவலக வாசலில் உள்ள கடையில் சௌமியாவுக்காகக் காத்திருப்பான் திவாகரன்.

அவள் ஐந்து மணிக்குக் கடையடிக்கு வந்த போது திவாகரன், ''எவ்வளவு நேரம் உனக்காகக் காத்துக் கொண்டு நிற்பது'' என்று அலுத்துக் கொண்டான்.

''என்ன செய்யிறது கொஞ்சம் வேலையிருந்தது அதுதான்..''

“உங்கள் மரமண்டை சீ.சீக்கு என்ரை தவிப்பு எங்கை புரியப் போகுது.. அது சரி இண்டைக்கு நான் உமக்கு மிகப்பெரிய பிரசண்ட் ஒண்டு தரப்போறன். என்னெண்டு சொல்லும் பாப்பம்”

“மிகப் பெரிசா.. அப்ப என்னவாயிருக்கும்” யோசித்தாள்.

“சும்மா சொல்லும்..”

“சும்மாய் எப்பிடிச் சொல்லுறது.. எனக்கெண்டால் ஒண்டும் தோன்றேல்லை. ஒரு வேளை யானையோ..” சிரித்தாள் சௌமி.

அழகான கவர்ச்சி மிக்க அந்தச் சிரிப்பை எத்தனையாயிரம் தரம் ரசித்து மகிழ்ந்திருக்கிறான். ஆனால் அன்று அந்தச் சிரிப்பு அவனுக்கு ஒரு வித மயக்கத்தை உண்டாக்கியது.

“உம்முடைய சிரிப்புத்தான் என்னைக் கொல்லுறது.”

“விசர் கதையை விட்டுட்டு என்னெண்டு சொல்லுங்கோ..”

“இதைப் பெறுவதற்கு அஞ்சுவரிசமாய்த் தவமிருந்தனான்.”

“விசர் முத்திப் போய்ச்சு பருத்தித்துறை றோட்டிலை ஏற முன்னம் சொல்லுங்கோ..” அவசரப்படுத்தினாள் சௌமி. பருத்தித்துறை வீதியால் அவளது உறவினர்களும் நண்பர்களும் அதிகமாப் பிரயாணம் செய்வார்கள். அவர்கள் கண்டு விட்டால் கரைச்சல் என்று எண்ணினாள்.

“இண்டைக்கு உம்முடைய வீட்டை வரப்போறன். கனநாள் உம்முடைய கையாலை போட்ட ரீ குடிச்சு. மனிசி ரீக்கு சீனிபோடாமல் தந்தாலும் அது தேனாய் இனிக்கும்.. புரிசன் ஒருத்தன் இருக்கிறான்

என்ற நினைவு இருந்தால் அவன் விரும்புற ரீயை பிளாஸ்கிலை தன்னும் கொண்டந்து தரலாம் தானே.. இதுக்கெல்லாம் அன்பு இருக்கவேணும்.. அன்பு..''

''ம்... என்னோடை கதைக்க வேண்டாம்..'' பொய்க் கோபம் காட்டியவாறு மறுபக்கம் திரும்பினாள் சௌமியா..

''சௌமிக் கண்ணுக்கு அவ்வளவு அவசரமா..? சொறி.. சொறி.. நான் சொல்லப்போறன்.. முகத்தைத் திரும்பி ஒருமுறை தரிசனம் தாரும்.. எங்கை திரும்பும் பார்ப்பம்..''

''மாட்டன்...''

''சரி சொல்லுறன் நான் அஞ்சு வரிசத்துக்கு முந்தி செட்டிப்பாமிலை ஒரு கறுத்தக் கொழும்பான் மாமரம் வாங்கி நட்டனான்.. எனக்கு மரங்களெண்டால் உயிராம்.. அதோடை எனது உயிருக்கு உயிரானவளின்ரை பேரையே மாமரத்துக்கும் வைச்சனான்...''

குறுக்கிட்டாள் சௌமியா..''நானென்ன மரமே..'' சிணுங்கினாள்.

'ஐயையோ அழாதையம்மா.. நீர் அழுதால் என்ரை இதயம் தாங்காது. இரத்தக் கண்ணீர் வடிக்கும். மிச்சத்தைக் கேட்டால் எனக்கு அடியும் விழும். என்ரை நாய் பூனை எல்லாத்துக்கும் சௌமி எண்டுதான் பேர் வைச்சிருக்கிறன்.'

'என்ன கடுவன் நாய்க்குமோ?'

“ஓ.. கடுவன் நாய்க்கு ‘சௌ’ என்று பெயர். பூனைக்கு சௌமி என்று பெயர். மாமரத்துக்கு சௌமியா.. எப்பிடி…?” அட்டகாசமாகச் சிரித்தான்.

“போங்கோ.. போங்கோ… நான் இனிமேல் உங்களோடை கதைக்கமாட்டன்..” சைக்கிளை வேகமாக மிதித்தாள் சௌமியா..

திவாகரன் விசிலடித்தான்.. “ஆகா… மனிசிக்கு வாற கோபம். நான் பேரை மாத்திறன்.. எப்பிடி மாத்தலாம்.. மரத்திற்கு யாமிசௌ வெண்டும்.. பூனைக்கு மிசௌ வெண்டும்.. நாய்க்கெப்பிடி மாத்திறது..”

சௌமியாவுக்கு சிரிப்பு வந்தது. அடக்கிப் பார்த்தாள் முடியவில்லை. சற்றுப் பலமாகச் சிரித்தாள்.

“இனிச் சரி.. மிச்சத்தைச் சொல்லுறன்.. அந்த மரம் இந்த வரிசம் தானாம் ஒரு காய் காய்ச்சதாம். அதைப் பாதுகாத்துப் பழுக்க வைச்சு கொண்டந்திருக்கிறனாம். சௌமியா மரத்தை கெதியாய்ப் பழுக்கச் சொல்லி வற்புறுத்துவன். அது உம்மைப் போல ஒத்துக் கொள்ளாது.. அதாலை நான் பட்ட கஷ்டம் எவ்வளவு தெரியுமே..”

‘அப்படியென்ன கஷ்ரம்..?’

“நான் மாமரத்தோடை கதைக்கிறத்தை அம்மா கண்டிட்டுச் சிரிப்பா..வாற போற எல்லாருக்கும் சொல்லுவா.. அதனால் பெரிய கரைச்சல்..”

“ஆர்தான் சிரிக்க மாட்டினை..”

“மாம்பழம் பழுத்தவுடனை அம்மா பிள்ளையாருக்குக் கொடுக்க வேணும் எண்டுட்டா.. எனக்கு ஒரு மாதிரியாய்ப் போச்சு.. அஞ்சு வரிசமாய் உம்மை நினைச்சு வளர்த்தது.. இரண்டு காயாவது காய்ச்சிருக்கலாம்.. பேய்ச் சௌமியா மரம்..”

“அப்ப பிள்ளையாரை ஏமாத்திப் போட்டியளே..”

“பிள்ளையாருக்குக் கடையிலை ஒரு மாம்பழம் வாங்கி அம்மாட்டை குடுத்திட்டன். அவா நம்பீட்டா..”

“அப்பிடிச் செய்யக் கூடாது… கொண்டு போய் பிள்ளையாருக்குக் குடுங்கோ.. மனிசரை ஏமாத்துறதே.. எனக்குப் பிடிக்காது.. கடவுளை ஏமாத்தினால்.. எப்படி மாம்பழத்தைக் கொண்டு போய் அம்மாட்டை கொடுத்து உண்மையை சொன்னால் தான் நான் உங்களோடை கதைப்பன்.. இல்லாட்டில் நாளைக்கு மாம்பழத்தோடை வீட்டை வருவன். என்ரை குணம் தெரியும் தானே..”

“ஓ.. அம்மனுக்கோ.. எப்ப கடவுள் பக்தி வந்தது..”

“என்னுடைய அம்மன் நீர் தானே.. அதோடை நீர் உம்முடைய அம்மனுக்கு அர்ச்சனை செய்வீர் என்றும் எனக்குத் தெரியும்…’ என்று நிறுத்தியவன் பின் சற்று உணர்ச்சியுடன் சொன்னான்.. எனக்கு கடவுள் பக்தி இல்லைத் தான் ஆனால் உமக்காக செடில்குத்தி காவடி எடுக்கவும் தயாராக இருக்கிறன்..”

பொங்கி வந்த துயரத்தை அடக்க முடியாது கார்த்திகாயினியின் தோளில் சாய்ந்து குலுங்கினாள் சௌமியா..

‘‘அழாதையடி’’ அதட்டினாள் கார்த்திகாயினி.

‘‘மாம்பழம் என்றதும் திவான்ரை நினைவு வந்திட்டுது. அவர் போனதுக்கப்புறம் நான் மாம்பழத்தைத் தொர்றதே இல்லை. அதைப் பார்க்க எனக்குப் பயமாக இருக்கு..’’

சௌமியா திவாகரனைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் கார்த்திகாயினிக்கும் சொல்வாள். அதனால் மாம்பழ விடயம் கார்த்திகாயினிக்குத் தெரியும்.

“சரி.. சரி.. முகத்தைத் துடை அம்மா வந்தாலும் வருவா..”

“பிள்ளையள் வந்து சாப்பிட்டுட்டுக் கதையுங்கோ..” மனோன்மணி குசினியில் இருந்து சொன்னாள்.

“வாறம் மாமி..” என்ற கார்த்திகாயினி “வா சௌமி” என்றாள்.

“கார்த்தி… நான் என்னடி செய்யிறது. என்னாலை திவாவை மறந்து வாழேலாது.. என்னட்டை இதயமே இல்லையடி.. நான் அதை எப்பவோ அவருக்குக் கொடுத்திட்டன்.. இனி எப்படி இன்னொருத்தனோடை வாழுறது.. தற்செயலாய் அக்கலியாணம் நடக்குமானால் என்னை நீ பிணமாகத் தாண்டி காணுவாய்..”

கார்த்திகாயினிக்கு அது தெரியும். அதனால் அவள் அதிர்ச்சியடையவில்லை. திவா அவளை நேசித்த தீவிரம், கொண்ட அன்பு வரலாற்று நாயகர்களைப் போன்றது.

“அப்படி ஒண்டும் நடக்காது. நீ அவசரப்பட்டுடாதை..” என்று அவளை அணைத்தாள் கார்த்திகாயினி.

‘‘என்ரை காலிலை ஒரு சிறுமுள் குத்தினாலும் துடிதுடித்துப் போவார். அப்படியானவரை மறந்து என்னாலை வாழமுடியாது. அதோடை நெஞ்சு நிறைந்த கற்பனைகளோடை காணாமல் போய்விட்ட அவருக்குத் துரோகம் செய்யவும் என்னாலை முடியாது. நடக்கிற சம்பவங்களைப் பார்த்தால் இரண்டொரு கிழமைக்குள்ளை கலியாணம் முடிஞ்சிடும்.. அதன் பின் அவர் வந்திட்டாரெண்டால்.. அதிலும் பார்க்க சாகிறது மேல்’’ விம்மினாள் சௌமியா.

கார்த்திகாயினி எதுகும் பேசத் தோன்றாமல் திகிலடைந்து போய் நின்றாள்.

# 7

‘‘நான் திவாவை விரும்பியது பிழையெண்டு பல சந்தர்ப்பங்களில் நினைக்கிறனான். ஆனால் விரும்பினாற் பிறகு மறக்க முடியவில்லை..’’

‘‘இப்ப ஏன் இதைச் சொல்கிறாய்’’ என்று கேட்டாள் கார்த்திகாயினி.

‘‘ஆரம்பத்திலை எனக்கு விருப்பமே இல்லை. ரவீந்திரன் வந்து சொன்னாப் பிறகும் விரும்பேல்லை.. நான் ஒவ்வொரு நாளும் வேலைக்குப் போகும் போதும், வரும் போதும் அவர் றோட்டிலை நிற்பார். அதை நான் கண்டு கொள்ளுறேல்லை. பிறகு ஒரு நாள் ரவீந்திரன் வந்து சொன்னான், ‘‘சௌமி வீணாய்ப் பிடிவாதம் பிடிக்காதே.. அவன் உயிரை விர்றனெண்டு நிக்கிறான். உங்கடை அப்பா கலியாணம் பேசிச் செய்யிற தெண்டாலும் திவாவில் பார்க்கப் பெரிய ஒரு

உத்தியோகத்தனைப் பேசிச் செய்வாரே.. அவன்ரை தமையன்மார் மூன்று பேர் வெளிநாட்டிலை இருக்கினை. தங்கச்சியாருக்கு வெளிநாட்டிலை கலியாணம் முற்றாப் போச்சு.. அவள் இண்டைக்கோ நாளைக்கோ போக இருக்கிறாள்… எஞ்சியிருக்கிறது தாயும் இவனும் தான்… அப்பிடி நீ விரும்பாவிட்டால் சொல்லு மாஸ்ரரோடை கதைக்கிறன் எண்டான்.'' என்று சௌமியா சொல்லும் போது கார்த்திகாயினி குறுக்கிட்டாள். ''உதெல்லாம் எனக்குத் தெரியும் தானே..''

''உனக்குத் தெரியும் தான்.. ஆனால் அந்த நேரம் அப்பாவைக் கேட்கச் சொல்லிச் சொல்லியிருக்கலாம்… எண்டு நினைக்கிறன்…''

''இனி நினைச்சு என்னத்தைச் செய்யிறது.. எல்லாம் முடிஞ்சு போச்சு.. இனி ஆக வேண்டியதைத் தான் கவனிக்க வேணும்..''

''அந்த நேரம் ரவீந்திரனை அப்பாவைக் கேட்கச் சொல்லியிருந்தால் இப்ப இந்தப் பிரச்சினையள் வந்திராது.. இப்ப எப்படி அப்பாக்குச் சொல்லுறது..'' என்று நிறுத்திய சௌமியா கார்த்தியினியை சில கணங்கள் உற்று நோக்கினாள்.

''என்ன யோசிக்கிறாய் சொல்லு''

''எனக்குச் சினேகிதியெண்டு நீதான் இருக்கிறாய்.. நீ இதைப் பற்றி அப்பாவோடை கதையன்..''

சௌமியா கூறிமுடிக்கு முன்பே கார்த்திகாயினி பதறினாள்… ''ஐயையோ…. என்னாலை முடியாது.. நான் எப்படியடீ இதைச் சொல்லுறது''

“எனக்கும் சொல்லுற துணிவில்லை. திவாவையும் மறக்க முடியாது. அப்ப..”

“வாயை மூடடி.. எத்தனை தரம் சாகிறன்.. சாகிறன் எண்டு சொல்லிப் போட்டாய்.. காதலிலை தோல்வியடையிறவை எல்லோரும் சாகிறதெண்டால் ஊரிலை அரைவாசிப் பேர் செத்திருக்க வேணும். பொதுவாய்க் காதலிக்காதவை ஆர் இருக்கினை. பாடசாலைப் பருவத்திலை மாணவர்களே ஒரு வரை ஒருவர் சோடி சேர்த்துப்பகிடி பண்ணுவதில்லையா? அதிலை எத்தனை நீடித்திருக்கு.. அப்பிடி நீடிச்சாலும் பிறகு சீதனம் சாதி மதம் எண்டு நாங்கள் எதிர்பார்க்க வேணும். அதோடை எதிர்ப்புக்களைச் சமாளிக்கப் பழகவேணும்..” என்று கார்த்திகாயினி சொல்லிக் கொண்டிருக்கும் போது மீண்டும் அழத் தொடங்கினாள் சௌமியா.

“பல நாட்களாய் என்னை நானே கேட்டுக் கொண்டிருக்கிற ஒரு கேள்வி” என்று சொல்லி விட்டு ஒரு நிமிடம் சௌமியாவின் முகத்தைப் பார்த்தாள் கார்த்திகாயினி. கண்களில் நிரம்பிய நீரோடு நிமிர்ந்து கார்த்திகாயினியைப் பார்த்தாள் சௌமியா.

“கேட்கலாமா? விடுவோமா” என ஓரிருகணப் போராட்டம். பின் கேட்டுப் பார்ப்போம் என்ற முடிவுடன் “என்னைத் தப்பாக நினைக்காதை.. எனக்கொரு சந்தேகமிருக்கு..” தயங்கினாள் கார்த்திகாயினி.

“உனக்கு நான் என்ரை வாழ்க்கையிலை எதையும் மறைக்கேல்லை.. என்னைப் பற்றிய விசயமென்றால் உடனை கேட்கவேண்டியது தானே.. ஏன் பல நாளாகத் தயங்கினனி..”

“எப்பிடிக் கேட்கிறதென்று தான்.. திவா உனக்கு எல்லாம் சொல்லுறவரா..”

“ஒவ்வொரு நாளும் தான் சாப்பிர்ற சாப்பாட்டு வகைகளைக் கூடச் சொல்லுவார். கார்த்தி என்னைப் பொறுத்தமட்டிலை அவர் ஒரு உத்தமமான மனுசன்..”

“அவர் என்னிலை வைத்திருக்கின்ற அன்பின்ரை அளவை என்னால் சொல்லவே முடியாது. இப்பவும் நான் சொல்லுறன் நான் அவரிலை ஆரம்பத்திலை அன்பு வைக்கேல்லை. அவர் பல பிரயத்தனங்கள் செய்தும் அன்பு வைக்கேல்லை. தொடர்ந்து விடாப்பிடியாக இரண்டு வரிசமாய் எனக்குப் பின்னாலை அலைஞ்ச அலைச்சல் தான் நான் அவர் மீது அன்பு வைக்கக் காரணமாய் இருந்தது. பொதுவாய் அவர் எதையும் எனக்கு மறைச்சிருப்பாரெண்டு நான் நினைக்கேல்லை.. உனக்கென்ன சந்தேகம்?”

“அவர் இயக்கத்திலை இருந்தவரே”

“இல்லை. அவர் இயக்கத்திலை இருந்தவர் என்று உனக்கு ஆரும் சொன்னவையே..”

“இல்லை.. பொதுவாய் ஆமி பிடிச்ச கன பொடியளை விட்டுட்டாங்கள். சிறையிலை இருக்கிறவையின்ரை பெயருகள் அடிக்கடி பேப்பரிலை வருது. ஆனால் திவாகரனைப் பிடிச்சாப்பிறகு எந்தச் செய்தியும் இல்லையே..?”

“அது தாண்டி எனக்கும் கவலையாய் இருக்கு.. ஆனால் என்னைப் பொறுத்தமட்டிலை அவர் இயக்கத்திலை இருந்திருந்தால் எனக்குச் சொல்லியிருப்பார். உன்னைப் போல எனக்கும் சந்தேகம் இருந்தது… நான் ரவியைக் கேட்டனான்..”

“ரவி என்ன சொன்னவர்..?”

“தான் அறிஞ்சவரை அப்படி ஒண்டும் இல்லை என்றார்..”

“வேறை ஒன்றும் சொலலேல்லையே..”

“நாங்கள் தென்மராட்சியிலை இருந்து வந்தகையோடை பிடிச்சவங்கள். அதுவும் எங்கை வைச்சுப் பிடிச்சதெண்டும் தெரியாதுதானே. அன்றும் இரவு திவா வீட்டுக்கு வரல்லை என்றுதானே தேடத் தொடங்கினவை.. அதாலை ஒண்டும் சொல்லேலாமல் இருக்கு எண்டு சொன்னார்..”

“தாய் மனிசியும் எத்தனை தரம் ஹாம்புக்குப் போனது.. எந்தக் ஹாம்பிலை போய்க் கேட்டாலும் தாங்கள் பிடிக்கேல்லை எண்டு தான் சொல்லுறார்கள்” என்று பெருமூச்சு விட்டாள் கார்த்திகாயினி.

“அவை பிடியாட்டில் திவா எங்கே போனவர்..? அவரைத் தான் விடு. பக்கத்து வீட்டுக்கார சபேசனை சுத்திவளைப்பிலை பிடிச்சவை. பிறகு விசாரிக்கப் போக தாங்கள் பிடிக்கேலை எண்டுதானே சொன்னவங்கள்.. சுத்தி வளைப்பண்டைக்கு நாங்களெல்லாரும் அம்மன் கோவில் வீதியிலை தானே இருந்தனாங்கள். அப்ப சபேசனோடை நாலஞ்சு பேரைப் பிடிச்சவங்கள். மூண்டாம் நாத்து சபேசனைத் தவிர

எல்லோரையும் விட்டாச்சு. ஆனால் இன்றுவரை சபேசனை விடேல்லை... நீயே சொல்லு சபேசன் இயக்கத்திலை இருந்தவனே?'' பேச்சை நிறுத்தி விட்டுப் பதிலை எதிர் பார்த்தாள் சௌமியா.

கார்த்திகாயினி எதுகும் பேசவில்லை. சௌமியாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அவனை நாங்கள் இடம் பெயர இரண்டு கிழமைக்கு முன்னம் வாசிகசாலையிலை ஏதோ தம்மைப் பற்றிக் குறைவாகக் கதைச்சதெண்டு இயக்கம் எச்சரிக்கை செய்தது.. அப்ப இயக்கத்திலை அவன் இருந்தே பிடிச்சவை...''

கார்த்திகாயினிக்கு பதில் சொல்ல முடியவில்லை. ''சபேசன் இயக்கத்துக்கு எதிரானவன். அவனையே இரண்டு வருசமாய் விடேல்லை. அப்படியிருக்க நான் திவாவைப் பற்றி சௌமியாவைக் கேட்டிருக்கக் கூடாது'' என்று நினைத்தாள் கார்த்திகாயினி.

''என்னடி யோசிக்கிறாய்..?''

''ஒண்டுமில்லை.. நான் கேட்டதைப் பற்றிக் குறை நினைக்கிறியே..'' கார்த்திகாயினியின் குரல் கரகரத்தது.

விரத்தியாகச் சிரித்தாள் சௌமியா.., ''உண்மையான தோழியாக இருந்தால் எதையும் கதைக்கலாம்... நான் அதைப் பற்றிக் குறை நினைக்கவில்லை. என்னோடை அவர் பழகிய விதத்திலை இருந்து அவர் எதையும் மறைத்திருக்கவே மாட்டார். அப்படி நான் நினைக்கிறதே பாவம் எண்டுதான் நினைக்கிறன். கள்ளம் கபடங்களை மறைக்கத் தெரியாத

மனம்… உனக்கும் தெரியாது..'' என்ற சௌமியா எதை நினைத்தாளோ தெரியாது பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த கார்த்திகாயினி அவள் பேச்சை நிறுத்தி விட்டு தடுமாறியதைக் கண்டு கொண்டாள். அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

நிமிடங்கள் கரைந்த போதும் சௌமியா எதுகும் கூறவில்லை. ''ஒரு வேளை எதையாவது மறைக்கிறாளோ..?'' கார்த்திகாயினி மனதுள் நினைத்தாள்.

தடுமாறிய சௌமியா தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, ''திவான்ரை அம்மாவைச் சந்தித்தியா?'' என்று கேட்டாள்.

''நீ எதையோ எனக்கு மறைக்கிறாய். நான் அறியக் கூடாதெண்டால்.. சொல்லத் தேவையில்லை..'' என்றாள்.

சௌமியா சற்று ஆடிப்போனாள். ''வந்து… திவா….'' தடுமாறினாள்.

''நீ சொல்ல வேண்டாம்….''

''கார்த்தி'' விம்மியவாறு கார்த்திகாயினியின் தோளில் முகத்தைப் புதைத்தாள் சௌமியா.

''என்னடி.. நெடுக அழுதபடி…'' சினந்தாள் கார்த்திகாயினி.

“திவாவைப் பற்றி ஒரு கூடாத விசயம்… அவர் தான் எனக்குச் சொன்னவர்.. உணர்ச்சி வசப்பட்டு உனக்குச் சொல்லவாயெடுத்திட்டன்..”

“கூடாதெண்டால் சொல்ல வேண்டாம். நான் அதைப் பெரிசாய் நினைக்கேல்லை” என்றாள் கார்த்திகாயினி.

“இல்லை அவரைப் பற்றி நீ அறிய வேணும். பள்ளிக் கூடத்திலை படிக்கேக்கை நண்பர்களோடு சேர்ந்து திவா திரிவாராம். ஒரு நாள் நண்பர்கள் பக்கத்து வீட்டு பொம்பிளைப் பிள்ளையை கேலி செய்திருக்கிறார்கள். அவள் கவனிக்காமல் இருந்த போது சிறிய கல்லால் அவளுக்கு எறிந்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பெண் திவாதான் கல்லால் எறிந்தது என்று நினைத்துச் செருப்பைக் கழற்றி அடித்துப் போட்டாளாம்…” நிறுத்தினாள் சௌமியா..

“பிறகு”

“அதிபரிடம் விசாரணைக்குப் போயிருக்கு. ஆனால் திவா என்று அதிபர் நம்பேல்லையாம்.. மாணவன் ஒருவனுக்கு அடிபோட கல்லெறிந்த மாணவனின் பெயரைச் சொன்னானாம்.. அதன் பிறகு அந்தப் பெண் திவாவிடம் மன்னிப்புக் கேட்டாளாம்… அண்டைக்குப் பிறகு திவா நண்பர்களோடு சேருவதே இல்லையாம்..”

“உதை ஆர் உனக்குச் சொன்னது..”

“திவாதான் சொன்னவர்.. நான் இதை ஏன் சொல்லுறன் எண்டால் எனக்குத் தெரியாத விசயம்.. நான் அறிந்து கொள்ள முடியாத விசயம்.. அதோடை ஒரு மோசமான விசயம். நான் கேட்காமலே சொன்னவர்.

அதைவிட வேறு எவ்வளவோ விசயங்கள்.. தாங்கள் ஒளித்திருந்து சிகரட் பத்தினது, கள்ளு குடித்தது.. இதெல்லாம் சொன்னவர் அதைச் சொல்லாமல் விட்டிருப்பாரா..?'' என்று கேட்டு விட்டு கார்த்திகாயினியைப் பார்த்தாள்.

''வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதை அம்மனிட்டைப் பாரத்தைக் கொடுத்திட்டு பேசாமல் இரு… எல்லாம் நல்லபடி நடக்கும்'' என்றாள் கார்த்திகாயினி.

அப்பொழுது ஒழுங்கையில் மோட்டார் சைக்கிள் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து நாய் குரைக்கும் சத்தம் கேட்டது.

''இன்னும் நாயைப் பிடித்துக் கட்டேலையேயப்பா..?'' மனோன்மணி அதட்டலாகக் கேட்டாள்.

கந்தசாமி மாஸ்ரர் நாயைத் துரத்திக் கொண்டு செல்ல மனோன்மணி, ''வாருங்கோ.. வாருங்கோ..'' என அமர்க்களமாக வரவேற்றாள்.

சௌமியாவும் கார்த்திகாயினியும் அறையை விட்டு வெளிவந்த போது புறோக்கர் ஹோலில் இருந்த கதிரையில் காலுக்கு மேல் காலைப் போட்டுக் கொண்டு ஒய்யாரமாக இருந்தார். அவரின் பக்கத்தில் கந்தசாமியும் மனோன்மணியும் இருந்தனர்.

சௌமியாவைக் கண்டதும் மனோன்மணி சொன்னாள், ''பிள்ளை புறோக்கருக்குக் காப்பி போட்டுக் கொண்டுவா'' என்று.

“நாளைண்டைக்கு ஒரு நாளிருக்கு. அதிலை விசயத்தை முடிச்சிடுவம். மாப்பிள்ளை தாய் தகப்பனை விட்டிட்டு தனியாத்தான் வந்திருக்கிறார். இஞ்சை எழுதினால்.. பிறகு நீங்கள் எல்லோரும் கனடாவுக்குப் போய்க் கலியாணத்தைச் செய்யலாம்…”

புறோக்கரின் வார்த்தைகளைக் கேட்டு நடு நடுங்கினாள் சௌமியா.

# 8

மனோன்மணியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அழகான மாப்பிளை, பணக்கார மாப்பிளை, பண்பான மாப்பிளை. வலிய வந்திருப்பது அம்பாளின் கருணை என்று நினைத்து எழுத்து முடிந்ததும் பெரியதொரு அபிஷேகம் செய்வதாக நினைத்துக் கொண்டாள்.

“உண்மையிலை சௌமியா அதிஷ்டம் செய்தவள் கண்டியளோ… மாப்பிளை கனடாவிலை வீடியோவிலை பார்த்திட்டு தேடி வர்றதெண்டால்.. எங்கையாவது நடக்குமா..? தேடி வந்தாலும் பரவாயில்லை. சீதனம் ஒண்டும் வேண்டாம். சிங்கார நாச்சியார் வந்தாலே போதுமென்கிறார். போனமாசம் வேலாயுதத்தின்ரை மோன் கனடாவாலை தானே வந்தவன்… அவனுக்கு எவ்வளவு சீதனம் குடுத்தவை.. தங்கைக்காரிக்கு அஞ்சு லட்சமும் வீடுமெல்லே குடுத்தவை… அப்பிடி கனடாவிலை இருக்கிறவனும் சீதனம் கேட்கிறான். அவனைப் பற்றி நான் மாப்பிளையை விசாரிச்சுப் பார்த்தனான். அங்கே அவன் பெரிசாய் வாழேல்லையாம்..

மாப்பிளை சீதனம் கேட்காதளவிலை நாங்கள் வசதி குறைந்தவர்கள் என்று புறோக்கர் நினைக்கிறாரென நினைத்த

மனோன்மணி குறுக்கிட்டுச் சொன்னாள், “நாங்களும் வசதியான ஆட்கள் தான். இவர் பத்தாயிரத்துச்சொச்சம் பென்சன் எடுக்கிறார். பாங்கிலையும் ஏராளமாய்க் காசிருக்கு இதெல்லாம் சௌமியாவுக்குத் தானே..”

புறோக்கருக்கு மனோன்மணியின் கதையில் உள்ள அர்த்தம் புரிந்ததோ இல்லையோ தெரியாது. பின்பு பலமாகச் சிரித்தார். பின்பு “எல்லாம் எனக்குத் தெரியும். பெடியன் அதிஸ்டக்காரன்” கட்சி மாறினார் புறோக்கர்.

“நாளைண்டைக்கு வாறநாளிலை எழுத்தை வைக்கேலாது வீடெல்லாம் உடைஞ்சுபோய்க் கிடக்கு. எங்கடை வீட்டிலை நடக்கிற முதல் சுபகாரியம் அதாலை வீட்டைத் திருத்திப் பெயின்ற் அடிச்சுத்தான் செய்ய வேணும். இந்த மாசக் கடைசிலையும் ஒரு நாளிருக்கு..” என்றார் கந்தசாமி.

“கடைசி நாளெண்டால் இன்னும் பதினெட்டு நாளிருக்கு மாப்பிளை அவசரப்படுகிறார். மாப்பிளை வயது போனபெரியதாயோடை தான் இருக்கிறார்… தெரியாதே சாப்பாடு அப்பிடி இப்பிடித்தான்..”

“சாப்பாட்டை வேணுமெண்டால் நாங்கள் குடுக்கலாம்… என்னப்பா..” மனோன்மணி கந்தசாமியைப் பார்த்துக் கேட்டாள்.

“எழுதமுன்னம் வீட்டுக்கு வாறது அவ்வளவு நல்லதில்லை.”

“இதென்ன மாஸ்ரர் கதை..” எல்லாம் முற்றாக்கியாச்சு.. போனகிழமை கோப்பாயிலை கலியாணம் ஒண்டு முற்றாக்கினனான்.

எழுத்துக்குச் சீலை எடுக்க மாப்பிளையும் பொம்பிளையும் மோட்டார் சைக்கிலை போய் எடுத்தந்தவை..'' என்றார் புறோக்கர்.

“அது அவையவையின்ரை மனதைப் பொறுத்தது. எனக்குப் பிடிக்கேல்லை..''

தந்தையின் பேச்சு சௌமியாவுக்கு பழைய நினைவொன்றை மனத்திரைக்கு இழுத்தது.

இடம் பெயர்ந்து தென்மராட்சியில் வாழ்ந்த காலம் அது.

சாவகச்சேரி நகரில் உள்ள பாடசாலை ஒன்றில் சௌமியாவின் அலுவலகம் இயங்கிக் கொண்டிருந்தது.

அப்பாடசாலையில் வேறும் பல அலுவலகங்கள் இயங்கின. அத்துடன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் தங்கி இருந்தனர்.

மாலை நான்கு மணிக்கு வேலை முடிந்து சைக்கிள் விட்ட இடத்திற்கு சௌமியா வந்தாள். அங்கே அவளின் சைக்கிளைக் காணவில்லை. நூற்றுக் கணக்கான சைக்கிள்கள் நின்றன. சௌமியா ஒவ்வொன்றாகத் தேடினாள். அவளது சைக்கிளைக் காணவில்லை.

மழை லேசாகத் தூறத் தொடங்கியது. குடையை விரித்துப் பிடித்தபடி தேடிப் பார்த்தாள்.

இருளின் கருமை வளரத் தொடங்கியது. சௌமியா துயரத்துடன் பாடசாலையை விட்டு வீதிக்கு வந்து நடக்கத் தொடங்கினாள்.

பாடசாலையிலிருந்து மூன்று மைல் தூரத்தில் அவள் தங்கியிருந்த வீடு இருந்தது.

வழமையாக வரும் திவாகரனை அவள் கண்கள் தேடின. அவனையும் காணவில்லை. ஆயிரக் கணக்கான மக்கள் மழைக்கு ஒதுங்க இடமின்றி நனைந்து கொண்டு வீதியின் இருமருங்கிலும் நின்றனர்.

மழை பலமாகப் பொழிய ஆரம்பித்தது. வீதியின் ஓரத்தில் நின்ற மரத்தின் கீழ் இருந்த பெண் ஒருத்தி தனது கைக்குழந்தையை மடியில் கிடத்தி மெழுகுசேலையால் போர்த்தியிருந்தாள். அவளுக்கு குடை பிடிததபடி திவாகரன் நின்று கொண்டிருந்தான். அவன் சௌமியாவைக் கண்டதும்.., ‘‘சௌமி’’ என்று கத்தினான்.

இடம்பெயர்ந்த மறுநாளே திவாகரன் சௌமியாவைத் தேடத் தொடங்கி விட்டான். பத்து நாட்கள் தேடியும் அவள் கிடைக்கவில்லை. பின் அவள் வேலை செய்யும் அலுவலகம் அப்பாடசாலையில் இயங்குவதாகவும் பணியாளர்களை அங்கு வரச் சொல்லி மேலதிகாரி பத்திரிகையில் அழைப்பு விடுத்திருந்தார். அதைப் பார்த்து விட்டுத்தான் திவாகரன் சௌமியாவை அங்கு வந்து சந்தித்தான்.

‘‘சௌமி, ஏன் நடந்து வாறீா.. சைக்கிள் எங்கை..’’

‘‘விட்ட இடத்திலை காணேல்லை..’’

‘‘அங்கேதான் நிற்கும் வடிவாய்ப் தேடிப் பார்த்தனீரே’’

“இருட்டீற்று. அதோடை மழையும் வந்திட்டுது.. வாச்சரிட்டை சொல்லிப் போட்டுத் தான் வந்தனான்…”

“கொஞ்சம் மழை குறையட்டும் இந்தம்மாவையும் பிள்ளையையும் எப்படி விட்டுட்டுப் போறது…”

“குடையைக் குடுத்திட்டு வாங்கோ நாளைக்கு வந்து வாங்குவம்…”

“எனக்கு அது தோன்றேல்லை.. சாய்.. நீர் எவ்வளவு இரக்கமுள்ளனீர்…’’

குடையை அப்பெண்ணிடம் கொடுத்து விட்டு இருவரும் ஒரே குடையில் வந்தனர்.

“மூன்று மைல் நடக்கேலுமே சைக்கிலிலை போவம்..” என்று கேட்டான் திவாகரன்.

சௌமியா பேசாது மௌனமாக நின்றாள். திவாகரன் சைக்கிளை உருட்டிக் கொண்டு வர சௌமியா குடை பிடித்தாள்.

அவளின் தோள் அவனது கையில் அடிக்கடி உரசிக் கொண்டிருந்தது. சௌமியா விலக விலக திவா அருகில் வந்தான்.

“மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி என்பார்கள்” என்றவாறு சைக்கிளில் ஏறிய திவாகரன், காலை நிலத்தில் ஊன்றியபடி வலது கையால் காண்டிலை பிடித்தபடி நின்று “ஏறும்..” என்றான்.

பலமாகப் பொழிந்து கொண்டிருந்த மழை சிறிது குறைந்தது.

“நடந்து போறதெண்டால் இரவு ஒன்பது மணிக்கும் போகேலாது. அதோடை உம்மைக்காணாமல் வீட்டார் என்ன பாடுபடுவினை தெரியுமே..”

அப்படித் திவாகரன் சொல்லியும் அவள் சைக்கிலிலை ஏறவில்லை.

“ஏன் என்னிலை நம்பிக்கை இல்லையே.. நான் உம்மை எங்கடை வீட்டை கொண்டு போகமாட்டன் ஏறும்..” சற்று அதட்டலாக சொன்னான் திவாகரன்.

சௌமியா எதுவும் பேசவில்லை. கான்வாக்கை கான்ரிலில் கொழுவி விட்டு மெதுவாக பாரில் ஏறி அமர்ந்து அண்ணார்ந்து திவாகரனைப் பார்த்துச் சிரித்தாள்.

“இந்த இடம்பெயர்வு வந்ததும் ஒன்றுக்கு நல்லது தான்..” சிரித்தான் திவாகரன்.

“உங்களுக்கு எப்பவும்..” சிணுங்கினாள் சௌமியா.

திவா தனது வலது கையை அவளின் தோளில் வைத்து “குடையை உயர்த்திப் பிடியும்” என்றான்.

“என்னை இறக்கி விடுங்கோ நான் நடந்து போறன்..”

“நான் வேணுமெண்டே உம்முடைய தோளிலை கையைப் போட்டனான். குடையைப் பதித்துப் பிடிக்கிறீர் றோட்டுத் தெரியவில்லை…”

“அதை வாயாலை சொல்லலாம் தானே...”

“சரி.... உயர்த்திப் பிடியும்..” திவாகரன் சிரித்தான்.

சௌமியாவின் முதுகுப் பகுதி திவாகரனின் நெஞ்சோடு ஒட்டி இருந்தது. அவளது முழங்கை கான்ரில் கிளிப்புக்கு அண்மையாக இருந்தது. காண்டிலைப் பிடித்திருந்த திவாகரனின் விரல்கள் அவளின் மிருதுவான முழங்கைக்கு மேலிருந்த தசையோடு ஒட்டிக் கொண்டன.

“எனக்கெண்டால் வாழ்க்கையே வெறுத்துப் போச்சு.. சா என்பது இண்டைக்கும் வரலாம் நாளைக்கும் வரலாம்...”

“அதுக்கு இப்ப என்ன..?”

“சாகிறத்துக்கிடையிலை நாங்கள் இணைய வேணும்.. நாளைக்கு புதன்கிழமை நல்ல நாள் உங்கடைஅ ம்மாவோடை வந்து அப்பாவைக் கேளுங்கோ..”

திவாகரன் பதில் கூறவில்லை.

“காதலிக்கிறத்துக்குத் துணிவு இருக்கே தவிர கல்யாணம் செய்ய இல்லை..”

“அப்படிச் சொல்லாதை சௌமி. நான் இப்ப படிச்சுக் கொண்டிருக்கிறேன். அதுகும் பெஸ்ட் இயர்.. பல்கலைக்கழத்திலை குடும்பஸ்தனாக இருந்து படிக்க எனக்கு விருப்பமில்லை...”

“இரண்டு வரிசத்திற்கு நாங்கள் இருப்பமே..”

“பயப்படாதையும் நூறு வரிசம் இருப்பம்..” என்றபடி வலது கையை கான்ரிலால் எடுத்து அவளது கையைப் பிடித்தான்..”

“கையை விடுங்கோ..”

“சௌமி.. இன்னும் கோப்பி போடேல்லையே.. உனக்கு ஒண்டும் தெரியாது. எல்லாம் நான்தான் செய்ய வேண்டும்” என்றபடி குசினிக்குள் நுழைந்தாள் மனோன்மணி.

# 9

“அந்தாளுக்கு ஊர் உலகம் ஒண்டும் விளங்காது” பெடியன் ஓமெண்டால் சட்டுப் புட்டெண்டு செய்யிறத்தை விட்டுட்டு வீடு திருத்தி பெயின்ற் அடிக்கப் போகுதாம்… விசர் மனிசன். உலகத்தைப் புரிஞ்சு கொள்ளுதில்லை” என்று புறுபுறுத்தாள் மனோன்மணி.

“என்னம்மா அப்பாவைப் பேசுறாய்” சௌமியா கேட்டாள்.

“பேசாமல் என்ன செய்யிறது. ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு சாட்டுச் சொல்லிக் கொண்டு…”

உன்னைக் கலியாணம் செய்து கொண்டு மாப்பிளை கனடாவுக்கு கூட்டிக் கொண்டு போகப்போகிறார்.. உன்னைப் பிரிஞ்சு எங்களாலையும் இஞ்சை இருக்கேலாது.. எண்டைக்கோ ஒரு நாளைக்கு

நாங்களும் அங்கை வந்திடுவம்.. பிறகு என்னத்துக்கு வீடு திருத்துவான்…

“ஆராயாமல் எதையும் செய்யிறதே.. மாப்பிளையைப் பற்றி எங்களுக்கு ஒண்டும் தெரியாது விசாரிக்க வேண்டாமே..”

“விசாரிக்கிறதுக்கும் வீடு திருத்திறத்திற்கும் என்ன தொடர்பிருக்கு..? நான் நம்பிக்கையான ஆட்களிட்டை மாப்பிளையைப் பற்றி விசாரித்துப் போட்டன்.”

சௌமியா எதுவும் பேசவில்லை. அவளால் பேசமுடியவில்லை. உணர்வுகள் மரத்து மயக்கம் வருவது போல் இருந்தது.

“எப்பன் அமைதியைக் கண்டவுடனை நாட்டுப் பிரச்சினையெல்லாம் தீர்ந்திட்டெண்டு மனிசன் நினைக்குது. இடம் பெயந்த நேரத்திலை நாங்கள் பட்ட பாட்டை கொஞ்சமெண்டாலும் நினைச்சுப் பார்க்குதே.. ஆமி வந்த நேரத்திலை நான் நெருப்பை மடியிலை கட்டிக் கொண்டு இருந்தனான். இதுகளெல்லாம் அந்தாளுக்கு எங்கை புரியப் போகுது…? அந்தாள் முந்தின மாதிரி சட்டமும் லோவும் கதைச்சுக் கொண்டிருக்குது.. எங்களோடை மட்டும் கதைச்சாப் பறவாயில்லை. புறோக்கரோடையுமெல்ல கதைக்குது… ஆயிரம் பெம்பிளையள் ஊரிலை இருக்கு. தற்செயலாய் வழுக்கிடுமோ எண்டு நான் பயப்பிடுறன். அந்தாள்..! அப்பனே அம்மாளாச்சி தாயே நீதான் அந்தாளை மாத்தவேணும்.. மனதுக்குள் அம்பாளை வணங்கியபடி கோப்பி டம்பிளரை எடுத்துக் கொண்டு ஹோலுக்குள் நுழைந்தாள் மனோன்மணி. திக்பிரமை பிடித்தவளாக நின்றாள் சௌமியா.

கோப்பியைச் சுவைத்துக் குடித்துவிட்டு டம்பிளரை மனோன்மணியிடம் நீட்டிய புறோக்கர் ‘‘அப்ப நான் மாப்பிளைக்கு என்ன சொல்லுறது’’ என்று கேட்டார்.

‘‘இதிலை அவசரப்படேலாது. ஆறுதலாய் நானும் மனிசியும் யோசிச்சு பின்னேரம் சொல்லுறம்’’ என்றார் கந்தசாமி.

‘‘ஓம் ஓம் கலியாணம் ஆயிரங்காலத்துப் பயிர்.. இதிலை அவசரப்பட முடியுமே..? உங்கே மாப்பிளையே இல்லை? ஒண்டு போனால் இன்னொண்டைப் பார்க்கலாம். ஆனால் கலியாணத்தைக் கட்டிப் போட்டு மாத்த முடியுமே..? நீங்கள் எதுக்கும் அந்தரப்படாமல் ஆறுதலாக யோசியுங்கோ.. நாலுபத்துப் பேரை விசாரிச்சுப் போட்டுச் சொல்லுங்கோ.. பிறகு நாங்கள் ஏதோ விசயத்துக்காக அந்தரப்பட, நீங்கள் சரியில்லாத மாப்பிளையை வைச்சுக் கொண்டு அந்தரப்படுறம் எண்டும் நினைப்பியள்..’’

புறோக்கர் கூறிக் கொண்டு இருக்கையில் மனோன்மணி பதட்டத்துடன் குறுக்கிட்டார்.

‘‘அப்படி ஒண்டுமில்லை. நீங்கள் ஏன் அப்பிடி நினைக்கிறியள். எங்களுக்கு இருக்கிறது ஒரு பிள்ளை. கொஞ்சம் வசதியாய்ச் செய்வமெண்டு நினைக்கிறம்…’’

அதைப் புறோக்கர் காதில் விழுத்திக் கொள்ளவில்லை. ‘‘சரி.. சரி நீங்கள் யோசித்து முடிவெடுத்துக் கொண்டு வந்து சொல்லுங்கோ.. நான் வாறன்’’ என்று கூறிப் புறப்பட்டார்.

“மாப்பிளை தவறாய் நினைக்க மாட்டாரே? அதோடை புறோக்கற்ரை கதையும் அவ்வளவு சரியில்லை. இவர்கள் காசுக்காக எதையும் செய்வார்கள். சில நேரம் பிள்ளையைப் பற்றியும் எங்களைப் பற்றியும் கூடாமல் சொல்லிப் போட்டால் என்ன செய்யிறது?” மனோன்மணி வேதனையோடு கேட்டாள். அவளின் குரல் தளர்ந்து, கண்களில் நீர் முட்டியது.

“நாங்கள் என்ன அப்பிடிப் பேசீட்டம். வீட்டிலை வ்ற முதல் சுபகாரியம் எங்களைப் பற்றிக் கூடாமல் சொல்லுறத்தை மாப்பிளை நம்பிறதெண்டால் அந்த மாப்பிளை எங்களுக்கு என்னத்திற்கு.. நாளைக்கு திருமணமானாப் பிறகும் ஆரன் அப்பிடிச் சொல்லிட்டினை எண்டு சொல்லிச் சௌமியாவுக்குக் கரைச்சல் குடுப்பர். எல்லாம் விதிப்படிதான் நடக்கும். எழுதின எழுத்தை மாத்த ஆராலும் முடியாது எண்டு நம்பிறவன் நான். எனக்கு என்ரை பிள்ளையார் துரோகம் செய்யமாட்டார். அதோடை எழுத முன்னம் மாப்பிளை இஞ்சை தங்கிறதோ சாப்பாடு கொடுக்கிறதோ எனக்கு விருப்பமில்லை. நாங்கள் செய்யிறத்தை ஆலோசிச்சுத் தான் செய்யவேணும். நான் கலியாணம் செய்யேக்கை உம்மை எனக்கு கலியாணப் பந்தலிலைதான் தெரியும். அந்த நாளையிலை தாய், தகப்பன் தான் மாப்பிளை பொம்பிளையளைப் பார்த்து முடிவெடுக்கிறது… இந்த நாளிலை அவன் சொன்னமாதிரி மோட்டார் சைக்கிளிலை மாப்பிளையும் பொம்பிளையும் போய் சீலை எடுக்கிறதாலை தான் சமூகத்திலை குடும்ப உறவு கேவலமாய்ப் போய் நிக்குது… பெற்றார் தான் பெத்த பிள்ளைக்கு கெட்டதைச் செய்வினமோ..?”

கந்தசாமி உணர்ச்சிப் பிழம்பாகத் தோன்றினார். மனோன்மணி எதுகும் பேசவில்லை. பேசினாலும் அவர் ஏற்றுக் கொள்ளமாட்டாரென்பது அவளுக்குத் தெரியும். அவரின் விருப்பத்திற்கு மாறிக்கதைத்தால் கல்யாணம் நின்றாலும் நின்று விடும்.

“எந்த ஒரு செயலுக்கும் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன இருக்க வேணும். ஒழுக்கம் கட்டுப்பாடில்லாத எதுகும் உருப்படமாட்டாது. இரண்டு வரிசத்துக்கு முந்தி லண்டனிலை இருந்து சின்னத்துரையின்ர இளையவன் வந்து நவரத்தினத்தின் மோளுக்கு எழுதிப்போட்டு மூன்று மாதம் குடும்பமாய் இருந்திட்டு, அடுத்த மாசம் வந்து கூட்டிக் கொண்டு போறன் எண்டு போனவன் இண்டு வரை ஆள் வரரேல்லை… விசாரிச்சுப் பார்த்தால் அங்கை ஆரோ ஒருத்தியைச் செய்து மூண்டு பிள்ளை இருக்காம்..”

“விசர்க்கதை கதையாதைங்கோ அதுகளின்ரை காதிலை எட்டினால் பொல்லோடை வந்திடுங்கள்..”

அப்போது தான் அவருக்கு தான் விட்ட தவறு புரிந்தது… நவரத்தினம் ஒரு மாதத்திற்கு முன்னம் ஒரு நாள் வந்து அவரிடம் இதைச் சொல்லி அழ, அவர் ஆறுதல் கூறி அனுப்பியிருந்தார்.

‘இஞ்சேரும் நவரத்தினம் தான் எனக்கு அண்டைக்கு வந்து சொல்லி அழுதது… நீர் ஆருக்கன் பறைஞ்சு போடாதையும்..’ கெஞ்சினார் கந்தசாமி.

“அப்பிடியே..? ஆனால் எங்கடை மாப்பிளை தங்கமான பிள்ளையெண்டு உங்கடை அண்ணை சொன்னவர்…”

“இஞ்சைபார் இந்தக் கையை. அஞ்சுவிரலும் ஒரு மாதிரியே இருக்கு…. ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரி.. எண்டாலும் எழுத்து முடிய முன்னம் மாப்பிளை இஞ்ச வந்தால் சௌமியாவோடை கதைக்கச் சிரிக்கத் தொட முயலுவார்.. அது சரியில்லை..”

குசினிக்குள் இருந்த சௌமியாவுக்கு அது கேட்டது.

“பெரியவர்கள் நல்ல காரியங்களுக்கெல்லாம் நாள்க் குறித்து வைத்திருக்கிறார்கள். வருடாவருடம் விதைக்கும் விதைப்புக்கே நாள்ப் பார்த்துத்தான் விதைக்கிறம்…. கலியாணம் ஆயிரம் காலத்துப் பயிர்.. நாள்ப் பார்த்துத்தான் எதுகும் செய்ய வேணும்… நாகரீகம் முன்னேற்றம் அடைந்திட்டுது என்று சொல்லி சனம் தலைகீழாக நடக்கிறத்தாலைதான் இண்டைக்கு சமூகத்திலை பெரும் துன்பங்கள் நேருது… எழுத்துக்கு முன்னம் மாப்பிளை வந்தால் கதைக்க சிரிக்க தொட முயலுவார். அதுக்கு பிறகு ஒண்டு நடந்தால்..”

சௌமியாவின் உடல் நடுங்கியது.

அன்று காலையில் இருந்தே நகரில் பதட்டம் நிலவியது. காலையில் மக்களைத் துயிலெழுப்பியதே புக்காரா விமானங்களின் இரைச்சலும், குண்டுச் சத்தங்களும்தான்.

குண்டுகளோடு வந்த விமானங்கள் குண்டுகளைப் போட்டுவிட்டுச் சென்றன.

எட்டுமணிக்கு நகரம் வழமைக்கு திரும்பி விட்டது. காலையில் விமானங்கள் வந்தால் பின்னேரம் தான் திரும்பி வருவது வழக்கம். அதனால் மக்கள் தங்கள் கருமங்களுக்குப் புறப்பட்டு விட்டனர்.

திடீரென்று பத்து மணி போல் வானில் பேரிரைச்சல். சௌமியாவின் அலுவலகப் பக்கமாக இரண்டு குண்டுகள் விழுந்து வெடித்துச் சிதறின. அருகில் பெரியதொரு பாடசாலையும் இருந்தது.

சௌமியா இயல்பாகவே பயந்தவள். அருகில் குண்டுகள் விழுந்து வெடித்தால் கேட்கவா வேண்டும். அலுவலகத்தின் அருகில் நின்ற மரத்தின் கீழ் நடுங்கிக் கொண்டு நின்றாள். நாலைந்து அலுவலக நண்பர்கள் அவளுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறிக் கொண்டு நின்றனர்.

அப்போது அங்கே திவாகரன் பரபரப்புடன் வந்தான்... ‘‘எனக்குத் தெரியும் நீர் பயப்படுவீரெண்டு.... அதுதான் ஓடி வந்தனான்...’’

‘‘புக்காரா போயிட்டுது.. பயந்தால் நீர் வீட்டபோம்...’’ என்றார் மேலதிகாரி.

சௌமியா திவாகரனுடன் வீட்டுக்குப் புறப்பட்டாள். வீதியால் வரும் போது அடிக்கடி வானத்தைப் பார்த்துக் கொண்டு வந்தாள்.

‘‘இராத்திரி கடலிலை ஏதோ பிரச்சினையாம்... அது தான் இரண்டு தரம் வந்திட்டுப் போறான்’’ என்றான் திவாகரன்.

‘‘அடுத்த முறை வாறத்துக்கிடையிலை வீட்டை போயிடனும்’’

‘‘இனி வரமாட்டான்...’’

‘‘இப்ப வவுனியா ஏயாபோட்டிலைதானாம் குண்டு கொழுவுறது. பத்து நிமிசத்துக்குள்ளை வந்திடுவன்..’’ என்றாள் சௌமியா.

வீதியில் சனநடமாட்டமே இல்லை. வெறிச்சோடிக் கிடந்தது. திடீரென்று வானில் பேரிரைச்சல். சௌமியா கதிகலங்கிப் போனாள்… “ஐயோ திவா புக்காரா வந்திட்டுது என்றவள் தடுமாறி வீதியில் விழுந்தாள்” திவாகரன் சைக்கிளை நிறுத்தி விட்டு ஓடி வந்தான்.

“சௌமியா பயப்பிடாதையும் பக்கத்திலை மதவு இருக்கு அதுக்குள்ளை உள்ளட்டு இருப்பம் எழும்பும்..”

“தம்பீ.. படு.. படு.. பதியுறான் குண்டு போடப்போறான்..” வீதியில் படுத்திருந்த ஒருவன் கத்தினான்.

எழும்பிய சௌமியாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மதவுப்பக்கமாக ஓடினான் திவாகரன்.

“ஓடாதை.. விழுந்துபடு..” வீதியில் படுத்திருந்தவன் கத்தினான்.

வீதியின் அருகில் ஓர் பெரிய மாடி வீடு இருந்தது. அதை நோக்கிப் பதிந்து கொண்டிருந்தது புக்காரா.

மதவுக்குள் ஒருவருமில்லை. இருவரும் குப்புறப்படுத்தனர். சௌமியா திவாகரனை இறுக்கக் கட்டிப்பிடித்துக் கொண்டாள். அவளின் உஸ்னமான மூச்சுக் காற்று அவனின் உதடுகளில் பட்டுக் குளிர்ந்தது.

மிகப் பயங்கரமான சத்தத்துடன் இரண்டு குண்டுகள் வெடித்துச் சிதறின. சௌமியா பிடியை இறுக்கினாள்.

திவாகரன் பயப்படவில்லை. அவன் விமானங்கள் குண்டு போடும் போது அவற்றைப் பார்த்து அவை எங்கே குண்டு போடுகின்றன என்று சொல்வான்.

மதவு மிகவும் துப்பரவாக இருந்தது. தெருவால் சென்று வருகின்ற மக்கள் பாதுகாப்பாகத் தங்குவதற்காக அயலில் உள்ளோர் மதவுகளைத் துப்பரவு செய்து வைத்திருந்தனர்.

“அங்கைபாரும்.. உமக்கு வேண்டியவையெல்லாரும் மதகுச் சுவரிலை இருக்கினை..”

சௌமியா திரும்பிப் பார்த்தாள். பிள்ளையார், முருகன், அம்மனின் படங்கள் மதகுச் சுவரில் ஒட்டப்பட்டிருந்தன.

“உங்களுக்குப் பகிடி..”

“இதில என்ன பகிடி இருக்கு. மக்கள் தாங்கள் குடியேறுகிற இடங்களிலை கோவில்களைக் கட்டுறது வழக்கம்… இப்ப பாரும் ஜேர்மன், கனடா, லண்டன் நகரங்களிலை கோவில்கள் கட்டுறார்கள்.. இஞ்சை மக்கள் வாழுறது மதகுகளுக்குள்ளையும் பங்கருக்குள்ளையும் தானே.. அதாலை ஒட்டியிருக்கு.. அது தான் மனித இயல்பு..” என்றவனை சௌமியா நிமிர்ந்து பார்த்தாள். அவளது கன்னங்கள் அவனது உதடுகளுக்கு மிகவும் அருகாமையில் இருந்தன.

சத்தம் குறைய திவாகரன் சௌமியாவின் பிடியில் இருந்து விலகி மெல்ல வெளியே வந்து வீதியைப் பார்த்து விட்டுச் சொன்னான், “வாரும் போவம்…” என்று.

வெளியே வந்த சௌமியாவால் திவாகரனின் முகத்தைப் பார்க்க முடியவில்லை. அவனின் சேட் பொக்கற்ரின் மேல் கறுப்பாக ஏதோ தெரிந்தது… சௌமியா உற்றுப் பார்த்தாள். அது அவளுடைய நெற்றியில் இருந்த ஒட்டுப் பொட்டு… சௌமியாவின் பார்வைபட்ட

இடத்தை நோக்கிய திவாகரனுக்குச் சிரிப்பு வந்தது. சிரித்தபடி பொட்டை எடுத்து, ‘‘கையிலை தரட்டா இல்லை நெற்றியிலை வைக்கட்டா’’ என்று கேட்டான்.

‘‘என்னடி கல்லாய்ப் போனாய்’’ என்றவாறு சௌமியாவின் தோளைத் தனது கைகளால் பற்றிக் குலுக்கினாள் கார்த்திகாயினி.

‘‘ஒண்டுமில்லை’’ தடுமாறினாள் சௌமியா.

‘‘எனக்கொரு யோசனை வருது. திவான்ரை அம்மாக்கு எல்லாம் தெரியும்தானே. அவாவைச் சந்திச்சு ஆலோசனை கேட்டுப் பாப்பம்..’’

‘‘நேற்று நான் அவாவைச் சந்தித்தனான். செஞ்சிலுவைச் சங்கத்தோடை கதைக்க வேணுமெண்டவா.. சந்தித்துப் பாப்பம்’’ என்றாள் கார்த்திகாயினி.

‘‘செஞ்சிலுவைச் சங்கத்துக்கு எத்தனை தரம் போயாச்சு.. சொன்னதைத்தானே திரும்ப திரும்பச்சொல்லினை.. புரோக்கரை விட அம்மா அவசரப்படுகிறா..’’ என்றாள் சௌமியா.

‘‘திவான்ரை அம்மாவோடை கதைச்சுப் பாப்பம்..’’ என்றவள் சில கணங்கள் யோசித்து விட்டு ‘‘அவாட்டைச் சொல்லி உன்ரை காதல் பிரச்சினையை அப்பாவுக்குச் சொன்னாலென்ன…?’’ என்று கேட்டாள் கார்த்திகாயினி.

‘‘நான் இடம்பெயர்ந்து இருக்கேக்கை திவாட்டை பல தரம் சொன்னனான். அப்பாவோடை இதைப் பற்றிக் கதைக்கச் சொல்லி. அவர்

படிப்பு முடியட்டும் என்றவர். அதோடை தான் நூறுவரிசம் வாழுவன் என்றும் சொன்னார்..'' விம்மினாள்.

''சரி.. சரி.. அழாதை எதுக்கெடுத்தாலும் அழுகை தான்.. எழும்பு முகத்தைக் கழுவிக் கொண்டு வா.. அவா ஓர் ஆசிரியையாக இருந்தவா… வயதுபோனவா.. நல்ல யோசனையாய்ச் சொல்லுவா.. நாங்கள் பிரச்சினையை யோசிச்சு யோசிச்சு மண்டையை உடைக்கிறதை விட இன்னொருத்தரோடை பங்கிர்றது நல்லது… நான்போய் வெளிக்கிர்றன்.. கெதியாய் வா..'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள் கார்த்திகாயினி.

# 10

சௌமியா வெளிக்கிட்டுக் கொண்டு வந்து மனோன்மணியிடம் சொன்னாள், ''நான் ஒருக்கால் கார்த்திகாயினி வீட்டை போட்டுவாறன்'' என்று.

சில கணங்கள் யோசித்த மனோன்மணி, ''தலைக்கு மேலை வேலை இருக்கு கெதியாய் வா..'' என்றவள் சிறிது தாமதித்து விட்டுச் சொன்னாள், ''நாளைஞ்சு நாளைக்கு கார்த்திகாயினியை இங்க வந்து நிற்கச் சொல்லு…'' என்றாள்.

''சரி''

சௌமியா புறப்பட்ட போது மேசன்மாரும், வீட்டுக்குப் பெயின்ற் அடிப்பவர்களும் வந்தனர்.

சௌமியா, கார்த்திகாயினியின் வீட்டுக்கு வந்து, அவளையும் கூட்டிக் கொண்டு திவாகரனின் வீட்டுக்கு வர காலை ஒன்பது மணியாகி விட்டது.

திவாகரனின் தாய் சரஸ்வதியும் ரவீந்திரனும் அவர்களைக் கண்டதும் போட்டிக்கோவில இருந்து வெளியே வந்தனர்.

நால்வரும் புறப்பட்டுச் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திற்கு வந்த போது ஏராளமான மக்கள் அங்கே குழுமியிருந்தனர்….

சரஸ்வதியைக் கண்டதும் நாலைந்து பெண்கள் எழுந்து வந்தனர்.

“அதிகாரியைச் சந்திச்சிட்டியளே…?” சரஸ்வதி, சிவகாமி என்ற பெண்ணிடம் கேட்டாள்.

சிவகாமியினுடைய மகனைக் கைது செய்து ஒரு வருடத்திற்கு மேலாகிறது. பல முறை அவ்வலுவலகத்தில் சந்தித்ததால் இருவரும் நண்பிகளாகியிருந்தனர்.

“இன்னும் அதிகாரி வரல்லை.. ம்.. என்னத்தைச் சொல்லப் போயினை… கொமாண்டரைச் சந்திக்கிறம், விசாரிக்கிறம் அடுத்த கிழமை வாருங்கோ எண்டு தானே..” அலுத்துக் கொண்டாள் சிவகாமி.

“அவையும் என்ன செய்யிறது..? விசாரிக்கிறவைதானே.. அவையிலையே விசயமிருக்கு மேலே உள்ளவை ஒழுங்காய்ப் பதில் சொல்ல வேணுமெல்லோ…” என்றாள் சரஸ்வதி.

சிறிது நேரம் கதைத்துக் கொண்டு இருந்து விட்டு அந்தப் பெண்கள் சென்று விட்டனர். ரவீந்திரன் மரத்துக்குக் கீழ் யாரோ ஒருவருடன் கதைத்துக் கொண்டு நின்றான்.

சரஸ்வதியும், கார்த்திகாயினியும் சௌமியாவும் அருகருகே இருந்தனர். சரஸ்வதிக்கு சௌமியாப் பார்க்கப் பார்க்க துயரம் கட்டு மீறியது.

திவாகரன் சரஸ்வதியின் இளைய புதல்வன். மற்றைய பிள்ளைகள் வெளிநாட்டுக்குப் போனதால் அவன் மீது உயிரையே வைத்திருந்தாள். திவாகரன் தாயின் மீது அளவு கடந்த பாசம் வைத்துள்ளமையால் தன்னுடைய காதல் விசயத்தையும் ஒரு நாள் சொல்லி விட்டான்.

“பெண்ணையும் பார்த்து குலங்கோத்திரமெல்லாம் விசாரிச்சுத் தான் சம்மதிப்பேன்” என்றாள் சரஸ்வதி.

விசாரித்துப் பார்த்ததில் அவளுக்கு பரமதிருப்தி. ஒரு காலத்தில் தன்னோடு கற்பித்த கந்தசாமி மாஸ்ரரின் மகள் என்றதும் மறு பேச்சின்றி சௌமியாவைக் கட்டச் சம்மதித்து விட்டாள்.

ஒரு நாள் சௌமியாவை வீட்டுக்குக் கூட்டி வந்து தாய்க்குக் காட்டினான் திவாகரன்.

அதன் பின்பு சௌமியாவை அடிக்கடி வீட்டுக்கு வரச்சொல்லி வற்புறுத்துவான். சரஸ்வதி இரண்டு மூன்று நாட்கள் காணாவிட்டால் வீதியில் வந்து நின்று சௌமியா அலுவலகத்தால் வரும் போது வீட்டுக்குக் கூட்டி வந்து விடுவாள்.

வீட்டில் விசேடமாக ஏதாவது சமைத்தால் பாசல் பண்ணி வைத்துக் கொண்டு வீதியில் நிற்பாள். அந்தளவில் சௌமியா மீது உயிரையே வைத்திருந்தாள் சரஸ்வதி.

இடம்பெயர முன்பு தான் கந்தசாமி மாஸ்ரர் வீட்டை போய் பெண் கேட்கப் போறன் என்று அடிக்கடி திவாகரனுக்குச் சொல்லுவாள்.

திவாகரன்தான் படிப்பு முடியட்டும் என்று சொல்லுவான்.

இதனால் இரண்டு பேருக்கும் இடையில் அடிக்கடி வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறும். உச்சக்கட்டம் அடைந்தால் சமையல் நடைபெறாது. இரண்டு நாளைக்கு திவாகரன் கடையிலே பாசல் கட்டி வந்து தாய்க்கும் கொடுத்து தானும் சாப்பிடுவான். மூன்றாம் நாள் சௌமியாவைக் கூட்டிவருவான்.

சௌமியாவைக் கண்டதும் சரஸ்வதி உருகிப்போவாள். ‘‘மாமின்ரை கோழிக்கறி நல்ல ருசி.. இண்டைக்கு நான் இஞ்சைதான் சாப்பிடப்போறன்’’ என்பாள்சௌமியா.

உடனே சரஸ்வதி ‘திவா, கூட்டுக்கை நிக்கிற பெரிய சேவலைப் பிடிச்சு உரிச்சுத்தா’’ என்பாள். அத்துடன் பிரச்சினை தீர்ந்துவிடும்.

இப்ப மகனை இழந்ததோடை மட்டுமல்லாமல், மருமகளையும் யாரோ ஒருத்தன் கொத்திக் கொண்டு போக வந்திருக்கிறான் என்பதை நினைக்க அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

தான் வணங்கும் தெய்வங்களையெல்லாம் சபித்தாள், “சௌமி எனக்கு உலகமே வெறுத்துப் போச்சு…” கண்கள் கலங்கி உடைப்பெடுத்தோட பேச முடியாது தடுமாறினாள் சரஸ்வதி.

சௌமியா, சரஸ்வதியின் முகத்தையே வெறித்து நோக்கியபடி இருந்தாள், அவளின் கண்களாலும் கண்ணீர் பெருகிக் கொண்டு இருந்தது.

சௌமியா பல தடவைகள் தான் மிகவும் அதிஷ்டம் செய்தவள் என்று நினைத்து மனதுக்குள் பெருமைப்பட்டிருக்கிறாள். தன்னை உயிருக்குயிராக நேசிக்கும் கணவன், உயிருக்கும் மேலாக நேசிக்கும் மாமியார். ‘இதைவிட ஒரு பெண்ணுக்கு வேறு என்ன வேண்டும்..’ என்று நினைத்து அம்மனுக்கு நன்றி கூறி இருக்கிறாள். ஆனால் இப்பொழுது..?

அவளின் தகப்பனார் அடிக்கடிசொல்லும் வார்த்தைகள் அவளின் நினைவுக்கு வந்தன. ‘நீங்கள் தான் உலகத்திலை புது ஆள்.. எல்லாத்துக்கும் நேர்மை.. நேர்மை.. நேர்மை.. எண்டு கொண்டு.. ஊரிலை பஞ்சமா பாதகங்களைச் செய்யிறவங்கள் தான் நல்லாயிருக்கிறாங்கள்..” என்று மனோன்மணி அடிக்கடி கூறும் வேளைகளில் கந்தசாமி அமைதியாகக் கூறுவார்.

“இஞ்சை பாரப்பா… உலகத்திலை நிதானம், கண்ணியமாவாளுறவர்களுக்குத்தான் சோதனைகள் அதிகமாக வரும்…. எண்டில்லை. எல்லோருக்கும் வரும். அதைக் கையாளுற விதம் தான் நேர்மையானவனுக்கும் நேர்மையில்லாதவனுக்கும் உள்ள வித்தியாசம். நேர்மையில்லாதவன் எப்படியும் வாழுவான். ஆனால் நேர்மையானவன் இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழுவான். அதாலைதான்

சோதனைகள் வருது. நேர்மையில்லாதவனைப் பற்றி ஊருக்கை ஆர்கதைக்கப் போறாங்கள். அவன்ரை குடும்பமே அப்படித்தான்.. அந்தக் கதையை விடு என்பார்கள். அதே செயலை நான் செய்தால் என்ன சொல்லுவார்கள்.... சாய் கந்தசாமிமாஸ்ரர் எவ்வளவு நேர்மையானவர்... இப்பிடிச் செய்வாரெண்டு நாங்கள் கனவு கூடக் காணேல்லை.... அவற்றை தாய் தகப்பன்ரை பெயரைக் கெடுத்திட்டார் என்பார்கள். அதோடை வரலாற்று ரீதியாக எடுத்துப் பார்த்தால் அரிச்சந்திரன் போன்ற அதி உத்தமர்களுக்குத் தான் பெரும் சோதனைகள் ஏற்பட்டது... அவர்கள் நீதி வழுவாமல் நின்றமையால் தான் ஆயிரமாயிரம் ஆண்டுகள் சென்றும் மக்களின் உள்ளங்களிலை வாழ்கிறார்கள்...''

நினைத்துப் பார்த்தால் அப்பா சொல்வதில் நியாயம் இருப்பதாகச் சௌமியாவுக்குத் தோன்றியது.

அவர்களின் அருகே கைக்குழந்தையுடன் ஒரு பெண் தனியே இருந்து அழுது கொண்டிருந்தாள். குழந்தை வீரிட்டு அழுதது.

‘‘குழந்தைக்குப் பசியாக்கும் பால் குடு பிள்ளை'' என்றாள் அருகில் இருந்த மூதாட்டி ஒருத்தி.

‘‘நீங்கள் ஆர் இந்தப் பிள்ளையின்ரை அம்மாவே...'' அருகில் இருந்த பெண் ஒருத்தி கேட்டாள்.

‘‘இல்லைப் பிள்ளை'' என்று பெருமூச்சு விட்ட அந்த மூதாட்டி தொடர்ந்து சொன்னாள். ‘‘என்னுடைய வீட்டிலைதான் இந்தப் பெண் குடியிருக்கிறாள். ஆறு மாசத்துக்கு முன்னம் இவளின்ரை புருசனை வீட்டை வந்து பிடிச்சவங்கள்.... இன்னும் அவனைப் பற்றிய

தகவலொண்டும் தெரியாது… பெட்டை தாய், தகப்பனை வெறுத்து அவனோடை வந்திட்டுது.’’

இரண்டு வீட்டுக்காரரும் இவர்களைச் சேர்க்கேல்லை. அப்ப வரேக்கை வீடு குடுத்ததால் நான் தான் பார்க்கிறேன்.

‘‘உங்களுக்கு பிள்ளைகள் இல்லையே’’

‘‘ஒண்டுக்கு நாலு இருக்கு.. ம்… என்ன பிரியோசனம்..’’

‘‘ஏன் கவனிக்கிறேல்லையே…?’’

‘‘நாலும் நாலு நாட்டிலை இருக்கிறாங்கள். அவரும் செத்துப் போனார்…. காசு காசாய் அனுப்புறாங்கள்.. ஆனால் கவனிக்கிறத்துக்குத் தானே ஆள் வேணும்.. போன கிழமை கிணத்தடீலை சறுக்கி விழுந்து போனன். இந்தப் பிள்ளையும் ஏதோ அலுவலாய் வெளியிலை போயிட்டுது என்னாலையும் எழும்ப முடியேல்லை. கத்திக் கொண்டு இரண்டு மணித்தியாலமாய்க் கிடந்தனான். பிறகு பிள்ளை வந்து தான் என்னைத் தூக்கினது.. தற்செயலாய்க் கிணத்துக்கை விழுந்திருந்தால் பிரேதமாய்த்தான் மிதந்திருப்பன். எங்கடை நாட்டைப் பொறுத்தமட்டிலை பிள்ளைகளைப் பெறுவது பாவம்..’’

‘‘பிள்ளையள் ஒண்டோடை போகலாம் தானே..’’

‘‘போறதெண்டால் லேசுப்பட்ட வேலை? போய்ப் பார்த்தால் தான் தெரியும். இரண்டு வரிசத்துக்கு முன்னம் வரச் சொல்லிப் போய்க் கொழும்பிலை மூண்டு மாதம் நிண்டனான்… நரகலோகம்…எப்படி அங்கை சீவிக்கிறாங்கள். ஆறடி அறைக்கத்தான் சீவியம் அப்பப்பா..

அகோரவெக்கை இராப்பகலாய் பானுக்குக் கீழைதான் இருக்க வேணும்.. இயற்கைக் கடனைக் கழிக்கிறதெண்டால் கூட கியூவிலைதான் நிற்கவேணும்.. அதைவிடச் சாப்பாடு.. கறுமம்.. கறுமம்... இந்தப் பிள்ளையின்ரை கையாலை ஒருபிடி சோறு தின்னுற மாதிரி வராது... ஒரு வழியிலை இந்தப் பிள்ளையை இரண்டு பகுதியும் சேர்க்காததும் நல்லதுதான்... இல்லாட்டில் என்ரை பாடு பெரும் பாடாய்த்தான் இருக்கும்.''

திடீரென்று அங்கு பரபரப்பு ஏற்பட்டது. மேலதிகாரி வானால் இறங்கி அலுவலகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

ஏராளமான மக்கள் அங்கு நின்றனர். வரச்சொல்லி கடிதம் அனுப்பினவர்களையும் புதிதாக பிரச்சினைகள் காரணமாக வந்தவர்களை மட்டுமே அதிகாரி சந்திப்பார். மற்றவர்கள் ஏதாவது செய்தி வந்திருக்குமா என்று பார்த்துக் கொள்ள வருவார்கள்.

மேலதிகாரிக்கு தமிழ்மொழி பெயர்ப்பாளராக கடமையாற்றும் தமிழ் அதிகாரி அலுவலகத்தை விட்டு வெளியே வந்து மக்களுக்குச் சொன்னார், ``இன்று புதிதாகச் சொல்வதற்குச் செய்திகள் எதுவும் இல்லை. நாங்கள் வரச் சொல்லிக் கடிதம் அனுப்பிய இருவரை மட்டும் மேலதிகாரி சந்திப்பார். மற்றவர்கள் போகலாம்..''

சனங்கள் கலையத் தொடங்கினர். சிறிது நேரத்தில் கைக் குழந்தையோடு நின்ற பெண்ணும் மூதாட்டியும் இன்னுமொருவரோடு சரஸ்வதியும் அவரோடு வந்த மூவரும் நின்றனர்.

சரஸ்வதி தனது நிலையை விளக்கி கடிதம் கொடுத்திருந்தமையால் அவளை மேலதிகாரி நிற்கும்படி கூறியிருந்தார். நிமிடங்கள் கரைந்தன.

“மிசிஸ் சகுந்தலா ரமணன் வாருங்கோ..” தமிழ் அதிகாரி அழைத்தார்.

கைக் குழந்தையோடு நின்ற பெண்ணும் மூதாட்டியும் உள்ளே சென்றனர்.

பத்து நிமிடங்களின் பின் அப்பெண் மகிழ்வுடன் வெளியே வந்தாள்.

“மிஸ்ரர் ஆர்.நடேச பிள்ளை வாருங்கோ…” தமிழ் அதிகாரி அழைத்தார்.

ஒரு நடுத்தர வயதுள்ள நபர் உள்ளே நுழைந்தார்.

“நான் கும்பிட்ட தெய்வங்கள் என்னைக் கைவிடேல்லை. அவர் வெளிக்கடைச் சிறையிலை இருக்கிறாராம். அடுத்த கிழமை விடுவினையாம்…” சகுந்தலா சொல்லிக் கொண்டு வெளியே வந்தாள்.

“அம்மாளே.. அவரும் இருக்க வேணும்…” சௌமியா கண்களை மூடினாள். அவளின் கண்களுக்குள் அம்மனின் திருவுருவம் தெரிந்தது. செந்தில் வேல் குருக்கள் பஞ்சாரத்தி காட்டிக் கொண்டிருந்தார். கூழா மரத்தின் பொந்திலிருந்து வெள்ளை நாகம் மெதுவாக இறங்கி வந்து கொண்டிருந்தது.

“மிசிஸ் சரஸ்வதி வின்னேஸ்வர மூர்த்தி வாருங்கோ…”

சரஸ்வதி எழுந்து “வாருங்கோ…” என்று தன்னுடன் வந்த மூவரையும் பார்த்துக் கூறியபடி “சௌமியா எழும்பம்மா…” என்று சௌமியாவின் தோள்களைப் பற்றினாள்.

சௌமியா திடுக்கிட்டு எழுந்தாள். அவளின் கண்களில் தேங்கி நின்ற கண்ணீர் கன்னங்களில் குதித்து விழுந்தது.

# 11

தாளலயம் பிசகாத சத்தத்துடன் மின்விசிறி சுழன்று கொண்டிருந்தது. எனினும் சௌமியாவுக்கு வியர்த்துக் கொட்டியது. வெள்ளைக்கார மேலதிகாரிக்கு அருகில் வெள்ளைக்காரனைப் போல் உடையணிந்து அமர்ந்திருந்தார் தமிழ் அதிகாரி.

சரஸ்வதி மனதில் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி வைத்திருந்தவற்றை தமிழ் அதிகாரியிடம் ஒப்புவித்தாள்.

தமிழ் அதிகாரி அவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொல்லி முடித்ததும் வெள்ளைக்கார அதிகாரி சரஸ்வதியையும் சௌமியாவையும் மாறிமாறிப் பார்த்தார்.

“இது மிகவும் கொடுமையான விசயம்… நானும் காதலித்துத்தான் திருமணம் செய்தனான். காதலித்தவர்களுக்குத்தான் காதலின்ரை தன்மை விளங்கும். மற்றவைக்கு அது விளங்காது. போதனைதான் செய்வினை. நான் இந்த விடயத்திலை கூடிய அக்கறை எடுக்கிறேன். இரண்டு நாள்

கழிச்சு வாருங்கோ..'' என்று மேலதிகாரி ஆங்கிலத்தில் சொன்னதை தமிழதிகாரி தமிழில் சொன்னார்.

சௌமியா கனிவுடன் வெள்ளைக்கார அதிகாரியைப் பார்த்தாள். அவரின் அந்த அழகான முகத்திரை விலகி செந்தில்வேற் குருக்களின் முகம் தெரிந்தது.. ''பயப்படாதை சௌமியா. அம்மன் இருக்கிறா. உனக்கொரு தீங்கும் வரமாட்டாது. அம்மனிடம் பொறுப்பைக் கொடுத்து விட்டு தைரியமாகப்போ..'' என்று சொல்வதைப் போலிருந்தது.

''நான் அம்மனிட்டை எப்பவோ பொறுப்பைக் கொடுத்திட்டன்'' என்று அவளது வாய் முணுமுணுத்தது.

அவர்கள் அலுவலகத்தை விட்டு வெளியே வந்த போது நேரம் பன்னிரண்டு மணிக்கு மேலாகி விட்டது.

''நான் காலமை சமைச்சு வைச்சிட்டுத்தான் வந்தனான். வாருங்கோ எல்லாரும் சாப்பிட்டுட்டு போகலாம்'' என்று அழைத்தாள் சரஸ்வதி.

கார்த்திகாயினியும் சௌமியாவும் ஒன்றும் பேசவில்லை. ரவீந்திரன் தான் சொன்னான், ''நான் ஒருக்கால் யாழ்ப்பாணம் போகவேணும்..''

''இல்லை வந்து சாப்பிட்டுப்போம்.''

''அவசரமாக அலுவல் ஒண்டிருக்கு''

''வாடாப்பா..நான் ஒரு தேவையோடைதான் கேட்கிறன்..'' என்றாள் சரஸ்வதி.

ரவி பதில் கூறாமல் சைக்கிளை எடுத்துச் சரஸ்வதியின் வீட்டுப்பக்கம் செல்லும் திசையில் சென்றான்.

“மேலதிகாரியின்ரை கதையிலை இருந்து இந்த விசயத்திலை கொஞ்சம் அக்கறை காட்டுறார் போலை கிடக்கு..” என்றாள் கார்த்திகாயினி.

“நான் பல தடவைகள் அவரைச் சந்திச்சிட்டன்.. மிகவும் நல்லதொரு மனிசன்.. நாங்கள் சொல்லுறதெல்லாத்தையும் பொறுமையாய் இருந்து கேட்கிறாரே.... அதோடை முந்தநாள் சௌமிக்கு கலியாணம் பேசுறதையும், மாப்பிளை கனடாவிலை இருந்து வந்து நிற்கிறார். அஞ்சு பத்து நாளிலை கலியாணங் கட்டிக் கொண்டு போயிடுவார். பிறகு முடிவு சொல்லியும் பிரியோசனம் இல்லை. தயவு செய்து சீக்கிரமாய் முடிவைச் சொல்லுங்கோ எண்டு கடிதம் எழுதிக் குடுத்தனான்... எல்லாம் அவரவற்றை தலையெழுத்து. எழுதாத விதிக்கு ஆரை நொந்தும் என்ன பலன்...”

அம்மாளிலை எனக்குப் பூரணமான நம்பிக்கை இருக்கு. அம்மாள் கடைசி வரைக்கும் சௌமிக்கு துன்பஞ் செய்யமாட்டா... எனக்.. கெண்டால் அந்தப் பொம்பிளையின்ரை புருசன் வெலிக்கடைச்சிறைச்சாலையிலை இருக்கிற மாதிரி திவாவும் எங்கையோ ஒரு இடத்திலை இருப்பார்..” என்றாள் கார்த்திகாயினி.

“நீ சொல்லுற மாதிரி திவா எங்கையாவது இருந்து வந்திட்டால் அம்மனுக்கு என்ன வேண்டுமானாலும் செய்வன்.. கார்த்தி நீயே நேர்த்தி வை” என்றாள் சரஸ்வதி.

அதன் பின் நால்வரும் வீடு வரும் வரை எதுகும் பேசவில்லை. ஒவ்வொருவருடைய மனமும் பல்வேறு விதமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தது.

வீட்டுப் படலையைத் திறந்ததும் யாரோ என நினைத்துக் குலைத்துக் கொண்டு ஓடி வந்த நாய் சௌமியாவைக் கண்டதும் வாலை ஆட்டி ஊளையிட்டபடி அவளின் சைக்கிளின் மேல் முன்னங்கால்களைத் தூக்கி வைத்தது.

அந்த நாய்க்கு அவளின் மீது அளவு கடந்த பாசம். அவள் வரும் போது அதற்கு ஏதாவது ஒரு தின்பண்டம் கொண்டு வருவாள்.

இடம்பெயர்வுக்கு முன்பு அடிக்கடி வந்து போகும் அவள் திவாகரனைப் பிடித்த பின்பு மாதத்தில் ஓரிரு தடவைதான் வருவாள்.

அதுக்கும் காரணம் இருந்தது. சௌமியாவைக் கண்டதும் சரஸ்வதி, அவளைக் கட்டிப் பிடித்து ஒப்பாரி வைத்தழுவாள். வேதனையில் துவண்டு கொண்டிருக்கும் சௌமியாவுக்கு சரஸ்வதியின் செயல் துயரத்தை அதிகரிக்கச் செய்யும். இரண்டு மூன்று நாட்களுக்கு அந்த வேதனை மனதில் தேங்கி நின்று அவளைத் துன்புறுத்தும்.

கான்ட்பாக்கைத் திறந்து பிஸ்கற்றை எடுத்து நாய்க்குக் கொடுத்தாள். முன்பென்றால் கொடுக்க முன்பு கையைக் கௌவி வாங்கும் நாய் அன்று மணந்து கூடப் பார்க்கவில்லை.

“பசிக்கேலையா?” என்று கேட்டு விட்டு பிஸ்கற்றை நிலத்தில் போட்டாள் சௌமியா.

அதைக் கவனித்த சரஸ்வதி சொன்னாள், “சாப்பாட்டைக் குறைச்சிட்டுது.. இரா முழுக்க ஊளையிட்டபடி.. எனக்கென்னவோ பயமாயிருக்கு..”

அவளின் குரலைக் கேட்டதும் கத்திக் கொண்டு வரும் பூனையை அன்று காணவில்லை.

“பூனை எங்கை மாமி”

சௌமியா மாமி என்றதும் ஒரு கணம் தடுமாறினாள் சரஸ்வதி.. “இண்டைக்கி மாமி.. நாளைக்கி..” அவள் மனம் ஓலமிட்டது.

“பூனையை மூண்டு நாளாய் காணேல்லைப் பிள்ளை. அந்தப் பூனை அவனிலை உயிரையே வைச்சிருக்கு. அவன் வீட்டிலை இருந்தால் அவனோடைதான் திரியும்..

## 12

“திவான்ரை அம்மா இஞ்சை வந்து உன்னுடைய அப்பாவோடை கதைக்கப் போறதெண்டவாவெல்லே....?”

“ம்”

“இவ்வளவு காலமும் திவா உயிரோடை இருப்பன் எண்டு நினைச்சவாவாம். அவை அப்படிச் சொன்ன பிறகு இப்பதனக்கே

நம்பிக்கையில்லையாம்… வீணாய் அந்தப் பிள்ளையின்ரை வாழ்க்கையைக் கெடுக்க தனக்கு விருப்பமில்லையாம்.. எனவே உன்னை கனடா மாப்பிளையைச் செய்யட்டாம்..''

''அப்படிச் சொன்னவாவே..''

அதிர்ந்து போனாள் சௌமியா. அவளால் தனது காதுகளை நம்பமுடியவில்லை. கண்கள் பொங்கிவழிந்தன. ''அம்மளாச்சி தாயே..'' என அவளது உதடுகள் முணுமுணுத்தன.

''தான் இஞ்சை வந்தால் வீண் பிரச்சினைகள் வரலாம். ஆனபடியாலை தன்ரை விருப்பத்தை என்னைச் சொல்லச் சொல்லி சொன்னா. அதோட ஒரு பெண்ணைப் பெற்ற தாய் என்ற ஸ்தானத்திலே தான் இருந்து பார்த்தால்.. தன்ரை பிள்ளை கணவனை இழந்தாலும் மறுமணம் பற்றித்தான். தான் தீர்மானிப்பேன் எண்டும் சொன்னா..''

சௌமியாவின் உள்ளத்தில் ஒரு பெரும் பிரளயம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கார்த்திகாயினி தொடர்ந்து சொன்னாள், ''எங்கடை பிரதேசத்திலை இப்ப மரணம் தான் மலிஞ்சிருக்கு. எவ்வளவு பெண்கள் விதவையாய் இருக்கினை. ஒருவகையிலை பார்த்தால் நீயும் விதவைதான்.. இப்படிச் சொல்லுறன் எண்டு கோவிக்காதை.. ஒருத்தனை மனது விரும்பினால் அவன் கணவன் தானே… நீ மூன்று நான்கு வருடங்களாய்க் காதலிக்கிறாய்.. உடல் சேர்ந்து வாழாவிட்டாலும் மனம் சேர்ந்து வாழ்ந்திருக்கு…''

“அதை நீயே ஒத்துக் கொள்கிறாய் பிறகெப்படி நான் இன்னொருத்தரைச் செய்யிறது…”

“முன்னுக்கே நான் சொன்னனான் திவாவின்ரை தாய் தான் ஒரு பெண்ணைப் பெற்றதாயின்ரை ஸ்தானத்திலை இருந்தால் தனது மகள் கணவனை இழந்திருந்தால் மறுமணம் பற்றித்தான் சிந்திப்பன் எண்டு சொன்னவா. “என்னைப் பொறுத்தமட்டிலை விதவைகள் கட்டாயம் திருமணம் செய்ய வேண்டும். குணசிங்கத்தாற்ரை மோள் கலியாணம் செய்து ஆறாம் மாதம் செல்தாக்கி புரிசன் செத்துப் போனான். இப்ப மூன்று வயதுக் குழந்தையோடை சாப்பாட்டுக்கே கஸ்டப்படுகிறா.. ஆம்பிளைகளுக்கே உழைப்பில்லாத இந்த நாட்டிலை பெம்பிளை உழைக்கிறது எப்படி..? அதைவிட பலர் அவளைத் தவறாகப் பயன்படுத்த முயலீனை… அப்படி வாழுறத்தில் பார்க்க கலியாணம் செய்யிறத்திலை என்ன தவறு இருக்கு..” எனவே நீ திருமணம் செய்யத் தான் வேண்டும்.

“அது சரிப்பட்டு வராது..”

“திவா தன்ரை தங்கச்சியைப் பற்றி உனக்கு ஏதாவது அவளின்ரை கலியாணத்தைப் பற்றி…”

“இல்லை…”

“பார்த்தியா.. உனக்கு எவ்வளவு பெரியதொரு விசயத்தை மறைத்திருக்கிறார் என்று…”

சௌமியா அதிர்ச்சியுடன் கார்த்திகாயினியைப் பார்த்தாள். திவாவினுடைய தங்கச்சியாரைப் பதினெட்டு வயதிலை கலியாணம் செய்து குடுத்து வெளீலை அனுப்பினவை அதெண்டாலும் உனக்குத் தெரியுமே…

"ஓ…"

"அவள் ஆரோ ஒருத்தனைக் காதலிச்சிருக்கிறாள். அந்த விசயம் வெளிலை தெரிஞ்சவுடனை தமையன்மார் வெளிநாட்டிலை இருந்த ஒருத்தனுக்குச் செய்து குடுத்து வெளீலை அனுப்பீட்டினை.."

"உனக்கார் சொன்னது.."

"சரஸ்வதி மாமி தான் சொன்னவா.. அந்தப் பழிதான் இப்ப வந்து சூழ்ந்திட்டுது எண்டா. பொதுவாய் எங்கடை ஊரிலை காதலிக்கிறதென்பது பெரிய விசயமில்லை. பொடியள் வேலை கிடைக்கும் வரை இல்லாவிட்டில் வெளிநாடு போகும் வரை பொழுது போக்காய் பெட்டையளுக்குப் பின்னாலை சுத்தித்திரிவாங்கள். வேலை கிடைச்சிட்டா இல்லாட்டில் வெளிநாட்டுக்குப் போயிட்டால்….பணம் தான் பெரிசு.. காதலெல்லாம் சரி.." பெருமூச்சு விட்டாள் கார்த்திகாயினி.

சில நிமிடங்கள் மௌனம் நிலவியது. அந்த மௌனத்தைக் கலைத்தாள் கார்த்திகாயினி. "நானும் உன்ரை நிலையிலை தான் இருக்கிறன். நான் ஏ.எல் படிக்கேக்கை ஒருத்தரை விரும்பினான். அவர் வெளிநாடு போகு மட்டும் என்னைச் சுத்திக் கொண்டு திரிஞ்சார்.. நாலைஞ்சு கடிதமும் தந்தார். பிறகு வெளிநாட்டுக்குப் போனார் என்று நிறுத்திய கார்த்திகாயினி விம்மி விம்மி அழுதாள்.

சௌமியா அவள் அழுவதை வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

சிறிது நேரம் விம்மி விம்மி அழுதாள். பின் கண்களைத் துடைத்து விட்டுச் சொன்னாள், ‘‘என்ரை மனதுக்குள்ளே புதைந்திருந்து தினமும் என்னைக் கொன்று கொண்டிருக்கிற ஒரு விசயத்தை உயிர்த் தோழியான உனக்குக் கூட நான் மறைச்சிட்டன்.. அந்த நினைவு என்னைத் தினமும் கொல்லுது..’’

‘‘என்ன?’’ என்று சௌமியா கேட்காதது கார்த்திகாயினிக்கு சற்று மனவேதனையைக் கொடுத்தது.

பல நிமிடங்கள் எதுகும் பேசாமல் தலையைக் குனிந்திருந்த கார்த்திகாயினியின் தோள்களை ஆதரவுடன் பற்றினாள் சௌமியா.

‘‘என்னெண்டு சொல்லு’’

மீண்டும் சில கணங்கள் மௌனம் சாதித்த கார்த்திகாயினி பின்பு சொன்னாள், ‘‘வெளிநாட்டுக்குப் போகேக்கை அவர் என்னைத் தனிமையிலை சந்தித்தார். அவரது வாக்கை நம்பி நான் தவறாய் நடக்க உடன்பட்டிட்டன். இப்ப அவர் அங்கை கலியாணஞ் செய்து பிள்ளை குட்டிகளோடை வாழுறார். அவருக்காக நான் கலியாணங் கடடாமல் வாழ முடியுமே....?’’

அதிர்ந்து போனாள் சௌமியா. கார்த்திகாயினி அப்படி நடப்பாளென்று அவள் கனவு கூடக் காணவில்லை.

‘‘என்னாலை அப்பிடிச் செய்ய முடியேல்லை....’’

“உன்னை ஒண்டு கேக்கிறன் மறுமொழியைச் சொல்லு… எங்கடை ஊரிலை.. இல்லை.. நீ அறிஞ்சவரையிலை காதலிச்சுக் கலியாணம் கட்டினவை புரிசன் செத்தால் பெண்சாதியோ… இல்லை பெண்சாதி செத்தால் புரிசனோ உடன்கட்டை ஏறினவையே…? எல்லாம் போலி வாழ்க்கை…. காதலிச்சுக் கலியாணங் கட்டினவை எத்தினை பேர் சந்தோசமாய் வாழீனை…?” சற்று நிறுத்தினாள்.

“உன்ரை காதல் விஷயம் இன்னும் உன்ரை பெற்றோருக்குத் தெரியாது…. ஒழுக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற வட்டத்துக்குள்ளை வாழுகிற உன்ரை அப்பா உன்ரை காதலைப் பற்றி கேள்விப்பட்டால் என்ன நடக்கும்… வீணாய் நீயும் கஷ்ரப்பட்டு உன்ரை குடும்பத்தையும் கஷ்ரப்படுத்தாதே..!”

ஒருத்தரோடை மனம் விட்டுப் பழகிவிட்டு இன்னொரு வரைச்செய்ய என்ரை மனச்சாட்சி இடங் கொடுக்கேல்லை.

“நீ தவறாகப் பழகினனியா…?”

கார்த்திகாயினி வார்த்தையை முடிக்கு முன்பு பரபரப்புடன் குறுக்கிட்டாள் சௌமியா, “என்னை அப்பிடி நினைக்கிறாயே…?

“எனக்குத் தெரியும் நீ அப்பிடி நடக்கமாட்டாயெண்டு.. தவறாக நடக்காட்டில் இன்னொருத்தரைச் செய்யிறத்திலை தப்பில்லை!”

“தப்பில்லை.. அது துரோகம்..”

“எல்லாம் மனதைப் பொறுத்தது தான்.”

“நீ எதைச் சொன்னாலும் என்னாலை ஏற்றுக் கொள்ளளேலாது..”

“அப்ப என்ன செய்யப்போறாய்..? அப்பாவுக்குத் திருமணம் செய்யமாட்டன் எண்டு சொல்லுற துணிவு உனக்கு இருக்கா?”

“துணிவை வேறுயாரிடமிருந்தா பெற்றுக் கொள்ளுறது..? எல்லாம் தன்னாலை வரும். பலர் சமூகத்திலை ஏமாற்றி வாழ்கிறார்கள் என்பதற்காக என்னாலை ஒருத்தரை ஏமாற்ற முடியாது. தயவு செய்து இந்த விசயத்திலை நீ தலையிடாதை. எனக்கு என்ன செய்ய வேண்டுமென்று தெரியும்.”

“சௌமி தயவு செய்து செத்துக் போகாதையடீ.. இந்தக் கலியாணஞ் செய்ய விருப்பமில்லையெண்டால் விருப்பமில்லையெண்டு சொல்லு.. வேணுமெண்டால் நானே உன்ரை அப்பாக்குச் சொல்லுறன்..” விம்மி விம்மியழுதாள் கார்த்திகாயினி.

# 13

கந்தசாமி மாஸ்ரர் மிகவும் குதூகலமாக இருந்தார்.

ஹோலில் மாப்பிளை துவாகரன் அவனது பெரியப்பா பெரியம்மாவுடன் இன்னும் இரண்டு பெண்களும் இருந்தனர். அன்று சம்பிரதாய் பூர்வமாக அவர்கள் பெண்ணைப் பார்க்க வந்திருந்தனர்.

துவாகரன் மிகவும் அழகாக இருந்தான். கறுப்பு லோங்ஸ், வெள்ளை சேட், அதற்கு மேல் கறுப்புக் கோட் அணிந்து மிகவும்

கம்பீரமாக இருந்தான். கோட் பொக்கற்றில் அழகான மஞ்சள் ரோஜா ஒன்று பூத்திருந்தது. முழுமையாகச் ஷேவ் செய்யப்பட்ட வட்ட முகம். பளபளப்பான சதைப் பிடித்த கன்னங்கள். பணத்தின் செழுமை அவன் உடலெங்கும் தெரிந்தது. கந்தசாமி மாஸ்ரர் அடிக்கடி அவனைப் பார்த்து ரசித்துப் பூரித்தார். சௌமியாக்கேற்ற பொருத்தமான மாப்பிளை என்று அவர் மனம் சொன்னது.

கந்தசாமி தனது அண்ணனுடன் ரெலிபோனில் கதைத்த போது அவர் கந்தசாமியைத் தாறுமாறாக ஏசினார், “உனக்கு நான் கெடுதல் செய்வேனே. என்ரை மூத்தமகன் செய்த வழியிலை துவாரகன் எங்களுக்குச் சொந்தமும் கூட.... அதோடை நல்ல பிள்ளை. நல்ல உழைப்பாளி. இது இரண்டையும் தவிர ஆம்பிளையிட்டை நீ என்னத்தை எதிர்பார்க்கிறாய்.... போன கிழமை ரெலிபோனிலை துவாரகன் எல்லாம் சொன்னவன்.... இப்பேன் வீட்டைத் திருத்திறாய்.. கொழும்பிலை ஒரு கொட்டலை அரேஞ் பண்ணி சட்டுபுட்டென்று விசயத்தை முடிக்கலாம் தானே.. உந்த வீட்டை இப்ப திருத்த எத்தனை இலட்சம் வேணும்.. திருத்தினால் பரவாயில்லை. அங்கை வாழவேணும். சௌமியை அனுப்பிப்போட்டு நீங்கள் உங்கை இருக்க முடியுமே..? மாப்பிளை நல்ல வசதியானவர். உங்களை உங்கை இருக்க விடுவரே..? அதோட உந்த மரண பூமியை விட்டு சனம் வெளிக்கிட எவ்வளவு பாடுபடுது.. நீங்கள் என்னெண்டால் விளையாடுறியள்.. தலையெழுத்தை நம்புற நீ காலத்தை ஏன் பார்க்கிறாய்? காலத்தாலை தலை விதியை மாத்த முடியுமே..? அப்பிடியெண்டால் நீ மார்க்கண்டேயனாய்த்தான் இருக்கவேணும்.”

“சட்டுப்புட்டெண்டு கல்யாணத்தை முடிச்சுக் கொண்டு இஞ்சை வாறதை விட்டுட்டு உந்த மரணபூமிலை இருக்க நினைக்கிறியே..?”

அண்ணனின் பேச்சின் பின் நிலைமையை உணர்ந்த கந்தசாமிதானே நேரில் மாப்பிள்ளையின் பெரியதாயாரின் வீட்டுக்குச் சென்று அவர்களை வரச் சொல்லி இருந்தார். யோசித்துப் பார்த்தால் அண்ணன் சொல்வது நியாயம் எனத் தோன்றியது கந்தசாமிக்கு. கல்யாணத்திற்கு ஒத்துக் கொண்டாயிற்று. இனி அவன் சௌமியாவை எங்கையெண்டாலும் கூட்டிக் கொண்டு போகட்டும். பழைய சம்பிரதாயங்களை தேவைக்கேற்றபடி மாற்ற வேணும். பழைய சம்பிரதாயங்களை கிழடுகட்டைகள் தான் கட்டிப்பிடிச்சுக் கொண்டிருக்கு. தமிழிலை இலக்கணம் கூட காலதேச வர்த்தமானங்களுக்கு இணங்க மாற்றம் பெறுது… நான் மட்டும் இதை கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அண்ணை சொன்னமாதிரி தலைவிதியை நம்புற எனக்கு சடங்குகள் சம்பிரதாயங்களிலை நம்பிக்கை ஏன் வருவான்…? என்று நினைத்தார். கார்த்திகாயினி சௌமியாவை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். முகத்தில் பூசப்பட்ட பவுடர் கண்களால் வழியும் கண்ணீரில் கரைந்தது.

“எத்தனை தரம் பவுடர் பூசியாயிற்று அழாதை…” என்றாள் கார்த்திகாயினி.

“கார்த்தி, கெதிப்படுத்தம்மா.. பொழுதுபட முன்னம் மாப்பிள்ளை பகுதி போகவேணும். அவர் ஊருக்குப் புதிசு.. போக்குவரத்திலை கரைச்சற்படுவினை…” என்று மனோன்மணி அவசரப்படுத்தினாள்.

சௌமியா தகப்பனுடன் தனது காதல் விசயத்தைப் பற்றிக் கதைக்க வேண்டுமென்று நினைத்திருந்தாள். ஆனால் கந்தசாமி தமையனுக்கு ரெலிபோன் பண்ணிவிட்டு நேரே மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று அன்று பின்நேரமே அவர்களை வீட்டுக்கு வரும்படி

சொல்லியிருந்தார். அதனால் சௌமியாவால் அவரோடு கதைக்க முடியவில்லை.

“இவர் இரண்டு மணிபோலத்தான் வந்து நீங்கள் வாறதாய் சொன்னவர். அதாலை சௌமியா வெழுக்கிடக் கொஞ்ச நேரம் எடுக்குது..” மனோன்மணி குழைந்தாள்.

“பரவாயில்லை ஆறுதலாக வரட்டும்…” என்றான் துவாரகன். “நீர் ரீயைக் கொண்டு வந்து குடும்” என்ற கந்தசாமி துவாகரனின் பக்கம் திரும்பி “எனக்கிருக்கிறது அவள் ஒருத்திதான்..”

“தெரியும்” என்றான் துவாகரன். “பாங்கிலை அவளின்ரை பேரிலை எட்டு லட்சம் இருக்கு.. இந்த வீடுவளவு தோட்டக் காணி பத்துப் பரப்பு, பனங்காணி இருபது பரப்பு இருக்கு…”

“என்னுடைய பெறாமகன்ரை பேரிலை பாங்கிலை ஐம்பது இலட்சம் இருக்கு. கனடாவிலை வீடும் இருக்கு…” என்றாள் துவாகரனின் பெரியதாயார்.

“இதெல்லாம் என்னத்துக்கு.. கலியாணத்தை எப்ப வைப்பம் எண்டு கேளுங்கோ பெரியப்பா…” என்றான் துவாகரன்.

“அடுத்த நாளிலை வைப்பம்.. நீங்கள் இஞ்சை வந்து சாப்பிடலாம். சௌமியாவை வேணுமெண்டால் கூட்டிக் கொண்டு போகலாம்” என்றார் கந்தசாமி. துவாகரன் லேசாகச் சிரித்தான். சௌமியா அலங்கார பூஜிதையாக தலையைக் குனிந்தபடி மெதுவாக வந்தாள். அவளின் பின்னால் கார்த்திகாயினி வந்தாள்.

துவாகரனின் கண்கள் அவளின் முகத்தில் சில நிமிடங்கள் மொய்த்தன. அவளின் முகத்தில் அற்புதமான ஒரு வசீகரம் குடி கொண்டிருந்தது. துடிக்கும் கண்களில் கட்டு மீறிய ஒரு தெய்வீகக் கவர்ச்சி இருந்தது. புருவங்கள் நீண்டு வளைந்து இருந்தன.

அவளை அவன் வீடியோ கசற்றில் பார்த்த அன்றே விரும்பி விட்டான். கசற்றில் பார்த்ததை விட மிகவும் அழகாக இருந்தாள். அவனின் கண்கள் முகத்தை விட்டுச் சற்றுக் கீழே இறங்கின. அழகிய நீண்ட கழுத்து… தலையைக் குனிந்தவாறு கதிரையில பிடித்தபடி நின்றாள் சௌமியா.

“இருபிள்ளை…” மாப்பிள்ளையின் பெரியப்பா சொன்னார்.

மெதுவாக கதிரையின் மீது அமர்ந்தாள் சௌமியா.. அவளுக்கு முள்ளின் மேல் இருப்பதைப் போலிருந்தது.

“பொம்பிளையை எங்கையோ நான் கண்ட மாதிரி இருக்கு..ம்.. எங்கையாய் இருக்கும்..” சிந்தித்தார் பெரியவர். அவரின் நினைவுக்கு வரவில்லை.

“பிள்ளை உம்மை நான் இதுக்கு முந்தி கண்ட ஞாபகம் இருக்கு. என்னைத் தெரியுமோ எண்டு பாரும்..”

சௌமியா நிமிர்ந்து பார்த்தாள். சட்டென்று நினைவுக்கு வரவில்லை. சிறிது நேரத்தின் பின் நினைவுக்கு வந்தது.

“பென்சன் அலுவலாய் ஒவ்வீசுக்கு வந்தனீங்கள்…” ‘எட..ட..ட.. எனக்குப் பென்சன் அரியஸ் செய்து தந்தனீா் என்ன? நல்ல அருமையான

பிள்ளை.. உன்னைக் கட்டுறவன் புண்ணியவானாய்த்தான் இருப்பானெண்டு அண்டைக்கே நினைச்சனான். என்ன அடக்கம். என்ன பொறுமை.. கிழவன் எண்டும் பாராமல் ஆற அமர்ந்திருந்து கதைத்த பாங்கு.. நீ சரியான அதிஷ்டக்காரனடா.. காசுபணத்தை தேடலாம். பெண்மைக்குரிய குணங்களைக் காசு கொடுத்து வாங்கேலுமே...''

''பென்சன் அரியஸ் எடுத்த நாள் தொடக்கம் நேற்று வரை சௌமியாவின்ரை புராணத்தைத்தான் பாடிக்கொண்டிருந்தவர். வாறபோற எல்லோருக்கும் உதே கதைதான்'' என்றாள் அவரின் மனைவி.

''எனக்கே நாலைஞ்சுதரம் சொல்லிப்போட்டார்'' என்றான் துவாரகன்.

''எவ்வளவு அன்பாய் கதைச்சுப் பண்பாய் நடத்தினது...இப்படியும் அரசாங்க உத்தியோகத்தர் இருப்பினை எண்டதை அண்டைக்குத்தான் நான் அறிஞ்சனான்... நீ குடுத்து வைச்சனீ..'' என்று துவாகரனைப் பார்த்துக் கூறினார்.

''மாப்பிள்ளை சௌமியாவோடை கதைக்க வேணுமெண்டால் ரூமுக்கை போய்க் கதையுங்கோ'' என்றாள் மனோன்மணி.

வெளிநாட்டில் வாழ்ந்து பழக்கப்பட்ட துவாகரனுக்கு அது பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால் சௌமியா துடித்துப் போனாள். அந்த அறையில் நீண்ட நேரம் மௌனம் நிலவியது.

''சௌமி...''

சௌமியா தலையைக் குனிந்தபடி நின்றாள்.

மீண்டும் "சௌமியா" என்று துவாகரன் அழைத்தான்.

"ம்.."

"உம்மை வீடியோவிலை பார்த்ததில் இருந்து எனக்கு நிம்மதியே இல்லை. விதி, தலையெழுத்து இதெல்லாவற்றையும் நான் நம்புறேல்லை.. உம்மை வீடியோவிலை பார்த்தபிறகு தான் அதிலை நம்பிக்கை ஏற்பட்டது.. அதனால்தான் உமது அப்பா விதி, தலையெழுத்து எண்டெல்லாம் பிரசங்கம் செய்யேக்கை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். முந்தின ஆள் எண்டால் தூக்கி எறிஞ்சு போட்டு போயிருப்பன். இப்ப எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி... ஏனெண்டால் நான் விரும்பின பெண்ணைப் பெரியப்பா வாயாரப் புகழ்கிறார். அப்ப சந்தோசமாய்த்தானே இருக்கும்..." துவாரகன் கலகலப்பாகக் கதைத்துக் கொண்டிருந்தான்.

சௌமியாவுக்கு நெருப்பின் மேல் நிற்பதைப் போலிருந்தது உடலெல்லாம் வியர்த்தது. தலை சுற்றுவது போல் இருந்தது.

"நான் என்ரை விருப்பத்தைப்பற்றித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறன்.... உம்முடைய விருப்பத்தைப் பற்றிக் கேக்கேல்லை.. தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்து உமக்கு பிடிச்சு இருக்கா என்று சொல்லும்..."

அதுவரை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த சௌமியா அவன் தன்னைப் பிடித்திருக்கா என்று கேட்டதும் உசாரானாள். தனது மனதில் உள்ளதைச் சொல்லி காலதாமதமாவது செய்யலாமென நினைத்தாள்.

"என்னைப் பிடிச்சிருக்கா..."

“பிடிக்காவிட்டால் செய்யாமல் விடுவீர்களா…?” மெதுவாகச் சிரித்தாள்.

“ம்..” பலமாகச் சிரித்தான். நான் பெம்பிளைச் சகோதரத்தோடை பிறந்தனான். எனக்கு தங்கச்சி என்றால் உயிர்.. உமது மனதில் உள்ளதைச் சொல்லலாம்…”

சௌமியா மீண்டும் சில கணங்கள் மௌனமாக நின்றாள்.

“சொல்லும்… சொல்லும்..” உற்சாகப்படுத்தினான் துவாகரன்.

“பிறகு குறைநினைக்க மாட்டியளே…”

“இல்லை.. குறை நினைக்க மாட்டன்… வாழ்க்கையிலை கணவன் மனைவியருக்கிடையிலை இரகசியம் எதுகும் இருக்கப்படாது… நீர் சொல்லும்….” தான் ஓர் ஆணழகன். கனடாவில் வாழ்பவன். பணக்காரன். எந்தப் பெண்ணும் விரும்புவாள் என்ற அகம் பாவம் கலந்த ஓர் உணர்வு அவன் மனதில் இருந்தது. அதனால் “உமது மனதில் உள்ளதைச் சொல்லலாம்” என்றான்.

“உண்மையைச் சொல்லுறன் எனக்கு உங்களைப் பிடிக்கேல்லை”

“என்ன….?” அதிர்ச்சியுடன் கேட்ட துவாகரன் “அப்ப ஏன் என்னைப் பெண்பார்க்க வரச் சொன்னீர்கள்…?” என்று கேட்டான்.

“நான் சொல்லேல்லை…”

“உமக்கு விருப்பமில்லாவிட்டால் அப்பாவிடம் சொல்லியிருக்கலாம்தானே..”

“அப்பா என்னைக் கேட்காமலே யாவற்றையும் முடிவு செய்து விட்டார்.”

“உமக்கு திருமணம் பேசுறது தெரிந்தபோது சொல்லியிருக்கலாம் தானே..”

“சொல்லியிருக்கலாம்தான்..” செளமியா மௌனமாக நின்றாள்.

“நான் உம்மை விரும்பினது உண்மைதான். ஆனால் நீர் என்னை விரும்பாதளவில் இத்திருமணம் நடக்கிறது நல்லதில்லை. ஏற்கனவே தங்கையின்ரை விசயத்திலை நாங்கள் பல பாடங்களைப் படிச்சிட்டம். நான் உம்முடைய அப்பாவுக்குச் சொல்லுறன்..”

திரும்பிய துவாகரனை மறித்தாள் செளமியா.

“இப்ப சொல்ல வேண்டாம்..”

“ஏன்..?”

மீண்டும் மௌனம்.

“எங்கடை பெண்களுக்கு பெரும் கட்டுப்பாடுகளெல்லாம் போட்டு வைத்திருக்கிறார்கள். ஒரு பெண் தான் விரும்பின ஆணையோ அல்லது ஒரு ஆண் தான் விரும்பிய ஒரு பெண்ணையோ திருமணம் செய்ய பல தடைகள் இருக்கு. மேலை நாடுகளிலை… இதுகளெல்லாம் இல்லை. சுதந்திரமாக தங்கடை வாழ்க்கையை தாமே தீர்மானிக்கிறார்கள்… அது சரி என்னிலை ஏன் விருப்பமில்லை… அழகில்டலையா…? தகுதியில்லையா..?”

“ஐயோ அப்படியெல்லாம் இல்லை..”

“அப்ப ஏன் விரும்பேல்லை…”

“நான் இன்னொருத்தரை விரும்பீற்ரன்..”

துவாகரன் அதிர்ந்து போனான்.

‘நான் இன்னொருத்தரை விரும்பீற்ரன்..’

‘நான் இன்னொருத்தரை விரும்பீற்ரன்..’

‘நான் இன்னொருத்தரை விரும்பீற்ரன்..’

துவாகரனின் காதுகளில் மீண்டும் மீண்டும் அச்சொற்கள் எதிரொலித்தன.

துவாகரன் தான் ஒரு பெரும் புள்ளியென்று நினைத்திருந்தான். அதனால் சௌமியா தன்னை விரும்புவாள் என்ற நம்பிக்கை அவனின் மனதில் உறுதியாக இருந்தது. அது கலைந்த போது அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மனம் சற்றுத் தடுமாறிய போதும் அவன் அதைச் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்தினான்.

அவனது அடிமனதுள் திடீரென்று ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது. “எனக்கு வாழ்க்கையே வேண்டாம். நான் சாகப்போறன்.. சாகப்போறன்.. ” பல்லைக் கடித்தான் திவாகரன்.

# 14

'ஒரு பெண் ஒரு ஆணை விரும்புவதற்கு உரிமை இருக்கு. அதுக்கேன் சமூகம் கட்டுப்பாடுகளை விதிப்பான். இப்படியான பிற்போக்கான கொள்கைகளாலை தான் எங்கடை சமூகம் பின் தங்கி நிக்குது' துவாகரன் சிந்தித்தான்.

"உங்களை நான் ஏமாற்றிப்போட்டனெண்டு நினைக்கிறியளா..? பெரியப்பா உங்களைப் பற்றி உயர்வாய் அம்மாவுக்குச் சொன்னவர்.... அப்படியான ஒரு நல்லவரின் மனத்தைக் கோணப் பண்ணியதை நினைக்க வேதனையாய் இருக்கு.."

"இதிலை வேதனைப்பட என்ன இருக்கு? ஒவ்வொருவருக்கும் தாம் விரும்பிய துணையைத் தேட உரிமை இருக்கு. அந்த வழியிலை உம்முடைய உரிமையிலை குறுக்கிட நான் யார்..?"

"எல்லாம் சட்டுப்புட்டென்று நடைபெற்றதாலை உங்களைக் கண்டு நிலமையைச் சொல்ல முடியேல்லை... தயவு செய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ..." விம்மினாள் சௌமியா.

"நான் உம்மைக் கல்யாணஞ் செய்து கொண்டு போகலாம் என்ற நினைப்போடைதான் வந்தனான். அது நிறைவேறாது. சரி உமக்காவது கலியாணத்தைச் செய்து வைத்திட்டுப் போவோம்.." சிரித்தான் துவாகரன்.

விரக்தியாகச் சிரித்தாள் சௌமியா.

“ஏன் சிரிக்கிறீர்…”

“உங்கடை அந்த எண்ணமும் நிறைவேறாது…”

“ஏன் அப்பா சம்மதிக்கமாட்டாரோ? நான் சம்மதிக்கப் பண்ணுறன்.”

“அவர் இந்த உலகிலை இருக்கிறார் எண்டு தெரிஞ்சால் தானே நீங்கள் கல்யாணஞ் செய்து வைக்கலாம்…”

“நீர் சொல்லுறது புரியேலை.”

“அவர் இரண்டு வருசத்துக்கு முன்னம் காணாமல் போனவர். இன்றுவரை அவரைப் பற்றிய உருப்படியான செய்தி ஒன்றும் கிடைக்கேல்லை”

“செஞ்சிலுவைச் சங்கத்திலை விசாரித்துப் பார்த்தனீங்களோ….”

“எல்லா இடமும் விசாரிச்சும் பலன் இல்லை.”

“அவர் இருப்பார் என்று நம்புறீரா..?”

“சிலவேளைகளிலை நம்புறன்… ஆழ்ந்து யோசிச்சுப் பார்த்தால்…!” அழுதாள்.

“அழாதையும்… அழாதையும்..” அவனின் குரல் தழுதழுத்தது.

சௌமியா நிமிர்ந்து பார்த்தாள். துவாகரன் கைக்குட்டையால் தனது கண்களைத் துடைத்தான்.

“என்னை நம்பி ஏமாந்திட்டதால் அழுகிறியளா..?”

‘‘இல்லை’’

‘‘பின்னை’’

‘‘எங்கடை நாட்டிலை இப்படி எத்தனையாயிரம் பெண்கள் இருக்கிறார்கள் என்பதை நினைச்சன் அழுகை வந்திட்டுது.’’

‘சா எவ்வளவு இரக்கமான மனம்’ சௌமியா நினைத்தாள்.

‘‘உம்மை மாதிரித்தான் என்ரை தங்கச்சியும்’’ விம்மினான். பின் ‘‘எங்களிலை எட்டு ஆம்பிளையளுக்கு ஒரே ஒரு பெம்பிளைச் சகோதரம். அதாலை செல்லமாய் வளத்தம். எங்களிலை அஞ்சுபேர் வெளிநாட்டுக்கு வந்தாப் பிறகு தங்கச்சியும், அம்மா, அப்பாவும், தம்பிமார் மூண்டு பேரும் இஞ்சை இருந்தவை. அஞ்சுபேரும் உழைச்சு ராஜகுமாரி மாதிரி அவளை வைச்சிருந்தனாங்கள்…’’ துயரம் தாங்க முடியாது சில கணங்கள் பேசாமல் இருந்தான் துவாகரன்.

‘‘அவளுக்கு வயது வந்து விட்டது. நல்ல மாப்பிளையாய்ப் பார்த்துக் கலியாணம் செய்து வைக்க வேணுமெண்டு அம்மா கடிதம் எழுதினா.. ஆசைகளைச் சுமந்து கொண்டு நானும் எனக்கு நேரை இளைய தம்பியும் சொந்த நாட்டுக்கு வந்தம்..’’ பெருமூச்சு விட்டான் துவாகரன்.

எமக்கு தெரிந்த ஒரு டொக்டர் இருந்தார். அவரைத் தங்கைக்குக் கலியாணம் பேசிச் சென்றம்… நாங்கள் கேட்டதும் மறுப்பில்லாமல் பெற்றோர் சம்மதிச்சிட்டினை.. சகோதரர்களுக்கும் ஒரே மகிழ்ச்சி.. சீதனம் அவர்கள் கேட்கவில்லை.. நாங்கள் அள்ளிக் கொடுத்தம்.. கலியாணம்

வெகுவிமர்சையாக நடந்தது.. ம்..'' அவன் பேசவில்லை. தொண்டையை ஏதோ அடைப்பது போல் இருந்தது.

சில நிமிடங்கள் நிசப்தமாகக் கரைந்தன.

‘‘நாலாஞ்சடங்கு முடிந்த இரண்டாம் நாள்.. மச்சான் வேலைக்குப் புறப்பட்டார். தங்கச்சி வாசல் வரை சென்று வழியனுப்பி வைத்தாள்… ஆனால் அவர் ஆஸ்பத்திரிக்குப் போகவில்லை.. யமலோகத்துக்குப் போயிட்டார்…'' விம்மினான் துவாகரன்.

சௌமியா உறைந்து போனாள். இதென்ன கொடுமை… வாழ்க்கையெனும் வசந்தத்துள் நுழைந்தவுடன்… இந்த நிலைமையா.. ‘ஐயோ!' ஓலமிட்டது அவள் மனம்.

‘‘அவருக்கு என்ன நடந்தது..''

வழியிலை திடீரென புக்காரா விமானங்கள் வந்து விட்டன. மச்சான் தெருக்கரையில் நின்ற மரத்துக்குக் கீழை ஒதுங்கியிருக்கிறார். அந்த நேரம் பாதையால் பயணிகளுடன் ஒரு மினிவான் வந்திருக்கு.. விமானப்படையினர் அந்த வானை பயங்கரவாதிகளின் வாகனம் என நினைத்து குண்டு போட்டிருக்கிறார்கள். அந்தக் குண்டு வீச்சிலை மச்சானும் வேறு நாலு பேரும் அந்த இடத்திலேயே பலியாகி விட்டனர்… அவற்றை உடம்பைக் கூட்டித்தான் அள்ளினது..''

‘‘இண்டைக்கி என்ரை தங்கச்சி கனடாவிலை ஒரு அறைக்கை கைம்பெண்ணாய், விதவையாய் இருக்கிறத்தைப் பார்க்க முடியாமல் இருக்கு.. அடிக்கடி அழுவதும்… அலங்காரத்தைக் குலைப்பதும்.. நல்லகாரியங்களுக்கு வெளுக்கிடாமல் இருப்பதும்.. என்னாலை பொறுக்க

முடியேல்லை. எட்டுச் சகோதரங்கள் இருந்தும் எவ்வளவோ சொத்திருந்தும் என்ன பயன்…''

''எல்லாம் அவரவற்றை விதி..'' என்றாள் சௌமியா..

அதைக் கேட்டதும் துவாரகன் உணர்ச்சி வசப்பட்டான்.

''விதி.. அந்த விதி எங்கடை சமூகத்திற்கு மட்டும்தானா..? மேல் நாடுகளில் இந்த விதி இல்லையே ஒவ்வொருவரும் தாம் விரும்பிய வரை விரும்பிய நேரம் திருமணம் செய்கிறார்கள். விருப்பமில்லாவிட்டால் பிரிந்து போகிறார்கள். அப்படிப் பிரிஞ்சு போன எவரும் தனிய வாழேலை. தமக்கு விரும்பிய துணையைத் தேடிப்பிடித்து வாழ்கிறார்கள். இதுக்கு என்ன விதி சொல்லப் போகிறீர்..'' சிரித்தான் துவாகரன்.

சௌமியாவுக்குப் பதில் சொல்லத் தோன்றவில்லை. வெளிநாடுகளில் பெரும் பெரும் பிரமுகர்களே பெண்கள் விசயத்திலை பலவீனமானவர்களாகத்தான் இருக்கிறார்கள்…. அவர்கள் வாழ்க்கையை ரசித்து அனுபவிக்கிறார்கள் என்று திவா சொல்வது நினைவுக்கு வந்தது.

''நான் இஞ்சை வந்த முக்கிய நோக்கம் என்ரை தங்கச்சிக்கு ஒரு மாப்பிளை தேடத்தான்.''

''தேடீற்ரிங்களா..?''

''தேடிக் கொண்டே இருக்கிறேன். நாங்களெல்லாம் படித்தவர்கள், நாகரிகம் அடைந்தவர்கள் என்று சொல்லுற நம்மவருள் ஒரு படிச்சவனை.. ஒரு நாகரிகமடைந்தவனை நான் தேடுகிறன். பொதுவாகப் பெற்றார் வாழ்விழந்த ஒரு பெண்ணை மருமகளாக ஏற்கத்

தயங்குவினை.. ஆனால் தமது பெண் பிள்ளைக்கு அப்பிடியொரு நிலை ஏற்பட்டு விட்டால் தத்துவம் பேசிக் கொண்டு மாப்பிளை தேடுவினை.. நானும் அப்பிடியெண்டு தான் நீர் நினைப்பீர்''

ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பிரச்சினைகளைக் கடவுள் கொடுத்திருக்கிறார் என்று நினைத்தாள் சௌமியா.

''நான்.. இந்தப் போராலை பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணைத்தான் திருமணம் செய்ய வேணுமெண்டு நினைத்தநான். அதுக்கிடையிலை வீடியோவிலை உம்மைக் கண்டுட்டு ஆசைப்பட்டிட்டன். நான் ஒப்புக்குச் சொல்லேல்லை. உண்மையாய்த்தான் சொல்லுறன், உம்முடைய காதலனோடை நீர் எப்பிடிப் பழகியிருந்தாலும் பரவாயில்லை. உம்முடைய காதலன் உயிரோடை இல்லையெண்டால்... நீர் விரும்பினால்.. நான் உம்மைத் திருமணஞ் செய்யத் தயாராக இருக்கிறேன்....''

துவாரகன் அப்பிடிச் சொல்வானெண்டு சௌமியா சிறிதளவும் எதிர்பார்க்கவில்லை. அதனால் தடுமாறிப் போனாள்.

''நான் இப்ப உம்முடைய அப்பாவோடை ஒண்டும் கதைக்கேலை. இரண்டு நாள் அவகாசம் தாறன். யோசிச்சு முடி வைச் சொல்லும்..'' என்றவன், அவளுடைய பதிலை எதிர்பாராது அறையை விட்டு வெளியே சென்றான்.

துவாரகன் அறையை விட்டு வெளியே வந்ததும், கார்த்திகாயினி பரபரப்புடன் உள்ளே சென்றாள். சௌமியா ஆழ்ந்த சிந்தனையுடன் அறையில் இருந்த கதிரையொன்றில் அமர்ந்திருந்தாள்.

“சௌமி..” கார்த்திகாயினி பரிவுடன் அவளின் தோள்களைப் பற்றினாள்.

“மாப்பிளை என்னவாம்..”

திரும்பி சில கணங்கள் கார்த்திகாயினியின் முகத்தைப் பார்த்தாள் சௌமியா.... “எந்த வழியாலும் தப்பேலாது போலை கிடக்கு..” என்றாள்.

“ஏன்”

“அப்பிடி என்ரை விதி..”

“விசர்க்கதை கதையாமல் சொல்லு....”

“நான் என்ரை காதல் பிரச்சினையைச் சொல்லீட்டன்...”

“மடைவேலை பார்த்திட்டாய்... துவாரகன் அப்பாட்டை எல்லாத்தையும் சொல்லீட்டால் அவரை எப்பிடிச் சமாளிப்பாய்..?”

“அவர் சொல்லமாட்டார்...”

“எப்பிடி உனக்குத் தெரியும்...?”

“அவர்தான் சொன்னவர்” என்ற சௌமியா தங்களுக்கிடையே நடந்த உரையாடலைப் பற்றி விபரமாகக் கூறினாள்.

தங்கமான மனிசன் போல கிடக்கு. எனக்கெண்டால் திவாகரன் உயிரோடை இருப்பான் என்ற நம்பிக்கை எள்ளளவும் இல்லை. பிடிச்சு உயிரோடை இருக்கிறவையின்ற விபரங்கள் ஓரளவு பேப்பர்களிலை வருகுது.. ஆனால் திவாவைப் போல ஆரம்பத்திலை பிடிபட்டவையின்ரை

விபரங்களை அறியமுடியாமல் இருக்கு. இதிலை இருந்து நீ என்ன நினைக்கிறாய்…?"

பேசாமல் அவரைக்கட்டிக் கொண்டு கனடாவுக்குப் போ… மனதுக்கும் ஆறுதலாகவும் இருக்கும். பெற்றோருக்கும் மகிழ்ச்சியாய் இருக்கும்.

"பிள்ளை மாப்பிளை பகுதி போகப்போயினையாம். வெளியாலை வா…" என்று மனோன்மணி கூப்பிட்டாள்.

சௌமியா ஹோலுக்கு வந்த போது மாப்பிளை பகுதியினர் புறப்படுவதற்கு ஆயத்தமாக இருந்தனர்.

"சௌமியா… நான் போயிற்றுவாறன்…" என்றான் துவாரகன்.

சௌமியா மெதுவாகத் தலையாட்டியபடி முறுவலித்தாள். அவளது மனம் அவனுக்கு நன்றி சொன்னது. கரங்கள் மனதுக்குள் அவனது காலடியைத் தொட்டு வணங்கியது.

# 15

கந்தசாமிமாஸ்ரர் விடியு முன்பே வீட்டை விட்டு புறப்பட்டு விட்டார். அவர் பொதுவாக தன்னுடைய வேலைகளை இன்னொருவரின் பொறுப்பில் விடுவதில்லை.

மனோன்மணி, அம்மன் கோவில் குருக்களிடம் சென்று விட்டாள். அவளுக்கு சாஸ்திரங்கள் சம்பிரதாயங்களில் அதீத நம்பிக்கை.

சௌமியாவின் சாதகத்தைப் பார்த்து குறை குற்றங்கள் இருப்பின் திருமணத்திற்கு முன்பு அவற்றை நிவர்த்தி செய்து விட வேண்டும் என்ற நினைப்பு.

சௌமியா, தாய் பிளாஸ்கில் ஊற்றி வைத்திருந்த தேனீரை தம்ளரில் வார்த்துக் குடித்துக் கொண்டிருந்த போது வாசலில் யாரோ கூப்பிடும் ஓசை கேட்டது.

தேனீர் தம்ளரை மேசையில் வைத்து விட்டு வெளியே வந்தபோது முற்றத்தில் சரஸ்வதி நின்றாள்.

சரஸ்வதியைக் கண்டதும் மனதில் பல்லாயிரம் எண்ணங்கள் விரைந்து வந்தன.

‘‘என்னைப் பெண்கேட்க வந்திருக்கிறாவோ… இல்லை திவாவைப் பற்றிய செய்தி ஏதாவது கிடைத்திருக்குமோ…’’ அதை நினைக்க அவளின் நெஞ்சு குளிர்ந்தது.

‘‘வாருங்கோ மாமி..’’

சரஸ்வதி ஹோலுக்குள்ளே வந்து நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டாள். ‘‘அப்பா எங்கே?’’

‘‘அப்பா வெளியிலை போட்டார்.’’

‘‘அப்ப அம்மா..’’

‘‘அம்மாவும் இல்லை… திவாவைப் பற்றி ஏதாவது அறிஞ்சனீங்களே….?’’ ஆவலுடன் கேட்டாள்.

சிறிது நேரம் மௌனம். “அப்பாவும் அம்மாவும் இல்லாததும் நல்லதுதான். நான் இப்ப பெண் கேட்டு வரேல்லையம்மா… உன்னைக் கல்யாணம் செய்யச் சொல்லத்தான் வந்தனான்… இவ்வளவு காலமும் ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கை..” விம்மினாள். சிறிது நேரத்தின் பின் சொன்னாள், “அவன் இருக்கின்றான் எண்டு தான் நினைச்சுக் கொண்டு இருந்தனான்… இப்ப எனக்கு நம்பிக்கை இல்லை… ஏனெண்டால் இவ்வளவு நாளும் விசாரிக்கேக்க ஒரு மாதம் கழிச்சு வாங்கோ… பத்து நாள்க் கழிச்சு வாங்கோ எண்டவை.. நேற்றைக்குப் போக நீங்கள் ஏனம்மா வந்து அலைக்கழியுறியள் செய்தி ஏதாவது கிடைத்தால் நாங்களே வந்து சொல்லுறம் எண்டினை. இதிலை இருந்து என்ன புரியுது?” நிறுத்தி விட்டு சௌமியாவின் முகத்தைப் பார்த்தாள்.

சௌமியா எதுவும் பேசவில்லை. அவள் பொதுவாகப் பேசுவது குறைவு. இந்த நிலைமையிலை என்ன பேசுவது, வார்த்தைகள் வராமையால் சிறிது தடுமாறினாள்.

“இனிமேல் இஞ்சை வராதையுங்கோ எண்டால்… திவாகரன் செத்துப் போனான் எண்டு தானே அர்த்தம்..?”

“மாமி” அலறினாள் சௌமியா.

கண்களால் வழிந்த கண்ணீரை தனது சேலைத் தலைப்பால் துடைத்தாள் சரஸ்வதி.

“இரண்டு வருஷமாச்சு… இந்த இரண்டு வருஷத்திலை திவா எங்கை இருக்கிறான் எண்டு தேடிக் கண்டு பிடிக்கேலாதே… பொதுவாய் இப்ப எல்லா வசதிகளோடையும் இருக்கிறவை. ரெலிபோனிலையே

கதைச்சுக் காரியத்தை பார்த்திடலாம்… அதை விட்டுட்டு பிறகு வாங்கோ.. பேந்து வாங்கோ. என்பதும்… அடுத்தடுத்துப் போனால்… நீங்கள் வராதையுங்கோ நாங்கள் வந்து சொல்லுறம் என்பதும்.. சீ.. என்ன வேலை..'' அலுத்துக் கொண்டாள்.

''சிலசமயம் அவர் உயிரோடை இருந்தால்..''

எனக்கெண்டால் நம்பிக்கையிலை… வாழவேண்டிய வயதிலை, வாழாவெட்டியாய் இருக்கிறது எனக்குப் பிடிக்கேல்லை… அதோடை பெடியனுக்கு எல்லா விசயமும் தெரிந்தும் ஏற்கிறதாய் சொல்லுறான்.. இப்பிடி இனி ஒரு சந்தர்ப்பம் வருமே..? எனக்கும் வாழ்க்கை வெறுத்துப் போய்ச்சு… இவ்வளவு நாளும் திவா உயிரோடை இருப்பான் எண்ட நம்பிக்கையிலை இந்த நாட்டிலை இருந்தன்… இப்ப எனக்கு அந்த நம்பிக்கை இல்லை… அதாலை பிள்ளைகளோடை போயிடலாமென்று நினைக்கிறன்.''

''நீங்களும் போயிட்டால் திவாவைப் பற்றிய செய்திகள் ஏதாவது வந்தால்…''

''இப்ப உடனை போக முடியுமே…? இஞ்சை பாஸ் அது இதெண்டு ஆறுமாசம் ஒருவரிசமெண்டு நிக்கத்தானே வேணும்.. கொழும்புக்குப் போன கனபேர் வருஷக் கணக்காய் நிக்கினைதானே.. அதாலை கொழும்பிலை இருந்தும் விசாரிக்கலாம் தானே…''

சௌமியாவுக்கு பேசத் தோன்றவில்லை. எதைச் சொன்னாலும் சரஸ்வதி, அதற்குக் காரணம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

“வலிய வாற சீதேவியைக் காலாலை உதைக்காதை செளமியா.. ஒரு பெண்ணின்ரை துயரம் பெண்ணுக்குத்தான் தெரியும். அதைவிட பெண்ணைப் பெத்தவளுக்குத்தான் ஒரு பெண் வாழாவெட்டியாய் இருக்கிறத்தின்ரை துன்ப துயரங்கள் தெரியும். தமிழினம் பாழாய்ப் போன பழைய சம்பிரதாயங்களிலை இருந்து விடுபட்டு புதிய விதிகளைச் சுமக்க வேண்டிய காலமம்மா இது. அண்டைக்கு சகுந்தலாவின்ரை கணவனைப் பற்றி விசாரிச்சுச் சொன்னவைக்கு திவாவைப் பற்றி ஏன் விசாரிக்கேலாது… நாங்கள் வந்த கையோடை அதுகும் எங்களுக்குத் தெரியாமை பிடிச்சவங்கள்… எக்கச்சக்கமாய் அடிச்சு.. அந்த இடத்திலை” விம்மினாள்.

செளமியா பரிதாபத்துடன் அவளைப் பார்த்தாள். அவளின் நெஞ்சில் இருந்த சிறிய நம்பிக்கையொளியும் அணைத்து விட்டது. அடுத்து அவள் முடிவு எடுக்க வேண்டும்… என்ன முடிவை எடுப்பது.

திவாகரனை நினைத்த மனதால் இன்னொருவரை நினைக்க முடியாது. அப்படி நினைப்பது பாவம், துரோகம் என்று அவள் நினைக்கவில்லை. அவனை மறக்க அவளால் முடியவில்லை.

“செளமியா.. நீ அவனோடு பழகிய விதம் எனக்குத் தெரியும்.. அவன்தான் உன்ரை உயிர் எண்டும் எனக்குத் தெரியும். ஆனால் என்ன செய்வது?”

செளமியா அழுதாள். விம்மி விம்மி அழுதாள். விக்கி விக்கி அழுதாள்.

“அழாதையம்மா.... எல்லாத்தையும் ஒரு கெட்ட கனவாய் நினை... என்னாலை ஆறுதல் சொல்ல முடியேல்லை.... உனக்கு சமாதானம் சொல்ல முடியேல்லை.... ஆனால் கல்யாணம் செய் எண்டு மட்டும் சொல்ல முடியும்.. அதோடை சொல்ல எனக்கு உரிமையும் இருக்கு..”

“முதல் முதலாய் உன்னுடைய வீட்டை வந்திருக்கிறன் குடிக்கிறத்துக்கு ஏதாவதுதாம்மா..”

சௌமியா உள்ளே சென்று பிளாஸ்கில் இருந்த ரீயை ஊற்றிக் கொண்டு வந்து சரஸ்வதியிடம் நீட்டினாள்.

சரஸ்வதி அதை வாங்கிக் குடித்தாள். ‘இது தான் சௌமியாவின் கையால் வாங்கிக் குடிக்கும் கடைசி ரீ என்பதை நினைக்க அவளுக்கு வேதனையாக இருந்தது.

தேனீரைக் குடித்துவிட்டு அருகில் இருந்த மேசையில் டம்ளரை வைத்த சரஸ்வதி, “போயிட்டு வாறனம்மா” என்றவாறு சௌமியாவைக் கட்டித் தழுவி நெற்றியில் முத்தமிட்டாள். கண்கள் கலங்கி கண்ணீர் வழிந்தோடியது அதைத் துடைக்க மனமின்றி சௌமியாவையே பார்த்துக் கொண்டு நின்றாள். திவாவின் பிரிவை விட சௌமியாவின் பிரிவே அவளுக்கு கூடியவேதனையைக் கொடுத்தது.

சரஸ்வதி சென்று வெகுநேரமாகியும் சௌமியா இருந்த இடத்தை விட்டு நகரவில்லை எல்லோரும் திருமணம் செய்யச் சொல்லி சொல்கிறார்கள். எப்படிச் செய்வது.. திவாவும் ஒருமுறை இப்படிச் சொன்னவர்தானே...

மீசாலையில் உள்ள புத்தூர்சந்திக்கு ஆமி வந்த அன்று, காலை நகரே அல்லோல கல்லோலப்பட்டது.

சௌமியாவின் குடும்பம் வரணியில் உள்ள ஒரு பிள்ளையார் கோவிலில் தஞ்சமடைந்தது. இவர்கள் வரமுன்பே திவாகரனின் குடும்பத்தாரும் பிள்ளையார் கோவிலில் இருந்தார்கள்.

சௌமியாவை இருக்கச் சொல்லி விட்டு கந்தசாமிமாஸ்ரரும் மனோன்மணியும் தாங்கள் தங்கியிருந்த வீட்டுக்குப் பொருட்கள் எடுக்கச் சென்றனர். சௌமியாவைக் கண்ட திவாகரன் எழுந்து அவளருகே வந்தான்.

‘‘இப்படி ஆமி வருவானென்று ஆர் கண்டது. நாங்கள் முன்னுக்கே வன்னிக்குப் போயிருக்கலாம்’’ என்றான் திவாகரன். அவன் குரல் தழுதழுத்தது.

‘‘நான் மூண்டு மாதமாய் சொன்னனான் வன்னிக்கு போவோமெண்டு… அப்பா கேட்கேல்லை…’’ சௌமியாவின் விழிகளில் நீர் திரண்டு உருண்டது.

‘‘நாங்கள் இரண்டு பேருமெண்டாலும் போயிருக்கலாம். ..’’

‘‘நான் எத்தனை தரம் சொன்னனான்… அப்பாவை வந்து கேளுங்கோ எண்டு. கலியாணம் செய்திருந்தாலாவது இரண்டு பேரும் போயிருக்கலாம்.’’

‘‘மட்டுவில் அம்மன் கோவிலடியில் கனபொடியங்களை பிடிச்சு வைச்சிருக்கிறாங்களாம்..’’

“உங்களுக்கு ஆர் சொன்னது...?”

“அங்கை பாரும், அந்த மனிசி அழுது கொண்டிருக்கு. மட்டுவில் அம்மன் கோவிலுக்கைதானாம் இருந்தவை. ஆமி வர ஓடியந்திட்டினையாம்.... மனிசியின்ரை இரண்டு மகன்மாரையும் காணேல்லையாம்... பிந்தி வந்தவை சொன்னவையாம், இரண்டு பேரையும் பிடிச்சுக் கண்ணைக் கட்டி வைச்சிருக்கிறாங்களெண்டு”

“எனக்கெண்டால் பயமாய்க் கிடக்கு” நடுங்கினாள் சௌமியா.

“சனம் சொல்லுறதுகளைக் கேட்க பயமாய்த்தான் கிடக்கு. என்ன செய்ய முடியும்.”

“இனி வன்னிப் பக்கம் போகேலாதே....”

“எப்படிப் போறது. கிளாலில் கடலுக்கை நேவி வந்திட்டுது. கரையிலை நிண்ட சனங்களைப் போகச் சொல்லிட்டாங்களாம்..”

“அப்ப, இப்ப என்ன செய்யிறது?”

“உம்முடைய ஆட்களெல்லாம் இருக்கினைதானே... பிறகென்னத்துக்குப் பயம்... என்னையும் காப்பாற்றச் சொல்லும்” சிரித்தான் திவாகரன்.

“உங்களுக்கு எந்த நேரமும் பகிடியும், சிரிப்பும்தான்” சிணுங்கினாள் சௌமியா.

“இதிலை என்ன பகிடி இருக்கு. தற்சமயம் எங்கடை சனங்களின்ரை உயிர்களெல்லாம் கடவுளின்ரை கையிலைதானே

இருக்கு.. அதுசரி தற்செயலாய் இஞ்சை ஆமி வந்து என்னைச் சுட்டுப்போட்டால் என்ன செய்வீர்…''

''போங்கோ… பகிடிக்கும் இப்படியான கதையள் கதைக்கக் கூடாது.''

''பகிடியில்லை… தற்செயலாய் அப்படியொண்டு நடந்திட்டால் என்ன செய்வீர்..?'' மீண்டும் கேட்டான் திவாகரன்.

சௌமியா பதில் சொல்லவில்லை. அவளின் கண்கள் கலங்கி கண்ணீர் நிரம்பி உடைப்பெடுப்பதற்குத் தயாராகத் தேங்கி நின்றது. மெல்லத் தலையைக் குனிந்து கொண்டாள்.

''ஒரு அன்பான காதலன் பாசமுள்ள காதலியிடம் இதைக்கேக்கிறதில்லை என்ன தப்பு இருக்கு… தற்செயலாய் நான் செத்துப்போனால்..'' என்று நிறுத்திவிட்டுச் சிரித்தான். பின் சொன்னான், நீர் வாழ்க்கையை இன்னும் அனுபவிக்கவேயில்லை… அன்பாகப் பேசினம், பண்பாகப் பழகினம்… எந்த வேளையிலும் எல்லை மீறினதேயில்லை. அத்துடன் உமது பெற்றோருக்கும் எமது காதல் விசயம் தெரியாது. எனவே நீர் இன்னொருவனைத் திருமணம் செய்யவேணும்…''

''சேர்.. சேர்…'' வாசலில் யாரோ கூப்பிடும் ஒலியைத் தொடர்ந்து நாய் குரைக்கும் சத்தம் கேட்டது.

# 16

சௌமியா கண்களைத் துடைத்துவிட்டு வெளியே வந்தாள். முற்றத்தில் ரவீந்திரன் சைக்கிளுடன் நின்றான். அவனை உள்ளே வரவிடாது சௌமியாவின் நாய் குரைத்துக்த் தடுத்துக் கொண்டிருந்தது.

“எவ்வளவு நேரமாய்க் கூப்பிட்டனான். என்ன செய்து கொண்டிருந்தனீர்..?”

“ஒண்டுமில்லை…” தடுமாறினாள் சௌமியா.

“முதல்லிலை நாயைக் கலையும். கடிச்சுக் குதறுறன் எண்டு நிக்குது…”

சௌமியா படியால் இறங்கி வந்து நாயைப் பிடித்தாள்.

“உள்ளுக்குப் போங்கோ….”

ரவீந்திரன் சைக்கிளை நிறுத்தி விட்டுச், சென்று ஹோலில் உள்ள நாற்காலியில் அமர்ந்தான்.

சௌமியா அவனுக்கு எதிரே இருந்த கதிரையோடு சாய்ந்தபடி நின்றாள்.

“எல்லாம் கேள்விப்பட்டனான். இனி யோசிக்கிறத்துக்கு ஒன்றுமில்லை. வந்த சம்பந்தத்தைச் செய்யச் சொல்லத்தான் நான் வந்தனான்… என்னைப் பொறுத்தமட்டிலை உமக்கு வந்த துன்பங்களுக்கெல்லாம் காரணகர்த்தா நான்தான். நான் என்ன செய்யிறது சௌமி. திவா உன்னை தீவிரமாய் நேசித்தான். உன்னோடை போய்க் கதைக்கச் சொல்லி பழிகிடந்தான். அவன்ரை நிலமையைப் பார்த்துப் பரிதாபப்பட்டுத்தான் நான் வந்து கதைத்தனான்.”

“அதுக்கென்ன செய்யிறது. என்ரை விதி அப்படி… ஊரிலை ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இருக்கினை. இவரையா கைது செய்ய வேணும்… என்ரை விதி…” விம்மினாள்.

“விதி எண்டு மட்டும் சொல்லாதையும்… உந்த விதியிலை எனக்கெண்டால் நம்பிக்கையில்லை…. நல்லது நடந்தாலும் விதி, கெட்டது நடந்தாலும் விதி….. முற்போக்காய் ஏதாவது செய்தாலும் விதி… நீர் காதலிச்சது விதி. திவாவை கைது செய்ததும் விதி. இதெல்லாம் விதியெண்டால் துவாரனை கல்யாணம் செய்வதும் விதியெண்டு ஏற்றால் என்ன…?”

சௌமியாவின் துயரம் கட்டு மீறி அழுகையாக வெடித்தது. அவன் கேட்பதிலும் நியாயம் இருப்பது போன்ற ஒரு பிரமை. திவாவும் இதைத் தானே அடிக்கடி சொல்லுறவர்.

“சௌமி நான் அறிந்தவரை பெண்களைப் புனிதமானவர்களாய், தெய்வங்களாய் இப்படி எண்ணற்ற விதமாய் இலக்கியங்களில் எழுதுவதும், அதைப் போற்றுவதும் தமிழினம் ஒன்றுதான். ஆனால் நடைமுறைப்படுத்துவதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு பெண்களை உயர்வாக பேசுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவாய் அவர்களைக் கொடுமைப்படுத்திறம்.. அதை விடப் பெண்களே பெண்களைக் கொடுமைப்படுத்திறம்… இங்கு தான் இருக்கு.. பொதுவாய் சீதனம் ஆர் பேசுறது தாய்மார் தானே… ஒரு வாழ்விழந்த பெண்ணை ஏற்க மறுக்கிறது. யார்…? தாய்மார்தானே…” திவாகரன் சொன்னது அவளின் நெஞ்சில் ஒலித்தது.

“கார்த்திகாயினிதான் எனக்கு இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றையும் சொன்னவள். நீர் சாகப்போறதாய்ச் சொன்னீராம்... இந்த நாட்டிலை காதலிச்சவை எத்தினை பேர் கலியாணஞ் கட்டியிருக்கினை. இல்லை செத்திருக்கினை. ஆயிரத்திலை, லட்சத்திலை ஒன்றுதான் அப்படி நடந்திருக்கும்” உணர்ச்சி மிகுதியால் அவனின் வார்த்தைகள் தடுமாறின.

“உலகெங்கும் போராட்டங்கள் நடந்தது இயற்கைதான்... ஏன் எமது தாய் நாடான இந்தியாவில் வெள்ளையருக்கெதிரான போராட்டம் நடக்கேக்கை காந்தி வாழ்விழந்த, பாதிக்கப்பட்ட பெண்களைத் திருமணம் செய்ய இளைஞர் முன்வரவேண்டும் என்று கூறவில்லையா...? ஆனால் இஞ்சை கடவுளே நேரில் வந்து சொன்னாலும் பக்தர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இஞ்சை இருக்கிறவையெல்லாம் உதட்டுக்கும், உள்ளத்துக்கும் இடையிலை திரையைப் போட்டு மறைத்துக் கொண்டு, பெரியபுனிதர்களாகக் காட்டிக் கொள்கிறார்கள்” என்றவன் வீட்டை உற்றுப் பார்த்தான்.

“அப்பா எவ்வளவு நம்பிக்கையோடை கலியாணத்துக்கு திட்டமிட்டுறார்...”

“நான் சாகத்திட்டமிடுறன்....”

பட்டென்று கோபமாக முறைத்துப் பார்த்தான் ரவீந்திரன். கணநேரம்தான் கோபம் அவன் மனத்துள் எழுந்தது. பின் சிரித்தான்.

“என்ன சிரிப்பு...”

“காதல் தோல்வியில் சாவதெண்டதால் நானும் சாகவேணும்...”

சௌமியா அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள். அவனைத் தெரிந்தநாளிலிருந்து சாமியார் வேடமும், தத்துவமும் பேசிக் கொண்டு திரிந்த ரவீந்திரன், காதலித்து தோல்வி அடைந்தவனா? அவளால் நம்ப முடியவில்லை.

“நான் காதலித்ததை யாரும் நம்பமாட்டார்கள்தான்….. எந்த ஒரு உயிருக்கும் காதல் உணர்வு வரத்தான் செய்யும்…. என்ரை சாமியார் வேசமும், தத்துவமும் காதல் தோல்வியால் தான் ஏற்பட்டது….”

“எனக்குத் தெரிந்தவரை ஏ-எல் படிக்கேக்கையே நீங்கள் சாமியார்தானே…”

“அதற்கு முன்பே காதலில் தோல்வி அடைந்திருக்கலாம்தானே…”

“அப்படியா….? யார் அந்தப் பெண்….?”

சிரித்தான் ரவீந்திரன், “அது ரகசியம். சொல்லக் கூடாதது” என்று நிறுத்தியவன் சில நிமிடயோசினையின் பின் சொன்னான், “நான் விரும்பியது அந்தப் பெண்ணுக்குத் தெரியுமோ… தெரியாதோ…”

“விசித்திரமான காதல்…”

“இல்லை உண்மையான காதல்…. நான் அந்தப் பெண்ணைச் சுற்றிச் சுற்றி வந்தன், வம்புக்கிழுத்தன்… பகிடி விட்டன். ஆனால் அவள் விரும்பவில்லை… நான் வண்டில்க் காரன்ரை மகன்… எனக்குக் கீழை நான்கு பெண் சகோதரங்கள் இருக்கு… இந்த நிலைமையிலை அவள் என்னை விரும்புவாளா…? எல்லாம் கனவாய்ப் போய்ச்சு… இப்ப எனக்குக் கலியாணஞ் செய்ய விருப்பமில்லாவிட்டாலும், நான்

கலியாணஞ் செய்ய வேண்டிய நிலையிலை இருக்கிறன்… ஏனெண்டால் என்ரை தங்கச்சிமார் கரைசேரவேணும்… அப்பாவும் அம்மாவும் எவ்வளவு கூட விக்கலாமோ… அவ்வளவு கூடுதலாக விற்பதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கினை…. அன்பு பாசம் காதலெல்லாம் இப்ப பணத்துக்குத்தான்…''

சௌமியா அவன் யாரை விரும்பியிருப்பான் என்ற எண்ணத்திலேயே இருந்தாள். முன்பு பல முறை ரவீந்திரன் அவளுக்குப் பகிடி விட்டிருக்கிறான். அதனால் சில பிரச்சினைகளும் பாடசாலையில் ஏற்பட்டது.

''நீங்கள் ஆரைக் காதலித்ததெண்டு சொல்ல மாட்டீர்களா..?''

''இப்ப சொல்லமாட்டன்… ஒரு காலத்திலை சொல்லுறன்.''

''இப்ப உங்களுக்குக் கலியாணம் பேசீனையா…?''

''ம்… பெம்பிளையை எனக்கெண்டால் பிடிக்கேல்லை… சரியான கறுப்பு… அதோடை குண்டு.. பார்க்கவே அருவருப்பாயிருந்தது. பத்து இலட்சம் இனாம் எண்டவுடனை அப்பாவும் அம்மாவும் சம்மதிச்சிட்டினை…''

''அப்ப என்ன செய்யப் போறியள்.''

''என்ன செய்யிறது, கலியாணம் கட்டுறதுதான்.. நான் காதலித்த பெண் இல்லையெண்டாப்பிறகு… பெற்றோருக்காவும்.. என்ரை சகோதரங்களின்ரை நல்வாழ்வுக்காகவும்.. நான் எந்தப் பெண்ணையும்

கட்டத் தயாராக இருக்கிறன்.... ஒரு விதவையைக் கூட... ஆனால் காசு கூடத்தரவேணும்...'' சிரித்தான்.

“உண்மையாகச் சொல்கிறீர்களா?''

“சத்தியமாகச் சொல்லுறன்.... போரிலை பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணை... ஒரு சதமும் இல்லாமல் கட்ட நான் தயாராக இருக்கிறன்.... என்ரை ஒரு தங்கச்சிக்காவது ஒருவன் வாழ்வளிக்க வேணும்.''

“அப்படியா... நான் கேட்கிறன் எண்டு குறை நினையாதைங்கோ''

“பயப்படாமல் கேள்...''

“துவாரகன்ரை தங்கச்சி கலியாணங் கட்டி நாலாம் நாள் புரிசன் விமானத் தாக்குதலிலை செத்துப்போனாராம்... அவளை நீங்கள் கட்டினால்... துவாரகன் உங்கடை தங்கச்சியை கட்டுவார்.. ஐம்பது லட்சம் ரூபாய் காசும் தாறதெண்டவர்...'' என்றாள்.

“நீ.. தப்பப் பார்க்கிறியா..?'' நான் பார்த்த பெம்பிளையே கட்டுறன்.. நீர் துவாகரனைக் கட்டும்.''

“பிளீஸ் ரவி, எனக்கு இந்தக் கரைச்சலிலை இருந்து மீள வழி வகுத்துத் தாரும்....?''

“மாட்டன்... நீ கட்டாயம் வாழவேணும்... ஏணெண்டால் நான்.. ஏதோ நினைத்தவனாக... வேண்டாம் மிச்சத்தை நான் சொல்ல

விரும்பேல்லை... நீ அவனைக்கட்டி சுகமாக வாழவேணும்.... அதுதான் என்ரை விருப்பம்.''

அப்போது மோட்டார் சைக்கிள் வாசலில் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. சௌமியா வெளியே வந்தாள். மனோன்மணியும் துவாகரனும் உள்ளே வந்து கொண்டிருந்தனர்....

''மாமியும் மருமோனும் வரீனை..'' ரவி சிரித்தான்.

சௌமியா முறைத்துப் பார்த்தாள். ரவி கண்சிமிட்டிச் சிரித்தான்.

''நக்கலா..''

''இல்லை உண்மை....''

''போங்கோ....'' பல்லைக் கடித்தாள் சௌமியா.

முற்றத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு சௌமியாவைப் பார்த்தான் துவாரகன்.

''உள்ளுக்கு வாங்கோ...''

''சரியாய்க் களைச்சுப்போனன். காலமை தண்ணி கூடக்குடியாமல் போனது... பிளாஸ்கிலை சுடுதண்ணி இருக்கே..?'' கேட்டாள் மனோன்மணி.

''ஓம்''

துவாரகன் வெளியே சப்பாத்தை கழற்றி விட்டு கால்மேசுடன் ஹோலுக்குள் வந்து அமர்ந்தான்.

“இவரைத் தெரியுமா..?” ரவியைச் சுட்டிக் காட்டிக் கேட்டாள் சௌமியா.

துவாரகன், ரவியை நிமிர்ந்து பார்த்தான். திடகாத்திரமான உருவம். நல்ல நிறம். அழகான முகத்தில் அலங்கோலமான தாடி, மொத்தத்தில் தேவதாஸ் பட நாகேஸ்வராவைப் போலிருந்தான்.

“தெரியாது..”

“இவர் முக்கியமான ஆள்மட்டுமில்லை... உங்களுக்குத் தேவையானவரும் கூட....”

துவாரகன் ரவீந்திரனைப் பார்த்தான். ரவீந்திரன் கலவரத்துடன் சிரமப்பட்டு துவாரகனைப் பார்த்துச் சிரித்தான். எனினும் அவனுக்கு நெருப்பின் மேல் இருப்பதைப் போலிருந்தது. துவாரகனும் பதிலுக்குச் சிரித்தான். எனினும் மனதில் நினைவுகள் முளைவிட்டன. ஒப்புக்கு “ஹலோ” என்றான் ரவீந்திரன். நாற்காலியில் எழுந்து நின்று துவாகரனை நோக்கி தனது வலது கையை நீட்டினான்.

# 17

சௌமியாவின் பேச்சு துவாரகனைச் சற்றுக்குழப்பியது. ‘முக்கியமான ஆள்மட்டுமில்லை உங்களுக்கு மிகவும் தேவையானவரும் கூட’

“இப்பத்தான் இவரை நான் கண்டனான்... எனக்குத் தேவையானவரா..? புரியவில்லை...”

“திவாவின்ரை நண்பர்... என்ரை இனத்தவர்” என்று நிறுத்திய சௌமியா சற்றுத் தடுமாறினாள்.

ரவிந்தீரன் அந்த இடத்தை விட்டு நழுவ முயற்ச்சித்தான். “உங்களை ஏன் குழப்புவான்... நான் போயிட்டு வாறன்” அவர்களின் பதிலை எதிர்பாராது எழுந்து நடந்தான்.

“நில்லுங்கோ...”

“நான் பிறகு... வந்து... வாறன்” ரவி தடுமாறினான்.

“இருங்கோ ரீயும் குடிக்கேல்லை”

“இருமன் கதைப்பம்....” என்றான் துவாரகன்.

ரவிக்கு தர்மசங்கடமாக இருந்தது. மெதுவாக நடந்து வந்து, நாற்காலியில் அமர்ந்தான்.

“இவர் மிஸ்ரர் ரவீந்திரன். யாழ்ப்பாண யூனிவசிற்றியிலை பீ.எஸ்.சி பைனல் இயர் ஸ்ருடன்ட்” என்று துவாரகனுக்கு ரவியை அறிமுகப்படுத்தினாள்.

“அப்படியா..” என்ற துவாரகன் எழுந்து சென்று ரவியின் கையைப் பற்றிக் குலுக்கினான்.

“சௌமீ.. ரீ ஊற்றி வைத்திருக்கிறன்… கொண்டு போய்க்குடு…” என்று குசினியில் இருந்து சொன்னாள் மனோன்மணி.

சௌமியா ரீ எடுப்பதற்காக குசினிக்குள் சென்றாள்.

ஏதாவது கதைக்க வேண்டுமென்பதற்காக “கனடா வாழ்க்கை எப்படி…?” என்று கேட்டான் ரவி.

“பரவாயில்லை… கடுமையாய் உழைத்தால்தான் பணம் சம்பாதிக்கலாம்…..” சிரித்தான் துவாரகன்.

“அப்ப எங்கையும் உழைக்கிறவனுக்குத்தான் காலம்…”

“ரீயை எடுங்கோ…”

“தாங்ஸ்” என்றான் துவாரகன்.

“நன்றி” என்றான் ரவீந்திரன்.

“உங்களுடைய தங்கச்சிக்கு மாப்பிளை தேடிற்றியளா…”

இல்லையென்று தலையசைத்தான் துவாரகன்.

“இஞ்சை ஒரு மாப்பிளை இருக்கிறார்….” என்று பேச்சை சௌமியா ஆரம்பிக்க, ரவி குறுக்கிட்டு “நான் போயிட்டுவாறன்” என்று சொல்லி விட்டு நகர்ந்தான்.

இதைச் செளமியா எதிர் பார்க்கவில்லை. அதனால் சற்றுத் தடுமாறினாள்.

“ஏன் அவசரப்படுறியள்.?”

“உங்களுக்கு இடைஞ்சலாக நான் ஏன் இருப்பான்....? பிறகு சந்திப்பம்..” என்று சொல்லியபடி நடந்து கொண்டிருந்தான் ரவி.

“இவர் ஏன் செளமி அவசரப்படுகிறார்....”

“அவரைப் பற்றித்தான் உங்களுக்கு நான் சொல்ல வெளிக்கிட்டனான்... அதை உணர்ந்துதான் போறார்...”

“சரி அவர் போகட்டும் நீர் சொல்லும்...”

“அவரைக் கேட்டுப்பாருங்கோ உங்கடை தங்கச்சியைச் செய்வார்...”

“என்ன..?” ஆச்சரியப்பட்டான்.

“அவருக்கு நான்கு பொம்பிளைச் சகோதரங்கள் அதோடை காதலிலை தோல்வி...” என்று செளமியா கூறவும்,

“இஞ்சை எல்லாருக்கும் தோல்விதானே...?”

“தற்போதைய சூழ்நிலை அப்படி. இஞ்சத்தை மரபை மாற்றேலாது...”

“சரி மிச்சத்தைச் சொல்லும்..”

“அவர் உங்கடை தங்கச்சியைக் கட்டவேணுமெண்டால் நீங்கள் அவற்றை தங்கச்சியைக் கட்டவேணும்…”

“எனக்கு கலியாணம் கட்டாமல் இன்னும் இரண்டு தம்பிமார் இருக்கினை. அவர்களிலை ஒருத்தனைக் கட்டச் சொல்லலாம்….”

நிமிர்ந்து அவளைப் பார்த்தாள் சௌமியா. இரண்டு சோடி விழிகளும் ஒருகணம் சந்தித்துக் கொண்டன, “ஏன் வாழ்க்கையை வீணாக அழிக்கப் பார்க்கிறீர்…. தவறென்று தெரிந்தும் தவறு செய்பவர்களையும், மீண்டும் மீண்டும் தவறு செய்பவர்களையும் தான் மன்னிக்கக் கூடாது. அந்த வகையிலை நீர் தவறு செய்ததாய் நான் நினைக்கேல்லை. திவாகரனோடை அன்பாகப் பழகி இருப்பீர். அது குற்றமும் இல்லை நான் மன்னிக்க வேண்டிய தேவையும் இல்லை” என்றான் துவாரகன்.

சௌமியாவுக்குப் பேசத்தோன்றவில்லை. எதையும் நினைக்க அவளால் முடியவில்லை.

“நீர் ஒண்டும் யோசிக்காதையும். எல்லாம் கடவுள் விட்டபடி நடக்கட்டும்..”

“நான் ஒன்று கேட்கட்டா….” சௌமியா கேட்டாள்.

“ம்..”

“அவர் இருக்கிறாரோ எண்டு விசாரிச்சால்….”

“நல்லாய் விசாரியும்.... ம்... ஒண்டு செய்யலாம் இரண்டு பேரும் கொழும்பிலை போய் விசாரிப்பம். அவர் இல்லையெண்டால் அப்படியே போவம்”

“அப்பாவுக்கு என்ன சொல்ல ப் போறியள்...”

“நான் சமாளிக்கிறன்... அது சரி ரவீந்திரனோடை நான் கதைக்கலாமே..”

“ஓம் போய்க் கதையுங்கோ...”

“சௌமீ.. ரவீந்திரன் சம்மதிச்சிட்டால்... என்ரை உயிரைவேணுமெண்டாலும் குடுப்பன்...” அவனின் கண்கள் கலங்கின.

“நான் ரவியைக் கண்டு கொண்டு பின்நேரம் வாறன்...” என்று கூறி துவாரகன் புறப்பட்டான்.

“சரி..” என்றாள் சௌமியா. அவனுடைய பண்பான பேச்சு, கனிவான நடை, மென்மையான மனது அத்தனையும் அவளைக் கவர்ந்தது. அவளை அறியாமலே ஒரு பாசம் இதயத்துள் ஊறியது.

மாலை ஐந்து மணியிருக்கும் காலை தொடக்கம் அலைந்து திரிந்து விட்டு அப்போதுதான் கந்தசாமி மாஸ்ரர் வீட்டுக்கு வந்திருந்தார்.

“சாப்பாட்டைப் போடட்டே...” மனோன்மணி கேட்டாள்.

“வேண்டாம் தேத்தண்ணியிருந்தால் தாரும்.”

“சாப்பிடாமல்…” அவள் வார்த்தையை முடிக்குமுன் கந்தசாமி மாஸ்ரர் சொன்னார், “துவாரகன்ரை வீட்டை போனான். கரைச்சல் படுத்திச்சினை சாப்பிட்டுட்டன்…”

“அப்ப…” தயங்கினாள்.

“பாங்கிலை கிடக்கிற காசை எடுத்து சௌமிக்கு கொஞ்ச நகை செய்தாலென்ன…”

“எல்லா நகையும் இருக்குத்தானே”

“காப்பு ஒரு நாலுசோடி முத்துச் சங்கிலி…” என்று மனோன்மணி சொல்லிக் கொண்டிருக்கும் போது துவாரகன் மோட்டார் சைக்கிளில் வந்தான்.

“மருமோன் வாறார்… தேத்தண்ணியைக் கொண்டு வாரும்…”

ஹோலில் நாற்காலியில் வந்து அமர்ந்த துவாரகன் சில நிமிடங்கள் பேசாமல் இருந்தான். அவனுக்கு எப்படிக் கதையைத் தொடங்குவதென்றே தெரியவில்லை.

“நான் மத்தியானம் வீட்டை வந்தனான் உங்களைக் காணேல்லை” என்று கேட்டார் கந்தசாமி.

அவன் சௌமியாவுடன் கதைத்து விட்டு ரவீந்திரனின் வீட்டுக்குச் சென்று, ரவியோடு கதைத்துக் கொண்டு இருந்ததில் நேரம் சென்று விட்டது.

ரவீந்திரன் சில நிபந்தனைகளுடன் துவாரகனின் தங்கையைத் திருமணம் செய்யச் சம்மதித்து விட்டான். அது துவாகரனுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

“நான் அப்பாவுக்கு ரெலிபோன் பண்ண யாழ்ப்பாணம் போனனான்” என்று பொய் சொன்னான் துவாரகன்.

“கல்யாணப் பிரச்சினை கதைத்தனீரே…”

“ஓம்… ஓம்…” என்று தடுமாறிய துவாரகனின் மனதில் திட்டம் ஒன்று உருவானது.

“தங்கச்சிக்கும் மாப்பிளை ஒண்டு பார்த்திட்டன். மாப்பிளையின்ரை தங்கச்சிமார் இரண்டு பேரையும் என்னுடைய தம்பிமாருக்கு நிட்சயித்திட்டன். அதனாலை அப்பா, அம்மா, தங்கச்சி, தம்பிமார் இருவரையும் வரச்சொல்லியிருக்கிறன்… அதாலை எனது திருமணத்தை அவை வந்தாப் பிறகு செய்யலாமெண்டிருக்கிறன்….” என்றான் துவாரகன்.

“அவை எப்ப வருவினை…?”

“எப்படியும் இரண்டு கிழமைக்கை வந்திடுவினை….”

“பெற்றோர் முன்னிலையில் செய்யிறது தான் நல்லது….. அது சரி தங்கச்சிக்கும், தம்பிமாருக்கும் எங்கை பார்த்தனீங்கள்….”

“உங்கடை ஊரிலை தான்.. வண்டில்க்கார சண்முகத்தாற்ரை மோன் ரவி…”

“எட எங்கடை சண்முகத்தின்ரை ரவியே... தங்கமான பிள்ளை. சௌமியாவுக்கு அவனைச் செய்ய விரும்பினனான்... தங்கைமாருக்குக் காசு கேட்டதாலை குழம்பிப் போய்ச்சு... பெட்டையளும் தங்க விக்கிரகம் மாதிரி... நல்ல குடும்பம்..” என்றார் கந்தசாமி.

“பெரியதொரு அதிஷ்டம் தான். ரவி நல்ல முற்போக்கான கொள்கை உள்ளவர்.... அந்தக் குடும்பத்திலை கலியாணஞ் செய்ய நாங்கள் குடுத்து வைத்திருக்க வேண்டும்....”

அப்பொழுது தேனீர் தட்டுடன் வந்தாள் மனோன்மணி.

“கேட்டீரே புதினத்தை. எங்கடை ரவிக்கெல்லே மாப்பிளையின்ரை தங்கச்சியாரைச் செய்யப் போயினையாம். அவன்ரை தங்கச்சிமார் இரண்டு பேரையும் மாப்பிளையின்ரை தம்பிமார் செய்யப் போயினையாம்... அதோடை மாப்பிளையின்ரை குடும்பமும் இஞ்சை வரப்போகுதாம். அவை வந்தாப் பிறகு தானாம் கலியாணம்...” மூச்சு விடாமல் சொன்னார் கந்தசாமி மாஸ்ரர்.

“என்ன ரவியை உங்கடை தங்கச்சிக்குச் செய்யப்போறியளோ...? ரவி நல்ல பிள்ளை. சௌமியாவுக்கு செய்ய நாங்கள் விரும்பினாங்கள். ஆனால் எங்களிட்டை அவ்வளவு சீதனமில்லை. ரவி குடும்பப் பொறுப்புமிக்க பிள்ளை. தன்னுடைய சகோதரிகளுக்காகவே வாழுறான். சௌமியாவுக்கு ரவியைச் செய்ய முடியேல்லை என்று எனக்கு சரியான கவலை. பிள்ளையார் இப்ப எங்கடை குடும்பத்துக்கையே அவனைச் சேர்த்திட்டார்” என்றாள் மனோன்மணி.

# 18

“எப்ப உங்கடை அப்பாவும் அம்மாவும் வரீனை....” என்று கேட்டாள் சௌமியா.

துவாரகன் பதில் சொல்லாம்ச் சிரித்தான். மீண்டும் கேட்டாள் சௌமியா, “எப்பவரீனை...”

“அவை எங்கை வரீனை..?”

“என்ன...? அப்ப அப்பாவுக்குச் சொன்னியளே...?”

உமக்காகத்தான் சொன்னனான். நீர் திவாவைப் பற்றி இன்னுமொருக்கால் விசாரிக்க வேணுமென்றீர். அப்ப கலியாணத்தைத் தள்ளி வைக்க வேண்டுமென்றால் ஏதாவது சொல்லத்தானே வேணும்..”

சௌமியா எதுவும் பேசவில்லை.

“அப்பா கேட்டதுக்காக அந்தநேரம் அவரைச் சமாளிப்பதற்காகத்தான் அப்பிடிச் சொன்னனான்... ரவியின் குடும்பத்தோடை கதைச்சு எல்லாம் முற்றாக்கிப் போட்டன். இரவைக்கி யாழ்ப்பாணத்திலை தங்கி நின்று ரெலிபோன் எடுத்து அப்பாவோடை கதைக்கப் போறன்”

“அவை சம்மதிப்பினையா...?

“தங்கையின் கலியாணம் தான் எங்களுக்கு முக்கியம். அவளுக்காக எதையும் செய்யத் தயாராக இருப்பினை... உண்மையிலை ரவி ஒரு அருமையான மனிசன். தன்ரை வரலாறு எல்லாத்தையும்

சொன்னார். இந்தநிலைக்கு வாறத்துக்கு அவர் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார். அதோடை அவர் சீதனம் அது இது என்று எதையும் கேட்கவில்லை. தன்ரை நாலு தங்கைமாற்ரை நல்வாழ்வுதான் தன்ரை வாழ்வெண்டு சொன்னார்.. கிட்டத்தட்ட என்ரை நிலைமையிலை தான் அவரும் இருந்தர். ஒரு வழியிலை நீர்தான் என்ரை தங்கைக்கு வாழ்வளிச்சனீர்…''

''என்ன…? நானோ..?'' அதிசயித்தாள் சௌமியா.

''பின்னை.. நீர் தானே ரவியைப் பற்றி எனக்குச் சொன்னனீர். அதோடை ரவிக்கு அவளைச் செய்யும்படி சொன்னதும் நீர் தான் எண்டு ரவி சொன்னார்… தங்கச்சின்ரை பிரச்சினை தீந்திட்டால்… நான் காலம் பூராகவும் இப்படியே இருக்கத்தயார்…'' சிரித்தான்.

துவாரகனது வார்த்தைகள் சௌமியாவுக்கு ஆறுதலைக் கொடுத்தன. திருமணத்தைத் தள்ளிப் போட்டால் திவாவைப் பற்றி அறிய முடியும் என்று நம்பினாள்.

''என்னுடைய கனடா நண்பன் ஒருவர் கொழும்பிலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திலை வேலை செய்கிறார். அவர் கனடா நாட்டுப் பிரஜை. அவருக்கு நான் ரெலிபோன் பண்ணித் திவாவின்ரை பிரச்சினையைச் சொல்லுறன். அவர் கட்டாயம் அறிஞ்சு சொல்லுவார். தற்செயலாய்த் திவா உயிரோடை இருந்தால்… நான் மிகவும் சந்தோஷப்படுவன்…''

சௌமியா வியப்புடன் துவாரகனை நிமிர்ந்து பார்த்தாள். அவனின் கண்கள் ஊறி இருந்தன. அவனது வார்த்தைகள் அவளைக்கிறங்க வைத்தன... "கடவுளே இப்படியும் ஒரு மனிதன் வாழ்கிறானா...?"

"அன்புக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். நான் என்னுடைய தங்கையிலை வைத்த அன்பு, ரவீந்திரன் தன் தங்கைமாரில் வைத்துள்ள அன்பு எத்தகையது. அதைப் போலை தானே.. நீர் திவாவின் மீது வைத்த அன்பும். அதைவிட நீர் ரவியிடம், என்னை ரவியினுடைய தங்கச்சியைச் செய்யச் சொல்லி சொன்னீராம்.." என்று நிறுத்தினான் துவாரகன்.

சில கணங்கள் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. பின் துவாரகன் சொன்னான், "நீர் உள்ள நிலையிலை அப்படித்தான் சொல்வீர்... ஆனால் அதுக்கு ரவி என்ன சொன்னார் தெரியுமே...?"

"என்ன...?" என்று கேட்பதைப் போல பார்த்தாள் சௌமியா.

"நீர் திவாகரனைவிரும்பேல்லையாம். அவனுடைய கரைச்சல் தாங்கமுடியாமல் தானாம் தான் உம்மிடம் வந்து கதைத்தது. அதனால் சௌமியாவுக்கு வாழ்வளிக்கும்படி கட்டாயப்படுத்திக் கேட்டார். அது ஒரு நிபந்தனையாயக் கூட இருந்தது... ஆனால் என்னைப் பொறுத்த மட்டிலை திவாவோடை நீர் சேர்வதைத்தான் நான் விரும்புறன்... அவன் உயிரோடை இருக்க வேணுமெண்டு கடவுளைப் பிராத்திக்கிறன்."

துவாரகன் விடைபெற்றுச் சென்று வெகுநேரமாகியும் சௌமியாவின் மனம் அமைதி கொள்ளாது தவித்தது. அவளால் துவாரகனைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

சாதாரணமாக ஒரு பெண் ஆணுடன் கதைத்தாலே கேவலமாகக் கதைக்கும் சமூகத்தின் மத்தியில் துவாரகன் எவ்வளவு உயர்ந்திருக்கிறார். அவளை அறியாமல் அவள் இதயம் துவாரகனுக்காகப் பரிதாபப்பட்டது. அந்தப் பரிதாபம் அவன் மீது உயர்ந்த மதிப்பை ஏற்படுத்தியது.

இரண்டு வாரங்கள் பறந்து சென்று விட்டன. துவாரகனின் குடும்பம் கொழும்புக்கு வந்து கல்யாணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தது. துவாரகனின் பெற்றோருக்கு யாழ்ப்பாணம் வரவிருப்பமில்லை. என்னதான் நிலமை சீரடைந்து விட்டது என்று சொன்னாலும் அதில் நம்பிக்கை வரவில்லை. எமக்கென்று உங்கு யார் இருக்கிறார்கள். எல்லோரையும் கூட்டிக் கொண்டு கொழும்புக்குவா, கொழும்பிலேயே கலியாணத்தை முடிக்கலாம் என்று துவாரகனுக்குக் ரெலிபோனில் கூறிவிட்டு அங்கிருந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார் அவனது அப்பா.

துவாரகனுக்கு தனது தந்தையின் குணம் தெரியும். அவர் சொன்னால் சொன்னது தான் மாறமாட்டார். அத்துடன் குடும்பத்தினரை இங்கு வரவழைத்து துன்பப்படவும் துவாரகன் விரும்பவில்லை.

வீடு திருத்தி, சகல ஆயத்தங்களும் செய்து முடித்த கந்தசாமி மாஸ்ரருக்கு கவலையாகத்தான் இருந்தது. என்றாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கொழும்புக்குச் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினார்.

அன்று தான் கனடா நண்பனிடமிருந்து துவாரகனுக்குக் கடிதம் வந்தது. அதை வாசித்ததும் அவனுக்குத் துக்கமாக இருந்தது.

கடிதத்துடன் சௌமியாவின் வீட்டுக்கு வந்தான் துவாரகன். அவள் அம்மன் கோவிலுக்குச் சென்றிருந்தாள். அதனால் அவனும் அம்மன் கோவிலுக்குச் சென்றான்.

பூசை முடிந்துவிட்டது. சௌமியா குருக்களுடன் கதைத்துக் கொண்டிருந்தாள். துவாரகனைக் கண்டதும் இருவரும் வெளியே வந்தனர்.

“நான் உங்கள் இரண்டு பேருக்கும் பூக்கட்டிப் பார்த்தனான் தம்பி… அம்மனே செய்யச் சொல்லீட்டா…”

“சரி..ஒரு அர்ச்சனை செய்ய முடியுமா…?” என்று கேட்டான் துவாரகன்.

“ஓ செய்யலாமே..”

பொக்கற்றில் இருந்து நூறு ரூபாத்தாள் ஒன்றை எடுத்துக் கொடுத்தான் துவாரகன். அதைப் பெற்றுக் கொண்ட குருக்கள் அர்ச்சனை செய்வதற்காகக் கோவிலுள் சென்றார்.

அர்ச்சனை முடிந்ததும் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு வெளியே வந்தான் துவாரகன். பின்னால் சௌமியா வந்தாள்.

மோட்டார் சைக்கில் ஸ்ராட் பண்ணிவிட்டு “ஏறுமன்” என்றான் துவாரகன்.

சௌமியா மறுபேச்சின்றி மோட்டார் சைக்கிளில் ஏறினாள்.

அதைத் துவாரகன் எதிர்பார்க்கவில்லை. அவன் ஒப்புக்காகத்தான் அப்படிக் கேட்டான்.

இருவரும் மோட்டார் சைக்கிளில் வந்து இறங்குவதைப் பூரிப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள் மனோன்மணி. அவளின் வயிறு குளிர்ந்தது.

இருவரும் ஹோலுக்குள் வரும் வரை எதுவும் பேசவில்லை.

‘‘கனடாப் பிரண்டின்ரை கடிதம் வந்திருக்கு....’’

‘‘என்ன?’’ துடித்தாள் சௌமியா.

சிறிது நேரம் பேசாமல் இருந்த துவாரகன் பொக்கற்றுக்குள்ளால் கடிதத்தை எடுத்துக் கொடுத்து விட்டுச் சொன்னான், ‘‘தான் எல்லா இடமும் விசாரித்துப் போட்டாராம். அப்பிடி ஒராள் இல்லையாம்....’

சௌமியாவின் இதயத்துள் ஆயிரம் வெடிகுண்டுகள் வெடித்தன. ‘‘திவா... திவா... என் அன்பே...’’ என்று ஓலமிட்டது அவள் மனம்.

‘‘என்ன செய்வது... எல்லாம் விதி.’’

விம்மினாள் கண்களால் கண்ணீர் பெருகியது. தலை சுற்றியது.

‘‘சௌமீ...’’ ஆதரவாக அழைத்தான். ‘‘ஏற்கனவேஇது தெரியும் தானே... எனக்கு அவசரமில்லை... இன்னும் ஒருக்கால் விசாரிச்சுப் பார்ப்பம்...’’

சௌமியா எதுவும் பேச முடியாதவளாக செயலற்றுப் போனாள்.

“நீர் ஆறுதலாக யோசித்து முடிவெடும்... வாற ஞாயிற்றுக் கிழமை ப்ளைட்டுக்கு டேட் தந்திருக்கிறார்கள். முடிந்தால் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் சந்திப்பம்...” எழுந்தான் துவாரகன்.

“கொஞ்சம் இருங்கோ.. ரீ எடுத்தாறன்....”

“வேண்டாம் உங்களுக்கேன் சிரமம்”

சௌமியா நிமிர்ந்து துவாரகனைப் பார்த்தாள். கண்களில் தேங்கி நின்ற கண்ணீர் உடைப்பெடுத்து கன்னங்களால் வடிந்தது.

சௌமியாவைப் பார்க்க துவாரகனுக்குப் பாவமாக இருந்தது. “சரி தாரும்” என்று கூறி விட்டு நாற்காலியில் அமர்ந்தான்.

சௌமியா முகத்தைத் துடைத்து விட்டுக் குசினிக்குள் சென்றாள்.

துவாரகன் பெருமூச்சு விட்டான். மனதில் அலையலையாக துயரம் பெருகியது. “மென்மையான ஒரு ரோஜா மலரை கடவுள் கசக்கிப் பிழிந்து விட்டார். இப்படி எத்தனை பேர் நாட்டில் இருப்பார்கள் என்று நினைத்தான்.

சௌமியா கொண்டு வந்த தேனீரை வாங்கி உறிஞ்சினான் துவாரகன். “நீரா தயாரித்தது. நல்லாயிருக்கு”

சௌமியா பதில் சொல்லாமல்ச் சிரித்தாள்.

“நான் போயிட்டு வாறன். நன்றாக யோசித்து முடிவெடும். கனடாவில் வந்திருந்தும் தேடலாம்....”

ஒருகணம் அவனை நிமிர்ந்து பார்த்த சௌமியா ‘சரி’ என்றாள்.

# 19

சௌமியாவால் முடிவெடுக்க முடியவில்லை. கந்தசாமி மாஸ்ரர் புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தார். இனத்தவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அவர் பயணம் சொல்லிவிட்டார். அத்துடன் வீட்டைப் பராமரிப்பதற்கான ஒழுங்குகளையும் செய்து விட்டார். கொண்டு செல்ல வேண்டிய பொருட்கள் யாவும் பொதியாகக் கட்டப்பட்டு விட்டன. விடிந்தால் பயணம். ஊரவர்களும் நண்பர்களும், இனத்தவர்களும் வீட்டுக்கு வந்து குசலம் விசாரித்துச் சென்று கொண்டிருந்தனர். அன்று திருமணவிழாபோல் வீடு அமளிப்பட்டது. வீட்டுக்கு வந்தவர்களை கந்தசாமி மாஸ்ரரும், மனைவியும், கார்த்திகாயினியும் வரவேற்றுச் சிற்றூண்டி வகைகள் கொடுத்துக் கொண்டிருந்தனர். சௌமியா மனதில்த் தேங்கி நின்ற துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் வந்தவர்களுடன் ஒப்புக்குக் கதைத்துக் கொண்டிருந்தாள்.

சுமார் இரண்டு மணிக்கு வீடு அமைதியானது. சௌமியா தனது அறையில் இருந்தாள். கார்த்திகாயினி அங்கே வந்தாள். “நான் போகட்டா…”

“ஏன் அவசரப்படுகிறாய்”

“நேற்று வந்தனான் போயிட்டு காலமை வாறன்…”

விம்மினாள் சௌமியா. அவளை எரிச்சலுடன் பார்த்தாள் கார்த்திகாயினி. திவாகரனை இனி எதிர்பார்க்க முடியாது. அப்படியிருக்க வந்த வாழ்க்கையை ஏற்க மறுக்கும் சௌமியாவை அவளுக்குப் பிடிக்கவில்லை, "உன்ரை கதையைக் கேட்டுக் கேட்டு எனக்கு விசர் பிடிச்சிட்டுது. திவாகரன் இனி திரும்பி வரமாட்டான். ஒன்றில் துவாரகனை நீ ஏற்க வேணும். இல்லாட்டில் அவனைச் செய்யமாட்டனெண்டு அப்பாவுக்குச் சொல்ல வேணும். இதை விட்டுட்டு எந்த நேரமும் அழுதால்... நான் அப்பாட்டைச் சொல்லட்டே.."

"வேண்டாம் அவர் ஒரு நம்பிக்கையிலை எல்லாவற்றையும் செய்திட்டார். அதைக் குழப்ப நான் விரும்பேல்லை..."

"அப்ப துவாரகனைக் கட்டு"

சௌமியா பதில் சொல்லாமல் அழுதாள். கார்த்திகாயினி எரிச்சலோடு அவளைப் பார்த்தாள், "அழாதை இப்பவும் காலங்கடக்கேல்லை. துவாரகனுக்கு எல்லாம் தெரியும். அவர் மிகவும் நல்லவர் பாசத்தைப் புரிந்து கொண்டவர். குறை நினைக்க மாட்டார்"

"அவர் நல்லவர். கொழும்பிலை தேடிப்பார்க்கலாமென்றவர். அதோடை திவா உயிரோடு திரும்பி வந்தால் தான் தான் அதிகம் மகிழ்வன் என்றவர். அதாலை அவற்ரை உதவியை நாடலாமென்று நான் நினைக்கிறன்"

"சரி... பிறகேன் அழுறாய். அஞ்சு வரிசமாய் அழுதது காணும். இப்படி நான் சொல்றேன் என்பதற்காக நான் நான் இரக்கமில்லாதவள்

என்று நீ நினைக்காதை. ஒரு பெண்ணுக்குக் கட்டாயம் ஓர் ஆண் துணை தேவை.''

''தற்செயலாக திவா இல்லையென்றால் நான் என்ன செய்யிறது'' சௌமி கேட்டாள்.

''திரும்பி வரப்போறியே..''

சௌமியா கார்த்திகாயினியைப் பார்த்தாள். அவள் பேசாமல் சில கணங்கள் நின்றாள். பின், ''நான் போயிட்டுவாறன்'' என்று சொல்லி விட்டு நகர்ந்தாள்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. யாழ்ப்பாண புகையிரத நிலையம் கொழும்புக்குச் செல்லும் பிரயாணிகளால் நிரம்பி வழிந்தது. பயணிப்பவர்களை விட கூட வந்தோரே அதிகமாகக் காணப்பட்டனர்.

பாதுகாப்புப் படையினர் பயணிகளின் பொதிகளைச் சோதித்துக் கொண்டிருந்தனர். துவாரகனும் ரவீந்திரனது குடும்பத்தினரும் வெகு நேரமாக சௌமியாவின் குடும்பத்தினரை எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''சௌமியா வரமாட்டாளோ…?'' துவாரகன் ரவியைக் கேட்டான்.

''வருவினை வராட்டில் மாஸ்ரர் வந்து சொல்லியிருப்பார். வழியிலை செக்கிங் கூட'' என்றான் ரவி.

ரவி அப்பிடிச் சொன்ன போதும் அவனின் மனம் அதை ஏற்கவில்லை. பாதுகாப்புப் படையினர் பரிசோதித்த பொதிகளை உள்ளே கொண்டு சென்று வைத்து விட்டு வெளியே வந்தான் துவாரகன்.

வெளியே நின்ற ரவி, சௌமியாவின் குடும்பத்தினர் வந்த ஓட்டோவிலிருந்து பொதிகளை இறக்கி வைத்து விட்டு அவர்கள் வந்த செய்தியைக் கூற வந்தான். அதற்கு முன் துவாரகன் அவர்களைக் கண்டு விட்டான்.

துவாரகன் சௌமியா நிற்குமிடத்திற்கு வந்த போது பாதுகாப்புப் படை வீரன் விடவில்லை. சோதனை முடிந்த பின் பயணிகள் வெளியே செல்லவோ உறவினர்களுடன் கதைக்கவோ முடியாது.

கந்தசாமி மாஸ்ரரும், மனைவியும், கார்த்திகாயினியும் சௌமியாவுடன் வந்தனர். அவர்களின் பின்னால் சரஸ்வதி வந்தாள்.

சௌமியாவைக் கண்ட சரஸ்வதியின் முகம் துயரத்தால் துவண்டது. கண்களிலிருந்து கண்ணீர் வழிய சௌமியாவைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டாள்.

‘‘சௌமீ என்ரை குஞ்சு.. நீ நல்லாய் இருக்க வேணும்..’’ விம்மினாள்.

கார்த்திகாயினி துயரத்துடன் சௌமியாவின் அருகில் வந்தாள், ‘‘சௌமீ நடந்தவற்றைக் கெட்ட கனவாய் நினைத்து மறந்திடு. திவாவை இனி எதிர்பார்க்கேலாது. கொழும்பில் அடுத்தவாரம் திருமணம் நடக்குமென்று அப்பா சொன்னவர். நான் நேற்றுத் துவாரகனைச் சந்தித்துக் கதைத்தனான். ஒரு வருடம் பொறுத்திருக்கச் சொன்னனான். அவர் ஒரு வருடமில்லை அதற்கு மேலும் பொறுத்திருக்க முடியும். அதை விட சௌமிக்கு விருப்பமில்லாவிட்டால் கனடாவில் இருக்கட்டும். இஞ்சை இருக்கிறதை விட அங்கை இருக்கிறது மனதிற்கு ஆறுதல் என்றவர். எனவே நீ பயப்பிடாமலப் போ’’ என்றாள்.

இரவு வருவதாகக் கூறி விட்டுச் சென்ற கார்த்திகாயினி துவாரகனைச் சந்தித்து கதைத்து விட்டு வர நேரமாகியதால் சௌமியாவைச் சந்திக்க வரவில்லை.

“நீ துவாரகனைச் சந்திக்கச் சென்றதாலை தான் வரேல்லை என்று இப்பதான் எனக்குத் தெரியும். நான் உன்னைத் தவறாய் நினைச்சிட்டன். என்னை மன்னிச்சுக் கொள்ளடி..” சௌமியா விம்மினாள்.

“சீ… உனக்கு எப்பவும் அழுகைதான்… கண்ணைத் துடையடி” ஏசினாள் கார்த்திகாயினி.

“நான் போயிட்டு வாறனம்மா..” என்றார் கந்தசாமி. அவரின் கண்களில் நீர் அரும்பியது. அவரால் பேச முடியவில்லை.

“காயிதம் போடு சௌமி” என்றாள் கார்த்திகாயினி.

“காயிதம் போடமாட்டன்… உன்னையும் கனடாவுக்கு கூப்பிடுவன்…”

“துவாரகனிடம் முன்பே சொல்லியிருந்தால் கார்த்திகாயினியையும் கூட்டிக் கொண்டு போயிருக்கலாம்…” என்றான் ரவி.

சௌமியா சரஸ்வதியின் கண்களால் வழியும் கண்ணீரைத் தனது சேலைத் தலைப்பால் துடைத்து விட்டு, “அழாதையுங்கோ மாமி” என்றாள்.

அதைக் கேட்டதும் சரஸ்வதியின் துயரம் கட்டு மீறியது.

“வாங்கோ வாங்கோ கூப்பிடினை” என்ற கந்தசாமி பொதிகளைத் தூக்கினார்.

பொதிகள் யாவும் சோதித்த பின் பாதுகாப்புப் படையினர் பிரயாணிகளை பஸ்சில் ஏற்றினர். ரவீந்திரன் கந்தசாமி மாஸ்ரரின் அருகில் சென்று அமர்ந்து கொண்டான். துவாரகன் இருந்த ஆசனத்துக்கருகில் ஓர் இடம் வெற்றிடமாக இருந்தது. சௌமியா தயங்கினாள்.

‘‘மாப்பிளைக்குப் பக்கத்தில் இரு பிள்ளை’’ என்றார் கந்தசாமி.

பஸ் புறப்பட்டது. பஸ் ஜன்னலூடாகப் பயணிகள் கையை அசைத்து உறவினர்களுக்குப் போய் வருகிறோமென விடை பெற்றனர்.

சரஸ்வதி புறப்பட்டுச் செல்லும் பஸ்சை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள். அவளுக்குத் தலை சுற்றியது. பார்க்குமிடமெல்லாம் மங்கலாகத் தெரிந்தது.

சௌமியா வெளியே பார்த்தாள். மயங்கிச் சாய்ந்த சரஸ்வதியை மக்கள் தூக்கிச் சென்றனர்.

பஸ் வேகமாக ஓடத் தொடங்கியது. அதுவரையும் சௌமியாவின் மனதுள் பொங்கிப் பிரவாகித்த துயரம் திடீரென்று அழுகையாக வெடித்தது. விம்மி விம்மி அழுதாள்.

‘‘ஊரை விட்டு விட்டுப் போறதைப் பற்றிச் சௌமி கவலைப்பட்டவள். அவளுக்கு வெளிநாட்டுக்குப் போக விருப்பமில்லை’’ என்ற கந்தசாமி தனது ஆசனத்தால் எழுந்து சௌமியாவுக்கு அருகில் வந்து, ‘‘என்னம்மா குழந்தைப் பிள்ளை மாதிரி அழுகிறாய்…’’ என்றார்.

கைக்குட்டையால் முகத்தை மறைத்தபடி அழுது கொண்டிருந்தாள் சௌமியா. துவாரகன் அவள் அழுவதைத் துயரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவனால் அவளுக்கு ஆறுதல் கூற முடியவில்லை. பஸ் வேகமாகச் சென்று கொண்டிருந்தது.